ஸ்ரீ:

கடவுள் துணை

காளிதாஸ கவிச்சக்ரவர்த்தி

செய்த

# அபிஜ்ஞான சாகுந்தலம்

*Right Honourable*

ஸ்ரீமாந் V. S. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் அவர்கள்

P.C., C.H. LL. D.

நல்லுதவிகொண்டு

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சியாளர்

ஸேதுஸம்ஸ்தானமஹாவித்வான்

பாஷா கவிசேகரர் ரா. இராகவையங்காரால்

தமிழின் மொழிபெயர்க்கப்பெற்று

மயிலாப்பூர்

நியாய ஸஞ்சிகா முத்திராலயத்தில்

(*Law Journal Press*)

பதிப்பிக்கலாயிற்று

1938.

PRINTED BY R. NARAYANASWAMI IYER
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE, MADRAS.
1938

# அபிஜ்ஞானம்

## துஷ்யந்த மகாராஜன் கணையாழி.




விஷமம் க்ருதமேதந்ந
யதாவஹாயபோத்ருஷ
ஷ்ருத்யாயநகாமெ
ஊர்மிஹாவஸீக ॥

ஐயர்க்குயர் புதல்வர்க்குள
நம்பப்புரி யமயம்
கையிற்கிடை யாமல்விப
ரீதஞ்செய்த திதுவே.

## ஜர்மன் மஹாகவி
## கேதே ஆசிரியர் புகழ்ந்தவாறு

*வயங்கிருது வின்மலர் முதிர்ந்தபொழு தின்கனி*
*வளங்களெவை யால்ந மிதயம்*
*மகிழ்ந்தது கவர்ந்தது விருந்தமர வெம்பசி*
*மறந்ததெனை லாம வையெலாம்*
*நயந்தரு விசும்பொடுல கும்பலுயர் வும்மொரு*
*நறுஞ்சொலி னடங்க விழையின்*
*நலந்திகழ் சகுந்தலைநி னன்பெய ரியம்புவல்*
*நவின்றவுட னுமு முதுமே.*

பகவான் பதஞ்சலி இந்நாடகநூலாரைக் கிரந்திகர் (ஸ்ரீ பாணிநிஸூத்ர மஹாபாஷ்யம் 3-1-26) என்றெடுத்தாளுதலான் அறியப்படு மென்பர். தொல்காப்பியனாரும் இந்நாடக நூலையே

"சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே"

(தொல். பொருள். செய்யுள். 243)

என்பதனாற் புலனென்று பதஞ்சலிமுனிவர் கருதியவாறே ஆளுதல் காணலாம். புலன் நூற்குப்பெயராதல் தெளிந்தது. தமிழில் இவ்வழக்கம் பண்டுதொட்டுண்டாயதென்பது நாடக முறையையே நூலென்னும் பெயரான் முன்னோர் வழங்கிக் காட்டலான் அறியலாம். சிலப்பதிகார உரைப்பாயிரத்து அடியார்க்கு நல்லார்

"ஆயிர நரம்பிற்று......வைத்தனர் புலவர்'

என நூலுள்ளுங் கூறினார்' என உரைத்தலான் இவ்வுண்மை அறியப்படும். தொல்காப்பியனார்

'நாடகவழக்கினு முலகியல் வழக்கினும்" (தொல். அகத். 53)

என்பதனாலும்

'நாட்டிய மரபின்' (தொல். அகத். 53)

என்பதனாலும் லோகதர்மீ, நாட்யதர்மீ எனப் பரதமுனி கூறியவாறே கூறி இக்கலைக்கு வடமொழிப் பெயர்களையே எடுத்தாளுதலால், இந்நூன்முறை ஆரியத்திற்கும் தமிழிற்கும் பெரும்பாலும் ஒத்ததென்றே துணியப்படும். ஆரியக்கூத்தி னும் தமிழ்க்கூத்தினுங் கதை ஒன்றாய் வருதல்

"ஆரியந் தமிழெனுஞ் சீர்நட மிரண்டினும்
ஆதிக் கதையை யவற்றிற் கொப்பச்
சேதித் திடுவது சேதமென் றாகும்"

என அடியார்க்கு நல்லார் காட்டிய மேற்கோட் சூத்திரத் தால் அறியலாம். "நாடகம்-கதைதழுவிவருங் கூத்து" என்பர். "நாடகவழக்கினும்" என்னுமிடத்து இளம்பூரணரும் நச்சினார்க் கினியரும் கூறுவன இக்கருத்தை வலியுறுத்தல் காண்க. நச்சி னார்க்கினியர் அங்குப் "புனைந்துரை வகையாற் கூறுப என்றலிற் புலவர் இல்லனவும் கூறுபவாலோ எனின், உலகத்தோர்க்கு

நன்மை பயத்தற்கு நல்லோர்க்கு உள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறமெனக் கருதி, நல்லோர்க்குள்ளனவற் றிற் சிறிது இல்லனவுங் கூறுதலன்றி யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறார் என்றற்கன்றே நாடகம் என்னுது வழக்கென் பாராயிற்றென்பது” எனக் கூறுதலான், நாடகம் என்பது நல் லோர் ஒழுகியதனை ஒழிந்தோர் அறிந்தொழுகுதலைப் பயனாக வுடையதென்பதும், இது பெரும்பாலும் நல்லோர்க்குள்ளன பற்றியே வரும் என்பதும் துணியலாகும்.

இஃது, ஆடல் பாடல் அழகு என்ற மூன்றையுங்கொண்டு நிகழ்வதென்பது, ஆடலாசிரியன் நடியெனப்பட்ட இனி துணிந்த விறலியைக் காலவியல்புக்கேற்றவாறு பாடுவித்துத் தொடங்கும் பண்டைவழக்கத்தான் உய்த்துணரலாகும். தொல் காப்பியனார் நாடகநூலாகிய புலனுக்கு இலக்கணங் கூறிய இடத்துச் “சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து” என்றதனுற் சேரிமொழியாகிய பாடிமாற்றம் வடமொழி நாடகங்களுட் பாகதம்போலப் பெண்டிர்கூற்றினும், இழிந்தோர்கூற்றினும் வைத்து வழங்குதல் தமிழினும் உண்டாதல் உணரலாம்.

இவற்றால் நாடகநூன்முறைமை ஆரியத்திற்குந் தமிழிற்கும் பல்வகையினும் வேறுபாடின்றி ஒத்ததுணரலாம். அங்ஙனம் ஒத்தியன்ற நாடகநூல்கள் வடமொழியிற்போலத் தமிழினும் பழங்காலத்துப் பல விருந்தனவென்று இதனால் நன்குதுணியப் படும். இவ்வுண்மை இயலிசைநாடகம்பற்றி முத்தமிழ், தமிழ் மூன்று, தமிழ் மும்மை யெனச் சான்றோர் வழங்குதலானும் வலியுறும். அங்ஙனம் பண்டே உண்டாகிய நாடகநூல்களுள் “விளக்கத்தார் கூத்து” என்ற ஒரு நூற்பெயர்மட்டுமன்றி வேறெதுவும் இக்காலத்துக் கிடைக்காதொழிந்தது தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நன்மக்கள் எல்லோரானும் வருந் தத் தக்கதேயாகும்.

இந்நிலையில் ஆரியம் என்னும் பெருங்கடற் பரப்பில் நல் லோர் எடுத்துதவிய அமிழ்தம் போன்றுள்ள உயர்தர நாடக நூல்களை மொழிபெயர்த்துத் தமிழை அம்முறையானும் வளம் பெறச் செய்வது பண்டை ஆசிரியர் சென்ற நெறியையே தழுவி யதாகும். ஆசிரியர் தொல்காப்பியனார் வழிநூல் வகையைக்

கூறிய இடத்து "மொழிபெயர்த் ததர்ப்பட யாத்தல்" என்பதனல் மொழிபெயர்த்துக்கொள்வதற்கு உடன்படுதலால் இவ்வுண்மை துணியலாம். இங்கே பேராசிரியர் "அதர்ப்பட என்பது நெறிப்பட என்றவாறு; நெறிப்படுதலென்பது அவ்வாறு மொழிபெயர்த்துச் செய்யுங்கால், அவை கிடந்தவாற்றனே செய்யப்படும்: தொகுத்தும் விரித்துந் தொகைவிரியாகவுஞ் செய்ததனற் பயமில்லை, தமிழர்க்கும் ஆரியர்க்கும் என்பது. மொழிபெயர்த்தெனவே பொருள்பிறழாமை பெற்றும். வழக்குநூலுள்ளும் மொழிபெயர்த்தியாக்கப்படுவன உளவோ வெனின் அற்றன்று அது வேண்டுமே? வேதப்பொருண்மையும் ஆகமப்பொருண்மையும் நியாயநூற்பொருண்மையும் பற்றித் தமிழ்ப்படுக்குங்கால் அவற்றிற்கும் இதுவே இலக்கணம் என்றற்கு மொழிபெயர்த்தலையும் இவற்றின்கட் எனபது" எனக கூறியது காண்க.

ஈண்டு மொழிபெயர்ப்பென்பது, மொழிபெயர்க்கப்படும் நூல், தொகுக்கவும் விரிக்கவும் தொகுத்துவிரிக்கவும்படாது கிடந்தவாறே பொருள்பிறழாமற் றமிழிற் செய்வதென்பது தெளியப்படும். இங்கே பேராசிரியர் "வழக்குநூல் வேண்டுமே" என்று வினவியது அவர்காலத்துத் தமிழில் அந்நூல் மிருதியாக வழங்கி வந்தமைபற்றி என்று உய்த்துணரலாகும். அவ்வழக்குநூல் ஒழிந்த காலத்து, அதுவும் மொழிபெயர்த்துக் கொள்ளலாம் என்பது அவர்க்கு உடன்பாடாகும் என இதனலே துணியப்படும். வேண்டியதாயிற் செய்க என்பதே அவர்க்குக் கருத்தாம் என்க.

இம்முறையில், வடமொழியினுள்ள எல்லா நாடகநூல்களினும் தலைசிறந்து நாடகமகுடமாகச் சற்றேறக்குறைய ஓராயிரத்தைஞ்ஞூறு வருடங்களாக நல்லறிவாளர் எல்லோரானும் ஒரே துணிவாகப் பாராட்டப்படுவதும், சுவை முழுதிற்கும் நிலைக்களனுனதும், பதிவிரதையின் உத்தம வியல்பையே மிகுத்துக் கொண்டதும், நம் பரதகண்டம் இப்பெயர்சிறத்தற்குக் காரணமான செங்கோல் வென்றிவேந்தனை உதவிய கற்பரசியின் புண்ணிய சரிதையை உடையதும், வடமொழிக் கவிச்சக்கரவர்த்தியாகிய காளிதாஸர் தம் இனிய அரிய கவித்திறமும்,

தமக்கே இயல்பாகிய மதிநுட்பமும், அலங்கார நயமும், உசிதமும் உலகெலாம் வியந்துபாராட்டச் செய்துதவியதும் ஆகிய "அபிஜ்ஞான சாகுந்தலம்" என்னும் நூலே ஈண்டு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மொழிபெயர்ப்பு வடமொழிச் சுலோகத்திற்குச் சந்தப்பாடலும், வடமொழியிலும் பாகதத்திலுமுள்ள உரைநடைக்குத் தமிழுரைநடையுங் கொண்டுள்ளதாகும். நாடகத்தில் அவ்வவ்வமையங்கட்கேற்ற பண்ணுந் தாளமும் அமைந்த சந்தப்பாடல் செவிக்கினியதாதல் வேண்டி

எத்துணையோ உரைகள் பெற்று நடந்த இந்நூலின் அருமை பெருமைகளை நல்லறிவாளர்முன் யான் விரித்துக் கூறப் புகுவது இமாலயத்திற் பனிக்கட்டி விற்கப் புகுவதோடொக்குமென்று கருதுகின்றேன். சுருங்க உரைக்கின், மக்களை உள்ளத்தாலோ உரையாலோ ஒழுக்கத்தாலோ மேம்படுத்திச் சருவசீவதயை முதலிய தெய்வப் பண்புகளிற் பயில்வித்துப் பரம நாகரிகராக்குதற்கு இதனினும் விலையின் மிக்கதும் அளவிற் சிறியதும் ஆகிய ஒரு மணி போன்ற நல்ல நூல் காண்பதரிது.

இவ்வுண்மையை நன்று தெளிந்து இந்நூலைத் தமிழில் மொழிபெயர்க்கும்படி என்னை விரும்பிய பெரியார், இந்திய சக்கரவர்த்தியின் அந்தரங்க ஆலோசனை அவையத்தவரும், உலகு புகழும் இனிய சொல்வன்மையாளரும், உத்தமசீலரும், நம் பரத கண்டத்திற்கே உழைக்கும் மிதவாதித் தலைவரும் ஆகிய வலங்கைமான் ஸ்ரீமாந் V. S. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் ஆவர். அவர்கள் இந்நூலைத் தம்முயிர்க்குணவாகப் பல்காற் பருகி இன்புறுபவர் என்பதை அவருடன்பயின்றறிந்துள்ளேன். அவர்கள், இந்நூற்றலைவி சகுந்தலையைச் சிறப்பித்து ஜர்மன் மகாகவி கேதே என்னும் ஆசிரியர் புகழ்ந்த பாடலை மொழிபெயர்த்து முன்வைப்பதே போதுமென்றும், அஃதொன்றே இந்நூற்சிறப்பு முழுதும் நன்கு விளக்குமென்றும் கூறியபடி செய்துள்ளேன். அது வருமாறு:—

வயங்கிருது வின்மலர் முதிர்ந்த பொழு தின்கனி
வளங்களெவை யால்ந மிதயம்

மகிழ்ந்தது கவர்ந்தது விருந்தமர வெம்பசி
    மறந்ததென லாம வையெலாம்
நயந்தரு விசும்பொடுல கும்பலுயர் வும்மொரு
    நறுஞ்சொலி னடங்க விழையின்
நலந்திகழ் சகுந்தலைநி னன்பெய ரியம்புவல்
    நவின்றவுட ஞமு ழுதமே.

அந்நியநாட்டுப் பெரும்புலவரது அறிவுள்ளத்தையும் இவ்வாறு கவர்ந்து பாடச்செய்யும் இந்நூற்பெருமையை எடுத்துரைக்க எனது ஒருவாய்போதாது என்றிருப்பதே தக்கது. யான் சென்னை உயர்தர நீதிமன்றத்து நியாயவாதியும், பண்டிதவத்ஸலரும், அருங்கலை விநோதரும், என்னை உடன்பிறப்புப் போலக் கொண்டு அன்பு பாராட்டி என்கண் ஆதரம்புரிபவரும் ஆகிய ஸ்ரீமாந். V. V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்களாற் சென்னைக் கழைக்கப்பெற்று, யான் மொழிபெயர்த்துள்ள கீதைத்தாழிசைகளை மயிலாப்பூர் ஸம்ஸ்கிருத ஸமிதியின் சார்பாக வித்யாவாசஸ்பதி மஹாமஹோபாத்யாய ஸ்ரீமாந் குப்புஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள் தலைமையில், ரானடே மன்றத்துப் பலர் அறிவாளர் கூட்டத்து வாசித்துக்காட்டி உபந்யஸிக்க நேர்ந்தபோது, அவ்வவைக்கண் அமர்ந்த ஸ்ரீ *Right Hon'ble* சாஸ்திரியார் அவர்கள் அவ்வவை முடிவில் என்னிடன் போந்து, இவ்வாறு இனிய ஓசையுள்ள பண்ணார் தமிழ்ப்பாடலோடு கவிஸார்வபௌமனது சாகுந்தலநூலை உள்ளவாறே மொழிபெயர்த்து உதவின் தமிழ்நாடு இன்புறுதற்கு ஏதுவாகும் என்று கூறி, அதனை அங்ஙனமே முடித்துதவும்படி இனிய மொழிகளான் என்னை விரும்பினார்கள். அவர்கட்கு இந்நூலின்கணுள்ள உயர்ந்த பெரிய ஆர்வம் அவர்கள் வாய்மலரால் வழிவதுபோல அவர்கள் இங்கிதத்தாற் கண்டுகொண்டு அவ்வண்ணமே செய்ய உடன்பட்டேன்.

இந்நூல் ஐந்தாம் அங்கத்தில் வைதாளிகர்* இருவர் அரசனைப்பாடுதல் காணப்படுதலால், வேறுவேறு தாளத்தி லமையச் சந்தப்பாடலில் இந்நூல் செய்வதன் பொருத்தம் இனிதாகக் கருதப்படும்.

---

* வைதாளிகர் வேறு வேறு தாளத்திற் பாடவல்லவர்.

பின்னர்ச் சிலமாதங்கள் இதே வேலையை மேற்கொண்டு என்னால் இயன்றவரை இந்நூலை மொழிபெயர்த்து வைத்துப் பல பெரியார் முன்னர் வாய்த்தபோதுகளில் வாசித்து வேண்டுந் திருத்தங்களை அமைத்துக் கொண்டிருந்தேன். இந் நிலைமைக் கண் Rt. Hon'ble சாஸ்திரியார் அவர்கள்முன்னர் இந்நூற் சுலோகப்பாடல் ஒவ்வொன்றையும் படித்துப் பொருளமை தியை முறையாகஆராய்ந்து தெளியநேர்ந்தபோது, இஃதடைந்த திருத்தங்கள் மிகவும் இனியனவும் அரியனவும் ஆதல் கண்டு உள்ளம் மகிழ்ந்தேன். அந்நிலையிலே இவர்கள் மதிநுட்பத்தை யும் நூல்வன்மையையும் யான் பல்காலுங்கண்டு அதிசயித்த துண்டு. இவர்கள் சொல்வன்மைக்கெல்லாம் மூலமாக, இவர்க் குள்ள அரிய மதிநுட்பத்துடன் இவ் வடமொழியுணர்ச்சியும் பெரிதும் உபகாரப்பட்டு விளங்குவது என்று தெளிந்துகொண் டேன். இவர்கள், அமிழ்தம் உண்பது போன்ற இச்செயலில் என்னைப் புகுவித்துத் தம்பேரறிவை உதவியதன்றி, இம்மொழி பெயர்ப்பினை அச்சிடுதற்கு வேண்டிய பொருள் முழுவதையுந் தந்தது, இவர்கட்கு இந்நூற்கணுள்ள ஆர்வத்தையும் இதன் நல்லறிவைத் தாம் பிறந்துசிறந்த தமிழ்நாட்டிற் பரவச் செய் வதில் இவர்கட்குள்ள ஊக்கத்தையும் அளந்தறிதற்கு வாயிலாக விளங்குவது. இங்ஙனம் எல்லாப்படியாலும் நல்லுதவி புரிந்த இவர்களை யான் மனனோடு வாயார வாழ்த்தி யிருப்பதல்லது வேறு கைம்மாறு காண்கிலேன்.

· வடமொழியிலுள்ள நல்லறிவினை இத் தென்னாட்டுப் பல் வகையானும் பரவச் செய்வதையே பேரறமாகக் கொண்டு அந்நெறியின் எல்லாவகையினு முயலும் மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருத ஸமிதியிலுள்ள பெருந்தகையங்கத்தினர்கள், கலைவல்லவர் பலரையுங் கூட்டி வித்யாவாசஸ்பதி மஹாமஹோபாத்யாய ஸ்ரீமாந் குப்புஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள் தலைமையில், இம் மொழிபெயர்ப்பினைப் பாராட்டி எளியேற்குப் பெரும்பெயரும் பொற்கிழியும் உதவியருளிய அரிய சிறப்பினைக் கருதி அந்நல்ல வையைத் திரிகரணத்தானும் வாழ்த்தி வழிபடுகின்றேன். அவ் வமயம் இத்தென்னாட்டுக்கு ஒப்புயர்வற்ற திலகம்போல் விளங் கிய கலாநிபுணரும் பரமோபகாரகரும் ஆகிய ஸ்ரீமாந் V. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள் அருமைப் புத்திரமணிகள்

ஸ்ரீமாந் K. பாலஸுப்ரமண்ய ஐயர் அவர்களும், ஸ்ரீமாந் K. சந்திரசேகர ஐயர் அவர்களும் பாராட்டிக் கூறிய இன்னுரைகளும், ஷை அவைத்தலைவர் மஹாமஹோபாத்யாய ஸ்ரீமாந் சாஸ்திரியார் அவர்கள் மனமுவந்து கூறிய பெருஞ்சொல்லும் என்னெஞ்சில் நிலைத்துள்ளன.

இம்மொழிபெயர்ப்புப் பெரும்பாலும் நம் தென்னாட்டு வழங்கும் பாடத்தையே தழுவியதாகும். பாகதப் பகுதிகட்கேற்றவாறு பாடிமாற்றம் (சேரிமொழி) நம்நாட்டு ஒருபடியாதலின்றி வரையறைப்படாது செல்லுதலால், தமிழ்நாட்டு எங்கும் ஒத்த வழக்குள்ள உரைநடையே எடுத்தாளப்பட்டது. எத்துணையோ உரைகள் நடந்தும் இன்னும் ஆழங்காண்டற்கரிய இந்நாடகப்பொருளைத் தமிழில் அமைக்கப் புக்க இம்மொழிபெயர்ப்பில், வடமொழிக்கே சிறந்த குறிப்புமொழிகளும் சாடுக்களும் சிலேடைகளும் தொனிகளும் ஆங்காங்கு மலிந்துள்ள இடங்களில், இயன்றவரை அவைகளும் விளங்கும்படி என் ஆசையால் முயன்றுள்ளதனை இருமொழியினும் புக்க அறிவினர் காண்பார். ஒரு சாடியின் நெடுங்காலம் அடைபட்டுள்ள பெருங்களிப்புச்செய்யும் மதுவைப் பிறிதோர் பாண்டத்து வார்க்கும்போது அது பொங்கிவழிந்து சிதறுதலானும், காற்றிற் பரத்தலானும் அதன் அளவும் வீரியமும் கெடுவது போலவேதான், ஒரு மொழியிற் கிடந்த அரும்பொருளைப் பிறிதோர் மொழிக்கணமைப்பதும் ஆகுமென்று மேற்றிசைப் பெரியார் ஒருவர் கூறியதை இங்கு அறிஞர்க்கு விண்ணப்பிக்கின்றேன்.

இந்நூலைப் பதிப்பிக்குங் காலத்து எனக்குச் சென்னையிற் பெருந்துணையாய் நின்று எல்லாவுதவியுஞ் செய்தவர், என் கண்ணினுமினிய என் அருமை அம்மான் சேயும், சென்னைச் சருவகலாசாலைத் தமிழகராதித் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும் ஆகிய ஸ்ரீமாந் மு. இராகவையங்கார் அவர்கள் ஆவர். இவர்கட்கு உபசாரமொழி கூறுவது தனக்கு ஊட்டிய கையினை வாய் புகழ்வதோ டொக்குமேனும் என்வாய் வாழ்த்தாமலிராது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து என் துணையாயமர்ந்துள்ள (*Senior Research Pandit*) ஸ்ரீமாந் E. S. வரதராஜ

ஐயர் அவர்கள் வாய்த்த போதுகளில் இந்நூலைப் பிரதிசெய்தும் ஒப்பு நோக்கியும் பதிப்பிற்கு வேண்டுவன நிறைவேற்றியும் அச்சுப்பிழைகளைத் திருத்தியும் உதவிய உபகாரம் என்னால் மறக்கற்பாலதன்று.

மயிலை பி. எஸ். ஹைஸ்கூல் ஸம்ஸ்க்ருத பண்டிதர் ஸ்ரீமாந் கச்சபேச்வர சர்மா அவர்கள் வடமொழி மூலத்தை வைத்து என்னுடன் பிரதியை ஒப்புநோக்கி உதவிய நன்றியை நான் என்றும் மறவேன்.

இம்மொழிபெயர்ப்பை அவ்வப்போது கவனித்து நல்ல முறையின் வெளியிடுதற்குரிய ஆலோசனைகளை எனக்குச் சொல்லிய சென்னை உயர்தர நீதிமன்றத்து நியாயவாதி ஸ்ரீமாந் P. N. அப்புஸ்வாமி ஐயரவர்கட்கும், இதனைப் பதிப்பித்தற்கு உடன்பட்டு இதன்கட் கண்ணுங் கருத்தும் வைத்து இனிதச்சிட்டு நிறைவேற்றிய சென்னை நியாயஸஞ்சிகா முத்திராலயத் தலைவர் ஸ்ரீமாந் R. நாராயணஸ்வாமி ஐயரவர்கட்கும் என் மனமார்ந்த வந்தனத்தை அளிக்கின்றேன்.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்.

# அபிஜ்ஞான சாகுந்தலம்

## நாடகபாத்திரங்கள்

### ஆடவர்

| | | |
|---|---|---|
| ஸூத்ரதாரன் | | நாடகம் நடத்துபவன் |
| துஷ்யந்தன் | | புருகுலமன்னன்; நாடகத்தலைவன். |
| ஸர்வதமனன் (பரதன்) | | துஷ்யந்தனுக்குச் சகுந்தலையிடம் பிறந்தவன். இவன் பின்னர்ப் பரதன் என்று மறுபெயர் கொண்டான். |
| மாடவ்யன் | . | ...டைய பாங்கன. |
| கண்வர் (காச்யபர்) | | ஒரு முனிவரர்; சகுந்தலையை எடுத்து வளர்த்த தந்தை. |
| மாரீசர் (காச்யப ப்ரஜாபதி). | | பிரமனின் மகனுன மரீசி ருஷியின் புத்திரர்; தேவதைகளுக்கும் மனிதர்களுக்கும் ஆதிபிதா. |
| துர்வாஸர் | | சகுந்தலைக்குச் சாபங்கொடுத்த ஒரு முனிவர். |
| வைகாநஸர் | ... | கண்வர் சீடர் |
| சார்ங்கரவன் | ... | ,, |
| சாரத்வதன் | ... | ,, |
| கௌதமன் | ... | ,, |
| நாரதன் | ... | ,, |
| தாண்டாயனன் | ... | ,, |
| காலவன் | ... | மாரீசரின் சீடன் |
| சாகலியர் | ... | மாரீசர் ஆசிரமத்திலுள்ள ஒரு பிராமணன். |
| ஆர்யபிசுநர் | ... | துஷ்யந்தன் மந்திரி. |
| மித்ராவஸு | ... | அரசன் மைத்துனன்; ஊர்காவலர் தலைவன். |
| ஸோமராதர் | ... | அரண்மனைப் புரோகிதர். |

| | |
|---|---|
| மாதலி | இந்திரஸாரதி. |
| கரபகன் | துஷ்யந்தன் தாயாரின் தூதன். |
| | வாதாயனன் என்பவன்; அந்தப் புரங்காப்போன். |
| ஸூசகன்; ஜாநுகன் | வாயிற் காவலர். |
| வைதாளிகர் இருவர் | அரசரைப் புகழ்ந்து பாடுவோர். |
| | வாயிற் காவலன். |

## பெண்டிர்

| | |
|---|---|
| நடி | ஆடல் பாடல் வல்லவள். |
| ச | விசுவாமித்திர முனிவர்க்கு மேனகை வயிற்றிற் பிறந்தவள். கண்வரால் எடுத்துவளர்க்கப் பெற்றவள். துஷ்யந்தனைக் காந்தருவ முறையின் மணந்தவள். நாடகத்தலைவி. |
| பிரியம்வதை; அநசூயை . | சகுந்தலையின் தோழியர்கள். |
| கௌதமி . | கண்வர் ஆசிரமத்திலிருந்த ஒரு தவப்பெண். |
| தாக்ஷாயணி . | மாரீசரின் பத்தினி; தேவதைகட்கெல்லாம் ஆதிமாதா. |
| மேநகை . | சகுந்தலையின் தாயாகிய அரமகள். |
| ஸானுமதி . | மேனகையின் தோழி; ஒரு தேவஸ்திரீ. |
| ஹம்ஸபதிகை; வசுமதி . | துஷ்யந்தன் மனைவியரில் இருவர். |
| பரபிருதிகை; மதுகரிகை . | தோட்டக்காவற்பெண்டுகள். |
| சதுரிகை, பிரதீகாரி (வேத்திரவதி), யவனி, தரளிகை . | அரண்மனைத் தாதிகள். |
| ஸுவ்ரதை . | ஒரு தவப்பெண். |

தேர்ப்பாகன், சேனாபதி, பரிஜனங்கள், சிஷ்யர்கள், ருஷிபத்தினிகள், யவனப்பெண்கள், செம்படவன் முதலாயினோர்.

## அரங்கில் வாராத பேயர்கள்

| | |
|---|---|
| விசுவாமித்திரர் ... | சகுந்தலையைப் பெற்ற முனிவர். |
| பரதர் ... | நாட்டிய நூலாசிரியர். |
| ... | தேவர்களுக்கு அரசன். |

| | | |
|---|---|---|
| ஜயந்தன் | ... | இந்திரன் மகன். |
| துர்ஜயனன் | ... | காலநேமி என்னும் இராக்ஷத வமிசத்தைச் சேர்ந்த ஓர் அசுரன். |
| ஸாகேதன் | ... | புகழ்பெற்ற அயோத்தி நகர்வாசி. |
| தனமித்ரன் | ... | வங்கவாணிகன். |

## நாடகம் நிகழிடங்கள்

| | | |
|---|---|---|
| முதலாம் அங்கம் | ... | வனமும் தவவனமும். |
| இரண்டாம் அங்கம் | ... | கண்வர் தவச்சாலையை அடுத்த ஒரு பூந்தோட்டம். |
| மூன்றாம் அங்கம் | ... | மாலினி நதிக்கரையில் உள்ள நீர் வஞ்சிக்கொடி மண்டபம். |
| நான்காம் அங்கம் | ... | கண்வர் தவச்சாலையும் அதையடுத்த குளவழியும். |
| ஐந்தாம் அங்கம் | ... | அஸ்திநபுரத்துத் துஷ்யந்தன் அரண்மனை. |
| ஆறாம் அங்கம் | ... | அஸ்திநபுரத்து இளமரச்சோலையும், அரண்மனையும். |
| ஏழாம் அங்கம் | ... | விண்ணுலகும் ஏமகூடத்திற் காசிபர் ஆசிரமமும். |

ஸ்ரீ:

கடவுள் துணை

# அபிஜ்ஞான சாகுந்தலம்

(தமிழ்மொழிபெயர்ப்பு)

## பாயிரம்

### கடவுள் வாழ்த்து

1. நிதமின்புறு வீடும்முழு துலகுந்நிறை தந்தே
இதவண்புர வொடுநின்றரு ளிறைவன்னெம தரணே.

### நாமகள்வாழ்த்து

2. மொழியும் பொருளுந் தழுவும் மெழிலான்
முழுதுஞ் சுவையின் பமொருங் கியையத்
தொழுவென் கவிசக் கரவர்த் தியுளம்
சுடர்வெண் கமலத் தவள்செம் பதமே.

### நூற்சிறப்பு

3. வான்மீக முணவாக மாபார தந்நீர்
வண்காளி தாசன்சொல் நன்போக மாகத்
தேன்மீ தருந்தித் தெவிட்டா தினிக்குஞ்
செந்நாவ லோர்பேறு தேவர்க்கு முண்டோ.

4. எவன்பெயர் சிறந்தொளிர்வ திவ்வினிய தேயம்
அவன்பரத னென்பதறி வந்ததவ னைத்தான்
இவண்தரு சகுந்தலை யெவர்க்குமொரு தாயென்
றுவந்தவ னருந்துமிவ ளொண்சரித வின்பம்.

5. பொன்மலர் மணக்குமெனி னின்னது பொருந்தும்
நன்மணி யினிப்பதெனி னன்கிதனை யொக்கும்
இன்படிமை நல்விடை யிசைப்பதெனி னீதாம்
என்புகல்வல் மற்றிணை சகுந்தலை நிறைக்கே.

### அவையடக்கம்

6\. மாசிலறி வானே வீசொளிசெய் காளி
தாசகவி பானுக் கியானிறைத காதேன்
ஏசில்சுடர் புன்னீ ரிற்றெறிவ ருண்டென்
றுசைகொடென் சொற்பா லன்பொருள்கொள் வித்தேன்.

7\. நற்படிமை யாட்குயர்க விப்புலமை நாட்டைப்
பொற்படிமை கொள்ளவலன் பொற்படிமை வைத்தான்
கற்படிமை யேனுமொரு கற்படிமை நட்டேன்
எப்படிமை யின்கணு மணங்கெணுவ ரென்றே.

8\. பல்லோர்மொழி பெயர்தந்தவை பயில்நாடக மகுடம்
பண்ணார்தமி ழுளவாறுநண் ணுமற்பரி பவர்முன்
நல்லோரிது நவிலாதெனை நவிலும்படி வைத்த
நன்பேறுள நினையுந்தொறு நணுகும்மதி சயமே

### ஆக்குவித்தோன்பெயர்

9\. காதல்கூரமிழ் தாநலோருணுங் காளிதாசசா குந்தலந்தமிழ்
ஓதல்நன்றுதென் ணுடருந்தவென் றேதிணுனுயர் சீநிவாசநன்
மேதைவாரிமா சில்லவன்கலை வேட்கையேயெனை ஊக்கநாடகம்
ஈதிசைத்துளே ணுதலிற்புவி யென்னினும்மவன் தன்னையெண்

10\. கருவி ளக்கியொண் காளி தாசனூல்
மரும முற்றுமென் மதியி னுய்த்தனன்
திருமொ ழிக்கிறை சீநி வாசனப்
பெரிய னுக்கியா னுதவு பேறெனே.

### ஆக்கியோன்பெயர்

11\. தருங்காளி தாசன் சொலுந்தூய சாகுந்
தலந்தேற லாகுந் தரந்தா னறிந்து
மிகும்பாரி லேதென் தமிழ்நா டருந்தும்
விதம்பாட லானுள் விழைந்தோதல் செய்தான்

தொகுந்தேயம் யாவும் புகுஞ்சேது பூபன்
தொழுந்தேவை காவல் கொளுந்நாக நாதன்
உகந்தா தரஞ்செய் பவன்வேதி யன்சீ
ருடன்வாழ் தரும்ராகவன்பாவ லோனே.

12. ஏரினிற் றிகழ்புவிக் கிறையவன் பரதனைக்
காரினிற் றருசகுந் தலைமணக் காதைதென்
பாரினித் துணைநறுந் தமிழினிற் பாடினன்
சீர்நயித் துருவகா சிபனிராகவனரோ.

## உரிமை யுரைப்பாட்டு

13. கலைவாணர் யாருந் தலைமீது கொள்சீர்
கமழ்காளி தாசன் கவிசார்வ பௌமன்
உலகோடு வானும் மொருசேர வோர்தற்
கொளிராடி சாருந் தலமாக எங்கும்
இலகாவ லானே இவனோது வடநூல்
இனிதாய தூய தமிழா னியம்பிக்
குலராக வன்வண் கவிசேக ரன்சற்
குணமாதர் பேருக் குரிதேசெய் தானே.

நடி.—ஐயன்மீர்! நீர் முழுதும் விதிப்படி நன்றாகப் பயில்வித்து நடத்தலால், சிறிதும் இதன்கண் இகழ்தற்கு இடமிராது.

சூத்திரதாரன்.—மாதே! உனக்கு உண்மைப் பொருளையுரைக்கிறேன்.

2. கற்றுத் தெளிந்தா ருவக்கும் வரைக்கும்
காணுற்ற கலைஞான மாண்பென் றெண்ணேனல்
மற்றுத் திடத்திற் பயின்றாயிந் தவர்க்கும்
மனமோ தனைக்கொண்டு தானம் பொறாதே.

நடி.—இஃது இப்படித்தான். ஐயன்மீர்! இனிச் செய்ய வேண்டுவது இன்னதெனப் பணிப்பீராக.

சூத்திரதாரன்.—இவர்கள் செவிகட்கு மகிழ்செய்வது தவிர வேறியாதுள்ளது.

நடி.—ஐயன்மீர்! யாது பருவம்பற்றி யான் பாடுவதென்று பணிப்பீர்.

சூத்திரதாரன்.—உண்மையில் அநுபவித்து மகிழ்தற்கு இனியதாய், உதயமாகிச் சில நாட்கூட ஆகாத இந்த முதுவேனிற் பருவத்தையே குறித்துப் பாடுவாயாக. இத்தருணத்திலோ—

3. முழுக வினியன புனல்கள் வனவளி
முருகு கமழ்வன பாதிரி
இழுகி மிகுநிழல் எளிது துயில்தரும்
இனிது முடிவுழி நாளுமே.

நடி.—அப்படியே (என்று பாடுகிறாள்).

4. அளிகள்சிறு முத்தம்
புரியவலர் வாகை
அழகிளமென் றூங்கற்
சிகையிலகு பூவை

இளையமட நல்லார்
இயல்பினருள் கூர்வார்
இருசெவிக ளின்கண்
இனிதணிசெய் தாரே.

சூத்திரதாரன்.—ஐயை! நன்று பாடினை. உன்னுடைய பாட்டு உள்ளநிகழ்ச்சியைப் புறன்செலவிடாமற் பிணித்தத னால் அவைமுழுதும் எழுதிய சித்திரம்போலாயது அதிசய மாகும். இத்தகையோரை எந்தக் கதையைக் கொண்டு விரை வாக வழிபடுவோம் எனச் சொல்வாய்.

நடி.—பல்கலையும் நிறைந்த ஐயன்மீர்! இங்கு அபூர்வமான தும் அபிஜ்ஞானசாகுந்தலம் எனப் பேர் பெற்றதும் ஆகிய நாடகத்தைப் பற்றி முறைப்படி நடிக்கத்தகும் என்று முதலிலே தேவரீர் ஆணையிட்டதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சூத்திரதாரன்.—ஐயை! நன்றாக நின்னால் நினைப்பூட்டப் பெற்றவனானேன். இக்கணத்தில் நான் அவையெல்லாம் உண்மை யாகவே மறந்தேன். எப்படி—

5. வசமின்று கவர்நின்ற னிசைநின்ற கீதம்
வலிகொண்டு நனிசேய்மை எனையீர்த்த தீதோ
துசியந்த மகராசர் தமையிவ் விரைந்து
தொலையோடு கலைநீடு செலவீர்ப்ப தேபோல்.

(முன்னுரை முற்றும்)

## முதலாம் அங்கம்

(பின்னர் வேந்தன் பாகனொடு தேர்மீதமர்ந்து விற்பிடித்த கையுடன் கலைமானைப் பின்றொடர்பவனாகப் புக்கனன்.)

பாகன்.—(வேந்தனையும் மானையும் பார்த்து) வாழ்வீர்!

6. கருமான் கலையுங் கவிகார் முகனிற்
கடுநாண் தொடுநுந் தமையும் விழிவைத்
தொருமான் றொடர்தந் துபிநா கியென்கண்
ணுறநன் கெதிர்தந் தெனநோக் குவல்யான்.

வேந்தன்.—தேர்வலவ! நாம் இச்சிறுமானால் நெடுந்தூரம் இழுக்கப்பட்டோம். ஈது இன்னுந்தான் (இழுத்துச்செல்வது)

7. அடிக்கடி குதிப்பதி ரதத்தில்விழி வைத்திங்
கணித்தக வளைப்பது கழுத்தையெய் கணைக்குத்
திடுக்குற ஒடுக்குபின் அரைப்புறமுன் மெய்க்கட்
டிணிப்பது மடுத்தரை யசைப்பிடு திறத்தின்
இடர்ப்படு முகக்கடை திறப்புற உதிர்க்கும்
இரைப்புல் சிதறப்பெறு வழிக்கண்விழி வைப்பாய்
விடர்ப்புவி யிடைச்சிறி தடிப்புறன் மிதித்து
விணுக்கிடை யெழப்பல குதிப்பின்விரை வோடும்.

(வியப்புடன்) இது செல்லும் வழியை விடாது தொடர்ந்து வந்தும், இப்போது மெல்ல அரிதிற்காணப்படுவதாகும். என்ன காரணமோ?

பாகன்.—வாழ்வீர்! இந்தத் தரை மேடும்பள்ளமுமா யிருப்பதுபற்றிக் கடிவாளத்தை இழுத்துப் பிடித்துத் தேரின் வேகத்தைக் குறைத்து மெல்லச் செல்லவிட்டேன். அதனால் இம்மான் வெகுதூரம் வெளியில் விலகிச் சென்றது. இப்போது சமநிலமா யிருப்பதாற் கிட்டுவது அரியதாகாது.

வேந்தன்.—அப்படியாயின், குதிரைவாரை நெகிழவிடு.

பாகன்.—வாழ்வீர்! எது நும் ஆணை அதுவே. (தேர் விரைவதாக அபிநயித்துக் காட்டி)

வாழ்வீர்! பாரும், பாரும் இது தருணம். ஏன் என்னின்,

8\. கறுழ்நெகிழ்த் தளவின்முன் காயநீள் தரநுனிக்
கவரியா டுவதறச் செவியசைப் பிலநிமிர்த்
துறவெழுப் பியதுகள் தமைநணித் தொடவொணு
துழைவிரைந் ததுபொரு வுறழுவாஅ மிரதமா.

வேந்தன்.—சூரியனுக்கும் இந்திரனுக்கும் உரிய குதிரைகளின் வேகத்தையும் நம் குதிரைகள் வெல்வன. இஃதுண்மைதான். அஃதெப்படி என்னின்,

9\. எதுவி ழிப்படவு மேசிறிய தாவ ததுவே
எதிர்வ ரப்பெரிய தாகவுட னேதெ ரிவதாம்
எதுத னக்குளிரு பாதிபிள வுற்ற ததுதான்
இவண்வ ரத்தனியி ணைட்டியது போல வுளதால்
எதுவி யற்கையின்வ ளைந்தமைவ தாய ததுவும்
இதன்மு னர்ப்படிவ நேர்மையுள தாவ றிவரும்
எதுகொல் சேய்மையது அண்மையெது அண்மையது
திரத மோடும்விரை வாறெருநொ டிப்பொ [சேய்த்
[மூதினே.

பாக! பார், ஈது இப்போது கொல்லப்படுவது.

(என்று கணையை எய்வதுபோல் அபிநயிக்கின்றான்)

(திரைமறைவில்) ஏ ஏ அரசே! இம்மான் ஆசிரமத்திலே வளர்வது; கொல்லத்தகாது; கொல்லத்தகாது.

(குரலை உற்றுக் கேட்டுப் பார்த்து)

பாகன்.—வாழ்வீர்! ஈது என்னவோ! கணை எய்யப்புக்க அளவில், உமக்கும் இக்கரிய கலைமானுக்கும் இடையே தவமக்கள் புகுந்தனரே.

வேந்தன்.—(நடுநடுங்கி) அப்படியாயிற் குதிரைகளைப் பிடித்து இழுத்து நிறுத்திவிடுக.

பாகன்.—அப்படியே. (என்று தேரை நிறுத்துகின்றான்)

(வைகாநசர் ஒருவர் இருவரொடு கூடி மூவராக வந்தனர்)

வைகாநசர்.—(கையை உயர எடுத்து)

10. விழவிடாதிர் விழவிடாதிர்
பகழியிம்மென் கலைமெயின்
மிளிர்நெருப்பு மலர்நிறைத்த
குவியலிற்பெய் வதுபொரும்
இழவுழந்து நடுநடுங்கு
முயிருமூச விடுமையோ
இஃதிளங்கன் றெங்கும்வீழ்வெவ்
வெறுழ்கொள் புங்க சரமெங்கே.

இன்னும்,

11. நன்றே குறிசெய் துதொடுத் துளவந்
நாண்வெங் கணைமீ ளவும்வாங் கிவைமீர்
துன்பே படுவா ரையெடுக் கவெனத்
தொட்டீர் படைதோ மிலர்மோ தவிலை.

இது மீளவுந் தூணியுள் வைக்கப்படுவதாக. (என்று சொன்ன வண்ணம் வேந்தன் செய்கின்றான்)

வைகாநசர்.—புருகுலத்துப் பெருவிளக்காயுள்ள உமக்கு இது தக்கதே.

12. புருவின் மரபின் னுதயம் பொருவும்
ஒருநிற் கிதுநன் குரிதா மிதினிற்
பொருநன் குணசக் கரவர்த் தியையே
மருவுங் குலமா மகனு வடைவாய்.

(பிறகு இருவருங் கைகளை உயரவெடுத்து)

எல்லா வகையானும் சக்கரவர்த்தியாகும் புதல்வனை யடைவீர்!

வேந்தன்.—அந்தணர் ஆசீர்வசனம் வந்தனத்துடன் நன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வைகாநசர்.—வேந்தரே! யாங்கள் சமித்து எடுக்கப் புறப் பட்டு வந்தோம். இதோ அருகினிற் காணப்படுவதுதான் மாலினி நதிக்கரையிற் குலபதி கண்வர் ஆசிரமம். வேறு காரியத்திற்குத் தடையில்லை என்னின் அங்கு வந்து எங்கள் விருந்துபசாரத்தைப் பெற்றுக்கொள்வீராக.

இன்னும்,

13. இடையூ றிலாமற் றவச்செல்வர் கன்மத்
தெலாமின்ப முற்றுந் திறன்கண் ணறிந்தும்
படைநாண் வடுக்கொண்ட கையெவ் வரைக்கும்
பரிபால னஞ்செய்வ தென்றுள்ள மோர்வீர்.

வேந்தன்.—குலபதியார் அங்கே இப்போதுள்ளனரோ?

வைகாநசர்.—அவர், விருந்தினரை உபசரிக்கும்படி தம் புதல்வி சகுந்தலையை நியமித்துவிட்டு அவளுக்குத் தெய்வத் தால் உண்டாம் இடையூற்றைக் கழித்தற்காக இப்பொழுது தான் சோமதீர்த்தம் சென்றுள்ளார்.

வேந்தன்.—(தனக்குள்) ஆகுக; இவளைக் காண்பேன். (வெளிப்படை) அவளே என் அன்பைத் தெரிந்து மாமுனி வர்க்குத் தெரிவிப்பாளாவள்.

வைகாநசர்.—இனி யாங்கள் செல்வோம். (என்று சீடரு டன் புறப்பட்டனர்)

வேந்தன்.—பாக! குதிரையை ஓட்டு. புண்ணியம் நிறைந்த ஆசிரமத்தைத் தரிசிக்குமளவில் என்மனம் பரிசுத்தியடையும்.

பாகன்.—வாழ்வீர்! எது ஆணையோ அதுவே.

வேந்தன்.—(எங்கணும் பார்த்து) பாக! இப்பரப்பு முழுதும் தவவனம் என்று சொல்லாமலேயிருந்துந் தெரிவது.

பாகன்.—எப்படி அது?

வேந்தன்.—நீ என் இதைக் காண்கின்றுயல்லை?

14. மரமொன்று கிளியுள்ளில் வதிகொம்பின் வங்கின்
வழிநின்று நீவார முதிர்கின்ற திவண்கீழ்த்
தருவிங்கு தியிஞ்ய கனிநைந்து நனைநெய்
தவழ்தந்து குறிகொண்ட சிலையிங்கு மங்கும்
பெருநம்பு துணிவின்மன் பதைநின்று பயில்வாற்
பெயர்கின்ற இலநந்த மொலிகொள்ளு முழைகள்
பொருகின்ற புனலோடை வழிரேகை படநீர்
பொழிதந்து குழல்சீரை வழியீர முளதால்.

இன்னும்,

15. வளிபொர வலைந்துகரை செய்தபுனல் வார்ந்து
வன்கிளை மரங்களடி வேர்கழுவு மங்கண்
அளிதரு நெயின்புகை பரந்தெழுத லானே
அவிர்தளிரி னெண்டுவர் நிறந்திரிவ தாகும்
குளிர்பொருத சோலைநில னூடுவளர் தந்து
கொய்தகுச நன்புன்முளை கொண்டெழுதல் கண்டு
விளியினில் வெருண்டுபெயர் சங்கைசிறி தின்றி
மென்மெல நடந்துசெலு நன்குழவி மானே.

பாகன்.—எல்லாம் பொருத்தந்தான்.

வேந்தன்.—(சிறிது இடைவெளி சென்றபின்) பாக! தவ வனத்துள்ளவர்க்குத் தடையொன்றும் ஏற்படவேண்டாம்; இம்மட்டிலே தேரை நிறுத்திவிடு; யானிங்கு இறங்குகின்றேன்.

பாகன்.—வாழ்வீர்! கடிவாளத்தை மிகவும் இழுத்துப் பிடித்துள்ளேன். இறங்கலாம்.

வேந்தன்.—(இறங்கி) விநயமான வேடமுடன் தவவனங்கள் புகத்தகுவன என்பது எங்கும் புகழ்பெற்றது. இதனால் இவற்றைப் பிடி, (என்று பாகன் கையில் வில்லையும் அணிகலங்களையும் வைத்து) யான் ஆசிரமத்துள்ளவரைத் தரிசித்து வருவதற்குள் நீ குதிரைகளை முதுகு நனையக் குளிப்பாட்டிவை.

பாகன்.—அப்படியே. (என்று செல்கின்றனன்)

வேந்தன்.—(நடந்துகொண்டே சூழப் பார்த்து) இதோ இருப்பது ஆசிரமவாயில்தான். உட்புகுவேன். (உட்புகும் போது நல்ல நிமித்தங்காண்பதாக அபிநயித்து)

16. இவ்வாசி ரமசாலை யுபசாந்த நிலனும்
என்றோள் வலத்தே துடிக்குமி தென்னோ
எவ்வா றிவண்பே றெனக்கெய்து மோமற்
றெய்தும் மவைக்கெங்கு முண்டாகும் வாயில்.

[திரை மறைவில்] இதுதான், இதுதான் தோழியர்காள்!

வேந்தன்.—(காதுகொடுத்துக் கேட்டு) இம்மரவேலியின் வலப்புறத்தே பேச்சுக்குரல்போலக் கேட்பதே, அங்குச் சென்று

காண்பேன். (என்று நடந்துபோய்ப் பார்த்து) இவர் மாதவர் குலத்து மகளிர், தம்வலிமையை அளந்து அதற்குப் பொருந்த எடுத்த குடங்களினால் இளஞ்செடிகட்கு நீர்வார்க்கும் காரியத்தில் இங்கே இப்போதுள்ளார்.

(உற்றுநோக்கி) ஆச்சரியம்! இனிமை என்பது இவரைப் பார்ப்பதுவே.

17. இனத்திற் றுறந்தாசி ரமவாழ்நர் மக்கள்
இம்மேனி யந்தப் புரத்திற் கிடைக்கா
வனத்தே தழைக்குங் கொடிப்பண்புய் யானம்
வளர்க்குங் கொடிக்குப் பெருந்தூர மன்றோ.

யான் இம்மரநிழலை யடுத்து மறைந்தபடியே இருந்து இவரைக் கவனிப்பேன். (என்று பார்த்துக்கொண்டேநிற்கின்றான்) (இதன்மேல் முன்சொல்லியபடி (நீர்வார்க்கும்) முயற்சியை மேற்கொண்டு தோழியருடன் சகுந்தலை புகுகின்றனள்)

சகுந்தலை.—என் இரு தோழியரே! இங்கே, இங்கே.

அநசூயை.—சகி சகுந்தலை! தாதை காசிபருக்கு உன்னைக் காட்டிலும் அதிகமான அன்பு இவ்வாசிரமத்துச் செடிகளிடன் உண்டென்று நான் ஊகிக்கின்றேன். ஏனென்றால் இந்தப் புது மல்லிகை மலரினும் எவ்வளவோ மெல்லிய உன்னையும் இந்தப் பாத்திகளில் நீர்வார்க்கும் வேலையில் வைத்ததனாலேதான்.

சகுந்தலை.—தாதையார் ஏவியது மாத்திரமும் இல்லை; இவற்றின்கண் எனக்கே ஒத்த உடன்பிறப்புநேயமும் உள்ளதன்றோ!

(என்று செடிகட்கு நீர்வார்ப்பதை அநுகரிக்கின்றாள்)

வேந்தன்.—இவள் அத்தகைய கண்வர்மகளாவதெவ்விதமோ; தொழத்தக்க காசிபர் இவளை ஆசிரமகருமத்தில் ஏவியதனால் இதந்தெரிந்தவராகாரென்பது நிச்சயம்.

18. அணிசிறிது மின்றி யெனதிதய முற்றும்
அடல்செய்வடி வீது தவவிடர் பொறுத்தற்
கெணுமிருடி வன்னிக் கிளைவலிதை நெய்தல்
இதழ்நவிய மாக எறியமுயல் வன்மெய்.

இஃதிருக்க; இம்மரத்தின் நடுவில் ஒளித்திருந்தே சிறிதிவளைப் பார்க்கின்றேன். (என்று அப்படியே மறைந்து நோக்குகின்றான்)

சகுந்தலை.—அநசூயே! மரவுரியாலாகிய என் ஸ்தன கஞ்சுகத்தைப் பிரியம்வதை இரக்கமில்லாமல் மிகவும் இறுக்கி முடிந்துவிட்டாள். சிறிது நீ இதனை நெகிழ்த்து விடு.

அநசூயை—அப்படியே. (என்று நெகிழ்த்து விடுகின்றாள்)

பிரியம்வதை.—(புன்சிரிப்புடன்) இதுபற்றி உன் ஸ்தன தடங்கள் பருத்து வீறுபெறச் செய்யும் உன் யௌவனத்தைப் பழிப்பாய்.

வேந்தன்.—இவள் நன்கு மொழிந்தனள்.

19. வெள்ளிலைக் குள்ளொளித் துள்ளசெம் முகிழினிம்
 மென்புயன் மிசைமுடிப் பியையும்வற் கலையினல்
 ஒள்ளிணைத் தனமறைப் புறுதலா னிவள்மெயின்
 ஒளிர்வனப் பிளமையின் வளம்விழிக் கரியதாம்.

இன்னும், இவள் பருவத்திற்கு இந்த வற்கலையுடை பொருத்தமாகாதேனும் இதுவும் ஓர் அணிகலன்போல இவளுக்கு அலங்கார அழகினை அதிகஞ் செய்யாமலா இல்லை.

ஏனெனின்,

20. பாசி சூழினும் பங்கய மேர்தரும்
 மாசுந் தண்கதிர் வாழ்திரு வண்குறி
 தேசிம் மெய்யள் சிறந்தனள் சீரைக்கும்
 யாசெய் யாகவி னின்ப வுருக்கணே.

சகுந்தலை.—(எதிர்நோக்கி) இந்த இளமையான மகிழமரம் காற்றாலசைக்கப்பட்டுத் தளிர்விரல்களால் என்னை விரைந்துவர அழைப்பதுபோலுள்ளது. நான் அதற்கு உதவவேண்டும். (என்று நடந்து செல்கின்றாள்)

பிரியம்வதை.—சகி சகுந்தலை! அங்கேயே சிறிதுபோது நில்லு.

சகுந்தலை.—ஏன்?

பிரியம்வதை.—நீ அப்படியே நின்றால் இந்த மகிழிளமரம் ஒரு கொடியணைந்து நிற்பதாகி நாயகனைப்போல விளங்குவது.

சகுந்தலை.—இதனாலேதான் நீ பிரியம்வதா.

வேந்தன்.—பிரியம்வதா என்பது வேறொன்றுமில்லை பிரியத்துடன் அவட்கு உண்மையுஞ் சொல்கின்றாளன்றோ! இவளுக்கோ எனின்,

21. தளிரெனும் படிசிவந் தனவிவள் இதழ்கள்தாம்
தழைஇளங் கிளைகளே அநுகரித் தனபுயம்
வளமிகும் மலரினெவ் வவயவங் களுமுளம் [மே.
மகிழ்வுடன் விழையும்யௌ வனநிறைந் தெதிரு

அநசூயை.—சகி சகுந்தலை! இதோ நீ வனசந்திரிகை என்று பெயரிட்ட நவமல்லிகையானது இளந்தேமாமரத்தினணைந்து தனக்கு மணமகனைத் தானே தெரிந்து தழுவிய மணமகளாக உள்ளதன்றோ! இதை நீ மறந்தனையா?

சகுந்தலை.—அப்படியாயின் நான் என்னையே மறப்பேன். (கொடியை உற்றுநோக்கி) சகி! இன்புறத்தக்க சமயத்திலே இந்தக் கொடிக்கும் இம்மரத்திற்கும் சேர்க்கை நிகழ்ந்துள்ளது. வனசந்திரிகையானது யௌவன பருவமடைந்து புதிதாகப் பூத்துள்ளது. இந்த இளமாமரமோ ஒத்து அநுபவித்தற்கு வல்லதாய் இளந்தளிர்விட்டுள்ளது. (என்று பார்த்துக்கொண்டு நிற்கின்றாள்)

பிரியம்வதை.—(புன்சிரிப்புடன்) சகி, அநசூயே! தோழி வனசந்திரிகையை எதன்பொருட்டு அதிகக் கவனமாக உற்றுப் பார்க்கின்றாள் தெரிந்தாயா?

அநசூயை.—நிச்சயமாக எனக்குத் தெரியவில்லை, நீ சொல்.

பிரியம்வதை.—எப்படி வனசந்திரிகையானது தனக்கு ஒத்த தருவை அடைந்து அணைந்துள்ளதோ, அவ்வாறே "இப்பெயர்பூண்ட நானும் எனக்கு ஒத்த வரனை அடைவேனோ" என்று (எண்ணுகின்றாள்).

சகுந்தலை.—(வெகுள்வாளாகி) இதுதான் உண்மையாக உன்புத்தியில் ஒளித்திருக்கும் உள்ள விருப்பம். (என்று கலசத்தினீரை வார்க்கின்றாள்)

வேந்தன்.—நங்கைமீர்! உங்களுடைய அன்பும் உண்மையும் நிறைந்த நல்லவார்த்தையே அதிதிக்கு இனிய விருந்தாகுக.

அநசூயை.—ஐயரே! அந்த ஏழிலைமரத்தின் குளிர்ந்த நிழலிலுள்ள மேடையில் அமர்ந்து வந்த இளைப்பை ஆற்றிக் கொள்வீர்.

வேந்தன்.—உண்மைதான்; காரியங்கள் செய்து தளர்ந் திருப்பதால் நீங்களும் இங்கேதானே இளைப்பாற்றியிருங்கள்.

அநசூயை.—சகி சகுந்தலை! வந்த விருந்தினை நாம் நன்கு உபசரிப்பது உசிதமான காரியமன்றோ! நாமும் அங்கே அமர் வோம். (என்று எல்லாரும் அமர்கின்றனர்)

சகுந்தலை.—(தன்னை மறந்தவளாகித் தனக்குள்) இவரைப் பார்த்த அளவிலே இத்தவவனத்திற்கு விரோதியான மன்மத னுடைய விகாரத்தில் நான் அகப்பட்டுக்கொண்டது என்னே!

வேந்தன்.—(எல்லாரையும் பார்த்து) ஆ! ஆ! பருவமும் வடிவமும் ஒருபடியாக இயைந்த மனப்பூர்வமான உங்கள் நேயம் மிகவும் இன்பந்தருவது.

பிரியம்வதை.—(மறைவில்) அநசூயை! சாதுரியத்துட னும் கம்பீரமான தோற்றத்துடனும் வந்து பிரியமான மதுர வார்த்தையைத் தந்தருள்கின்ற இவர் யாராக இருக்கலாம்? அரிய புகழ்வளர்த்தவர்போலக் காணப்பெறுகின்றார்.

அநசூயை.—எனக்குந்தான் குதூகலம் மிகுவது. (வெளிப் படை) பெருந்தகையீர்! உங்கள் மதுரமான வார்த்தையில் உண்டாய நம்பிக்கையே எனக்கு இந்தத் துணிவினைத் தருவ தால், உங்களைக் கேட்கின்றேன்: எந்த வேந்துமுனியின் குலம், உங்கள் உதயத்தால் நன்கு அலங்கரிக்கப் பெற்றது? எந்தத் தேசம் உங்களை இப்போது பிரிவதால் அதிகக் கவலை கூர்வது? எதன்பொருட்டு இத்திருமேனி இளையதாய் இனிதாயிருக்கும் நிலையினும் இத்தவவனம் புகும் வருத்தத் திற்கு உரியதாகியது?

சகுந்தலை—(தனக்குள்) உள்ளமே! நீ வருந்த வேண்டாம், நீ எதைப்பற்றிக் கவலை கொண்டாய் அதைப்பற்றியே அநசூயை வினவினாள்.

வேந்தன்.—(தனக்குள்) நான் என்னை எப்படி வெளியிடுவேன்? மற்று நான் என்னை எப்படி எனக்கே மறைத்துக் கொள்வேன்? இருக்க: இப்போது இவளுக்கு இப்படிச் சொல்கின்றேன். (வெளிப்படை) புருகுலவேந்தர்பிரானால், தர்மத்தை நிலைநிறுத்தும் அதிகாரத்தில் எவன் ஏவப்பெற்றுள்ளவன் அவன் நான்தான். அந்த நான் ஆசிரமத்துள்ளவர்கள் காரியம் இடையூறில்லாமல் நடைபெறுதல்பற்றி இந்தத் தர்மவனத்திற்கு இப்போது வந்துள்ளேன்.

அநசூயை.—தர்ம மார்க்கத்தில் நடப்பவர்கள் இப்போது நாதனுடையவர்கள் ஆனார்கள்.

சகுந்தலை.—(காதல்நாணங் காட்டுகின்றாள்)

இருதோழியரும்.—(இருவர் குறிப்பினையும் உற்றுநோக்கி) (மறைவில்) சகி சகுந்தலை! இப்போது நம்முடைய தந்தையார் இருக்கப்பெற்றால்—

சகுந்தலை.—(சினத்துடன்) இருந்தாலென்ன?

இருதோழியரும்.—தாம் உயிர்வாழ்தற்குள்ள இந்த முழுச் செல்வத்தைத் தந்து இவ்விருந்தினர்க்கு வேண்டியது செய்தனரராவர்.

சகுந்தலை.—தோழியரே! போய் விலகுங்கள். எதையோ உங்கள் உள்ளத்தில் வைத்துக்கொண்டே பேசுகின்றீர்கள். உங்கள் வம்புக்கு நான் காது கொடுக்கமாட்டேன்.

வேந்தன்.—நங்கைமீர்! உங்கட்கு உடன்பாடானால் நானும் உங்கள் தோழியைப்பற்றிச் சிறிது கேட்கின்றேன்.

இருதோழியரும்.—ஐயர் வேண்டும் இது, நிச்சயமாக எங்கட்கு அருள்செய்வதே யாகும்.

வேந்தன்.—காசிபபகவான் எப்போதும் பிரமசரிய விரதத்திலே நிலைத்தவர் என்பது எங்கும் விளங்கியதாகும்; உங்களுடைய இந்தத் தோழி அவர் பெற்ற புதல்வி என்பது எப்படியாகும்?

அநசூயை.—ஐயரே! தாமே உண்டாக்கிய குலகோத்திரத்தினாற் கௌசிகனென்று பெயர்சிறந்த மகத்தான பெருஞ்சீர்த்தியுடைய வேந்துமுனியைப் பற்றி நீர் கேள்வியுற்றிருப்பீர்.

வேந்தன்.—இருக்கின்றார், கேட்டிருக்கின்றேன், அப்புறம்.

அநசூயை.—எம் தோழியைப் பெற்றவர் அவர் என்று தெரிந்துகொள்வீர். அவரால் தனியே விடப்பட்ட இவளை எடுத்து உடம்பினைப் பேணி, வளர்த்தல் முதலாகப் பலபடியாலும் பாதுகாத்ததனால் தாதை காசிபர் இவளுக்குப் பிதா ஆயினர்.

வேந்தன்.—தனியே விட்டனர் என்ற வார்த்தையினால் எனக்குக் கிளர்ச்சிஉண்டாவது. ஆதிமுதல், இவள் வரலாற்றைக் கேட்க விரும்புகின்றேன்.

அநசூயை.—ஐயரே! கேளுங்கள். கௌதமி ஆற்றங்கரையில் முன்னொருகாலத்தில் அந்த வேந்துமுனிவர் கடுந்தவம் புரியும்போது என்ன காரணத்தினாலோ பயமடைந்த தேவர்கள் மேனகை என்று பெயர்பெற்ற விண்ணரமகளை இவர் விரதத்திற்கு இடையூறிழைக்கும்படி ஏவினார்கள்.

வேந்தன்.—ஆம், தேவர்க்கு இவ்வாறு அந்நியர் சமாதியில் அச்சம் உண்டு.

அநசூயை.—பின்னர் அங்கு வஸந்தகாலம் தன் வளங்களெல்லாந் தந்துவிளங்கும் அத்தருணத்தில் மனமருளச்செய்யும் அவள் வடிவழகைக் கண்விழித்து நோக்கி (என்று பாதியுரைத்து நாணத்தால் வாய்திறவாதிருந்தாள்).

வேந்தன்.—அப்பால் நிகழ்ந்தது தெரிந்ததே. எல்லாவிதத்தும் இவள் வானுலகத்து அரமகள் புதல்வியாயினள்.

அநசூயை.—வேறு, யார் ஆவள்?

வேந்தன்.—சொன்னது பொருத்தந்தான்.

20. மனிதத்தெரி வையர்கண்ணிது
வடிவெப்படி யுண்டாம்
தனிவிட்டொளிர் தருமின்சுடர்
தரையிற்பெற வின்றே.

சகுந்தலை.—(நாணத்தால்) முகங்கவிழ்ந்து நிற்கின்றாள்.

வேந்தன்.—என் மனந் தேடியபொருள் கிடைத்தற்கு அவகாசம் வாய்த்தது. ஆயினும் தோழியர்கள், பரிகாசமாக எடுத்துக்காட்டிய இவள் நாயக வேட்கையைக் கேட்டு என் உள்ளம் இருபிளவுபட்டு நடுங்குகின்றது.

**பிரியம்வதை.**—(புன்சிரிப்புடன் சகுந்தலையை முதலிற் பார்த்துப் பின்னர் நாயகனை எதிர்முகமாக்கி) ஐயன்மீர்! நீங்கள் இன்னுஞ்சில சொல்ல விரும்புவீர்போலும்.

(சகுந்தலை தன் றோழியைச் சுட்டுவிரலால் அச்சுறுத்துகின்றாள்)

**வேந்தன்.**—என் குறிப்பை நீ நன்றுயறிந்தாய் அம்மா. நல்ல சரித்திரங்களைக் கேட்கும் ஆசை மீதூர்தலால் அவற்றைப் பற்றி இன்னுஞ் சில கேட்க வேண்டியுள்ளது.

**பிரியம்வதை.**—இதில் ஆலோசனை வேண்டாம். தவநிலையில் உள்ளவர்கள் எவ்விதக் கட்டுப்பாடுமில்லாமல் எதையும்வினவத் தக்கவராவர்.

**வேந்தன்.**—உங்கள் தோழியைப்பற்றி இதுதெரிய விரும்புகின்றேன்.

27. மதனனைசெ லாமேயிவள் வைகாநச விரதம் [கொல்
மணமாகவ ழங்கும்வரை யுஞ்சேவைசெய் வாள்
முதிர்தேனிகர் விழியாலிணை துணையாகிய பிணையின்
முழுதாயுளும் வதிகிற்பள்கொல் அலதேலிவ
[ணேதான்.

**பிரியம்வதை.**—ஐயன்மீர்! தருமநெறியின் நடக்குமிடத்தும் இம்மகள் அந்நியர்வயத்தள் ஆவள். இதனால் இவளுக்கு அநுரூபமான வரனிடத்து இவளை அளிப்பதுதான் குருவின் நினைவாகும்.

**வேந்தன்.**—(தனக்குள்) வேண்டியதுதானும் கிடைக்காமற் போகாது.

28. நீயிதய மேயிவள்கண் அன்புபுரி வாய்காண்
நின்னைய மறத்தெளிய லாயதிது போழ்தே
தீயெனமுன் யாதினை வெரீஇயினை யதேதான்
தீண்டவுட லங்குளிர்செ யும்மணி தெரிந்தாய்.

**சகுந்தலை.**—(சினமுண்டவள்போல்) அநசூயே! நான் போகிறேன்.

அநசூயை.—எதன்பொருட்டு?

சகுந்தலை.—பொருத்தமின்றி இவள் பிதற்றுவதை ஐயை கௌதமியிடம்போய்ச் சொல்லுகிறேன்.

அநசூயை.—வந்துள்ள சிறந்த விருந்தினரை உபசரிப்பது செய்யாதுவிட்டு ஆசிரமத்தில் வளர்பவர் தம் விருப்பப்படி போவது சிறிதும் பொருத்தமாகாது.

[சகுந்தலை ஒன்றும் சொல்லாமற் புறப்படுகின்றனள்]

வேந்தன்.—ஆ! இவள் எப்படிப் போவள்? (அவளைப் பிடித்து நிறுத்த விரும்பித் தன்னையே நிறுத்திக்கொண்டு) காதல் மிக்கவரின் உள்ளநிகழ்ச்சியை ஐயோ அவர்கள் செய்கைகளே பிரதிவடிவுபோலக் காட்டும். நானே எனின்,

29. முனிமா மகள்பின் முறையின் றியலி
முதிரும் விநயந் தடைசெய் திவண்மீண்
டனனு கியயா னிடனிற் பெயரா
தவனு யுநடந் திவண்மீண் டவனே.

பிரியம்வதை.—[சகுந்தலையைத் தடுத்து] தோழீ! இப்படிப் போவது உனக்குத் தக்கதில்லை.

சகுந்தலை.—[புருவநெரிப்புடன்] எதன்பொருட்டு?

பிரியம்வதை.—எனக்காக நீ இன்னும் இரண்டு செடிகளுக்குத் தண்ணீர் வார்க்கக் கடன்பட்டுள்ளாய். ஆதலால் உன் கடனைக் கொடு. அப்பால் உன்னை விடுவித்துச் செல்லலாம். (என்று வலிந்து அவளைப் போகாது திருப்பினள்)

வேந்தன்.—நல்லாய்! செடிகட்குத் தண்ணீர் வார்த்ததாலேயே இத்தகைநங்கை இளைப்புற்றிருக்கின்றுள் என்று குறிப்பாற் றெரிகின்றேன். அப்படி யென்னெனின், இவள் பால்,

30. குடஞ்சுவ லெடுத்திவள் குலைந்தனள் புயன்முன்
கொழுங்கர தலங்கழி சிவந்தன வரம்பைக்
கடந்திவ ளுயிர்த்திரு தனம்புரி குலுங்கல்
கடந்தில வினுஞ்செவி யிடுஞ்சிரிட மென்பூ
நடுங்குதல் தடுத்தொளிர் தரும்வெயர் வரும்பி
நலிந்தொரு வலைப்படல் பொருந்திரு முகந்தான்

முடிந்ததவி ழப்பெற விரிந்தமுடி தன்னை
முயங்கொருகை யிற்பிடி கொளுந்தனி முயன்
[றே.

இதனால் இவளைக் கடன்தீர்ந்தவளாகச் செய்கின்றேன். (என்று தன் மோதிரத்தைக் கொடுக்க விரும்புகின்றான்)

இருதோழியரும்.—[அம்மோதிரத்திற் பொறித்துள்ள பெயர்க்குரிய எழுத்துக்களை முறையாய் வாசித்து ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்]

வேந்தன்.—போதும். என்னை வேறாகப் பாராட்டவேண்டாம். ஈது அரசனால் அளிக்கப்பெற்றது. என்னை அரசாளாக நினையுங்கள்.

பிரியம்வதை.—அப்படியானால் இந்த மோதிரம் ஐயர் விரலைவிட்டு நீங்குதல் தகாது. உங்கள் நன்மொழியாலேயே இவள் இங்கே கடன்தீர்ந்தவள் ஆனாள். தோழி சகுந்தலே! அருள் நிறைந்த பெரியராலோ அல்லது மகாராசராலோ நீ விடுபட்டனை. நீ இப்போது போகலாம்.

சகுந்தலை.—(தனக்குள்) நான் என்னை ஆள வல்லேன் என்றாலன்றோ; (வெளிப்பட) என்னை விடுக்கவும் தடுக்கவும் நீ யாரோ?

வேந்தன்.—(சகுந்தலையைப் பார்த்துக் கொண்டே தனக்குள்)

யாம் எவ்வாறு இவளை நினைவேமோ அவ்வாறே இவளும் எம்மை எதிர் நினைவளோ? மற்றும் எம் வேண்டுகோள் கிடைத்தற்கு இடனுண்டு. எங்ஙன மென்னின்,

31. என்னுரைக்குரை யிறைகலப்பதி
லெனினுமென்னுரை தன்செவி
இங்கெதிர்ந்து முகந்துகொள்வன
என்னலாமொளிர் தன்முகம்
என்முகத்தெதிர் தந்துபெய்தில
தெனினுந் தன்விழி யென்னின்வே
றெதனையும்முழு தும்புலன்கொள
வில்லையாலிவள் தன்கணே.

[திரைமறைவில்] ஓ! தவம்வல்லீர்! தவவனத்துள்ள பிராணிகளைக் காக்கும்பொருட்டுச் சித்தமாயிருங்கள். துஷ்யந்த மகாராஜர் விலங்கு வேட்டையாடிக்கொண்டு இங்கே நெருங்கி வருகின்றார்.

32. புரவிக்குர மெறியும்பொடி மரனிற்கிளை களிலே
புனல்பட்டன வுலரும்படி யிடுவற்கலை களின்மேல்
இரவிச்சுட ரடையும்பொழு தினிலுற்றசெ வொளி
எழுவிட்டிலி னினமொக்கந முடசத்தெதிர் [யின்
[விழுமால்.

இன்னும்,

33. விரைந்தசெல விற்கவ டடங்கவெதிர் மோதி [டிற்
விடர்த்தரு நுழைத்ததை யெடுத்தவொரு கோட்
றிரைந்தகொடி யின்றிரள் புனைந்தகயி றென்னச்
சேர்ந்துவர வீர்த்தபுறங் கால்களொடு மானின்
நிரந்தகுழு வெங்கணுஞ் சிதர்ந்திரிய நல்ல
நெடுந்தவ முறுந்தடை யிதன்வடிவ மென்னப்
பொருந்துமிர தம்விழி தெரிந்துவெரு வுண்டு
புகுந்தது பெருங்களி றறந்திகழ் வனத்தே.

(எல்லாருங் காதுகொடுத்துக் கேட்டுச் சிறிது மனங்கலங்கி னார்போல இருந்தனர்)

வேந்தன்.—(தனக்குள்) துன்பம்! ஐயோ! என்னைத் தேடி வருவது தவச்சாலைக்கு இடையூறுபண்ணுவதாகும் இருக்க; நானே முன் செல்லுகின்றேன்.

அநசூயை.—ஐயன்மீர்! காட்டில் உள்ள யானை இங்கு வருவ தென்ற இந்த வார்த்தையினால் நாங்கள் கலங்கி நடுங்கு கின்றோம். எங்கள் சாலைகளிற் செல்வதற்கு விடையருள்வீராக.

வேந்தன்.—(பரபரப்போடு) நங்கைமீர்! செல்லுங்கள். நாமும் இந்த ஆசிரமம் இனி எப்படி இடர்ப்படாதிருக்குமோ அப்படி முயல்கின்றோம்.

(என்ற அளவில் எல்லோரும் எழுந்தனர்)

இருதோழியரும்.—ஐயன்மீர்! உங்கட்குத் தக்கவாறு உப சாரம் ஒன்றுஞ் செய்யாத நாங்கள் உங்களைத் திரும்பவும்

இங்குப் பார்க்கவேண்டுமென்று ஆரியராகிய உங்களிடம் விண்ணப்பஞ் செய்வதில் எங்கட்கு வெட்கம் உண்டாகின்றது.

வேந்தன்.—இப்படியன்று, நங்கைமீர்! நீங்கள் இவ்விதம் தந்த தரிசனம் ஒன்றாலேயே நான் பெரிதும் உபசரிக்கப்பெற்ற வன் ஆனேன்.

அநசூயை.—நம் அம்மா உன்னைப்பற்றிக் கவலையாயிருப் பாள். நாமெல்லாம் போவோம்.

[சகுந்தலை தோழிகளோடு சற்று நடக்கலுற்று]

அநசூயே! புதிய தர்ப்பை நுனி என்காலிற் குத்திக்கொண் டுள்ளது. மருத்தோன்றியின் கிளையில் என் வற்கலை மாட்டிக் கொண்டிருக்கிறது. இவற்றைக் களைந்து விடுக்கும்வரைக்கும் என்னைப் பிடித்துக்கொள்வாயென்று [இல்லாதவற்றை யேறிட் டுக்கொண்டு தாமதித்து நின்று, அரசனையே கடைக்கண்ணாற் பார்த்துத் தோழியரோடு நடந்துசென்றனள்]

வேந்தன்.—ஊரில் திரும்புவதற்கு விருப்பம் நன்கு எழ வில்லை. என் உடன்வந்தவரைப் போய் எதிர்கண்டு அவரை யெல்லாம் இவ்வாசிரமத்திற்கு அதிக தூரமில்லாமல் நிறுத்தி வைக்கின்றேன். நான் சகுந்தலையின் பிரியமான செய்கைகளி னின்று என் உள்ளத்தை மீட்டுக்கொள்ள நிச்சயமாய் வலி யில்லேன். என்னிலை என்னவென்றால்,

34. உடன்முனஞ்செல் கின்றதென்
 னுளனிலாம லோடும்பின்
திடவெதிர் வளிக்கொடிச்
 சீனகோசி கத்தினே.

(என்று எல்லாருஞ் செல்கின்றனர்)

(முதலாம் அங்கம் முற்றும்.)

# இரண்டாம் அங்கம்.

[இதன் பின்னர் வருத்தங் காட்டிக்கொண்டு விதூழகன் வருகின்றான்]

விதூழகன்.—(பெருமூச்செறிந்து) ஆ! விலங்கு வேட்டையாடும் இந்த வேந்தனுக்கு, யான் தோழனான தன்மையால் கெட்டுத் தொலைந்தேன். இது மான், இது பன்றி, இது புலி என்று சொல்லிக்கொண்டு நடுப்பகலிலுங்கூடக் கோடையால் இலையுதிர்ந்த மரங்களின் சிறுநிழலிற் பல காட்டுவரிசைகளில் திரிந்தலைகின்றேன். இன்னும் இலையுதிர்ந்து கலந்து கசாயம் போலுள்ள, மலையருவியிற் சிறிது வெதும்பிய நீர்தான் யான் குடிப்பது. வேளைதப்பிய வேளையில் இருப்புச் சூலங்களிற் காய்ச்சிய அதிகமான ஊன்வகைகளே யான் உணவாக உண்பன. இன்னும், குதிரையின்பின் தொடர்ந்து ஓடியதனால் மூட்டுக்கள் விலகிப்போயுள்ள எனக்கு இரவிலுங்கூட நல்லதூக்கம் என்பதே கிடையாது. மற்று ஒருகால் தூக்கம் வரத் தலைப்பட்டாலும் விடியற்குமுன்னே நாய்களைப் பிடித்துள்ள இந்த வேசைமக்கள் விலங்குவேட்டை யாடுவதற்காகக் காட்டை வளைக்கும் ஆரவாரம் என்னை விழிக்கச்செய்யும். இந்த அளவில்மட்டும் துன்பம் தொலைந்ததில்லை. புண்கட்டியின் மேலே ஒரு பிளவை யுண்டானதாகவுள்ளது. நேற்றோ என்றால் இவர் தம்முடன்வந்தவர்கள் பிற்பட்ட சமயத்தில் அங்கே ஒரு கலைமானைத் தொடர்ந்துபோய் ஆசிரமசாலையுள் நுழைந்து அங்குள்ள சகுந்தலை என்று பேர்பூண்ட தவத்தவர் கன்னியை என் தீவினையாற் பார்த்து, அது முதல் ஊருக்குத் திரும்பிப் போவதுபற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லாமலிருந்தனர். இப்போதுங்கூட இவர் அவளையே நினைந்துகொண்டிருக்கும் போதுதான் இவர் கண்ணிற்கு விடியல் தோன்றிற்று. எனக்கு என்ன வழி. இதுவரை இவர் காலைக்கடனை முடித்திருக்கக்கூடும். இவரைப் போய்ப்பார்ப்பேன். (என்று சூழப்பார்த்து) இதோ அம்பும் வாளும் ஏந்திய

கரங்களுடன் காட்டுமலர்மாலையை அணிந்துள்ள யவன மாதர் புடைசூழ, இங்கே என் துணைவர் வருகின்றார். இருக்க. நான் அவயவம் முரிந்து முடம்பட்டவன்போலக் காட்டிக்கொண்டு நிற்கிறேன். இப்படியாவது எனக்குச் சிரமபரிகாரம் உண்டாகுக. [என்று ஒரு தடிக்கட்டையைப்பற்றிச் சாய்ந்து நிற்கின்றான்.]

வேந்தன்.—[முன் சொன்னபடி பரிவாரத்துடன் வந்து] (தனக்குள்)

1. விரும்பினள் கிடைப்பரிய ளாயினுமெ னெஞ்சோ
மீண்டிவ ளுளங்கொணிலை வைத்தெரிய மேவும்
பொருந்தமதன் செய்கைநிறை வேறவிலை யேனும்
புக்கிருவ ரொத்தவிழை வத்தகைய வின்பாம்.

[புன்னகைகொண்டு]

இப்படித் தம்மால் விரும்பப்பட்டார் மனப்போக்கையும் தம் நினைவிற்கு ஒப்பதாக எண்ணிக்கொண்டு அவரை வேண்டினவர் இகழப்படுகின்றனர். அஃதெப்படி யெனின்,

2. பிறிதின்விழி வைத்தும்முற வுதவுங்கடை நோக்கும்
பெருகுங்கடி தடனுல்மெல விளையாடிய நடையும்
நிறுவுஞ்சகி யேகேலென விவள்வைதது மெல்லாம்
நினைவென்னிட னையோதன தேகாமி நினைக்கும்.

விதூழகன்.—[அப்படியே சாய்ந்துகொண்டு] ஏ, நண்பரே! என் கைகால்கள் எழவில்லை. வாய்மட்டில் உம்மை வெல்க என்று வாழ்த்துவது.

வேந்தன்.—[புன்சிரிப்புடன்] உன் உடம்பிற்கு இவ் விடையூறு எப்படி வந்தது?

விதூழகன்.—நீர்தாமே கண்ணைக் குத்திவிட்டுக் கண்ணீர் ஏன் வழிகின்றதென்று கேட்கின்றீர்.

வேந்தன்.—உண்மையாக எனக்கொன்றும் தெரியவில்லை.

விதூழகன்.—ஏ, துணைவரே! இந்த நீர்வஞ்சியானது கூனனைப்போல வளைவது தன் இயற்கையினாலோ அல்லது நதியின் வேகத்தாலோ?

வேந்தன்.—அங்குக்காரணம் நதிவேகந்தான்.

விதூஷகன்.—எனக்கும் உம்மாலேதான்.

வேந்தன்.—எப்படிப் போலும்.

விதூஷகன்.—நீர் ராஜ்யகாரியங்களை இவ்வாறு அறவே தள்ளிவிட்டுத் துன்பப்படுதற்குரிய இவ்விடங்களில் வனவேடர் தொழிலை மேற்கொண்டுள்ளீர். நிச்சயமாக யாஞே தினந் தோறும் விலங்கின் அடியைத் தொடர்ந்தோடியதனுற் சந்து பிறழ்ந்து என் உடம்பிற்கு எசமானன் யானில்லை யானேன். இதனுல் என்பால் நீர் தயைசெய்வீர். ஒரு தினத்திற்காவது என்னை ஓயவிடும்.

வேந்தன்.—(தனக்குள்) நண்பஞே இப்படிப் பேசுகின்ருன். நாஞே காசிபருடைய கன்னியை நினைந்துநினைந்து விலங்குவேட்டையில் முகந்திரும்பாத மனமுடையேனுகின் றேன். ஏனென்ருல்,

3. யான்விழைப வட்குடன்வ திந்தினிய பார்வை
யாவைபயில் வித்தவவை மான்தொகை குறித்தி
ஈன்ஒருகொ டுங்கணைதொ டுப்பதெனநாணை [யான்
யேற்றியிது கார்முகம்வ ளைக்கவலி யில்லேன்.

விதூஷகன்.—[அரசர் முகத்தைப்பார்த்து] பெருந்தகையீர்! இங்கே ஏதொன்றையோ உள்ளத்தில் வைத்து உமக்குள்ளே பேசிக்கொள்கின்றீர். நான் காட்டிலே யன்ருே புலம்பினேன்.

வேந்தன்.—(புன்சிரிப்புடன்) வேறென்ன. என் நண்பன் மொழிந்தது கடக்கப்படாதென்று நினைந்துகொண்டிருக்கிறேன்.

விதூஷகன்.—எந்நாளும் வாழ்வீர்! [என்று சொல்லிப் போக விரும்புகின்ருன்]

வேந்தன்.—நண்ப! நில்லு. இன்னும் யான் சொல்லவேண்டியது உள்ளது.

விதூஷகன்.—ஆணை செய்யும்.

வேந்தன்.—இளைப்பாறியபின் வேருெரு சிரமமில்லாத காரியத்தில் எனக்கு நீ துணைசெய்யவேண்டும்.

விதூஷகன்.—என்ன அது? சர்க்கரைக் கொழுக்கட்டை தின்பதிலா?

வேந்தன்.—எதனிலென்று சொல்வேன் கேள்.

விதூழகன்.—கணமும் விடாது கொள்வேன்.

வேந்தன்.—யாரங்கே?

வாயிலோன்.—ஏந்தலே! ஆணை செய்யவேண்டும்.

வேந்தன்.—ரைவதக! படைத்தலைவனை இங்கே அழைத்துக்கொண்டுவா.

வாயிலோன்.—அப்படியே (என்று நடந்து சென்று படைத்தலைவனோடு மீண்டுவந்து அவனைப் பார்த்து)

ஏந்தலானவர் உமக்கு ஏதோ ஆணைமொழி செய்யும் ஆவலுடன் இந்த வழியில் விழிவைத்து எதிர்பார்த்துள்ளனர். ஐயன்மீர் விரைந்து அருகே போம்.

படைத்தலைவன்.—[வேந்தனைச் சிறிது தூரத்தே பார்த்து]

விலங்குவேட்டையிற் கண்ணுக்குத் தெரியாத குற்றங்கள் தலைவனுக்கும் உண்டாமென்பர். இங்கே கேவலம் குணத்தையே உண்டாக்கி நின்றது. அவ்விதமே உள்ளனர் வேந்தர்.

4. உலவெப்பொழு தத்துஞ் சிலையிற்பிணி
உரிஞுப்பெற லான்முன் புறன்மிக்கது வலிமை
இலகெற்பரி தியின்வெங் கிரணத்தொகை பேணி
யிழிவுற்றறசில் வியர்வா லிறுகுற்றுள திவன்மெய்
மெலிவுற்றது பொருவத் தெரியப்படு மெனினும்
விறல்தொக்குள வியல்போ டிலகுத்திற மேவி
மலையிற்றிரி களிறே நிகரத்திகழ் தேவன்
வளர்வுற்ற பிராணத் திடனிற்பொலி குவன்
[மெய்.

என்று அருகிற்போந்து, என்னுடைய வேந்தரே! வெல்க! காடுகளில் விலங்குகளை வளைந்துகொண்ட பின்னரும் ஏன் இங்கே வெறுமையே இருக்கவேண்டும்.

வேந்தன்.—ஏ, படைத்தலைவ! விலங்குவேட்டத்தைப்பற்றி மாடவியன் மிகவும் பழித்துச் சில சொல்லியதனால் எனக்கு அதன்கண் மனக்கிளர்ச்சி மங்கிவிட்டது.

விதூழகன்.—(தனக்குள்) இதைப்பற்றிப் பேசுதற் கிடனில்லாமற் செய்கிறேன்.

(வெளிப்படை) என் துணைவரே! அவள் தவத்தோர்கன் னியா யிருந்துங்கூட நம்மால் வேண்டத்தக்கவளாகப் பார்க்கப் படுகின்றளா?

வேந்தன்.—துணைவ! புருகுலவேந்தர் உள்ளம் விலக்கிய பொருளின்கட் செல்வதில்லையே!

விதூழகன்.—அப்படியாயின் எப்படி இது?

வேந்தன்.—

8. விண்சுர மகட்குதய மாகியவ ளன்னை [னத்
விடுத்தபின் முனிக்கிவ ளடுத்தனள்பெ ணென்
தண்ணெனவ மாலிகை யுதிர்த்தமல ரங்கட்
டந்தவொ ரெருக்கின்மிசை வந்துவிழ லொத்தே.

விதூழகன்.—ஏ, துணைவரே! பேரீச்சங்கனித்திரளையைத் தெவிட்டிய ஒருவன் புளியம்பழத்தில் வைத்த ஆசை எவ் விதமோ அவ்விதமேதான் பெண்மணிகளை இகழ்ந்து, நீர் இவ ளைப் பெறவேண்டி வைத்த காதல்.

வேந்தன்.—அவளை இன்னும் நீ கண்டிலை; கண்டனையேல் இவ்வாறு கழறாய்.

விதூழகன்.—உமக்கும் இத்தகைய வியப்பினை உண்டாக் கியதனால் அவ்வடிவம் உண்மையாக மிகவும் இனியதேயாகும்.

வேந்தன்.—துணைவ! பலவென்ன,

9. விதிதன்மன தாலோஉயர் வடிவோவிய மெழுதி
விரவும்முயிர் கொளுவிப்பெணின் மணியைப் பிறிதுயர்வின்
றெதிர்நல்கிய படியென்றெளிர் குவளென்னுள மவள்நல்
லெழிலுந்தரு மயன்வன்மையு மெணிநன்றுணர் தொறுமே.

விதூழகன்.—இவ்விதமானால் இதுவரையும் உள்ள அழகிய நல்லாரெல்லாம் தள்ளுண்டனர் ஆவர்.

வேந்தன்.—இதுவும் என் மனத்தில் உள்ளதுதான்.

10. மோவா மலருகிர் கிள்ளா முறிதுளை
முயலா மணிபுதி தினிதாய்வாய்
மேவா மதுமுழு தறன்வாழ் வமலமெய்
விதியா ருணவிவ ணெணுமோரேன்.

விதூழகன்.—அப்படியாயின் நீர் அவளை விரைவிலே காத்துக்கொள்ளவேண்டும். இல்லையேல் இங்குதியின் நெய் தடவிப் பிசிர்பட்ட தலையையுடைய யாரோ ஒரு காட்டு மனிதனை தவசி கையில் வீழ்ந்தொழிவள்.

வேந்தன்.—அத்தகையாள் அந்நியர் வசமாயுள்ளவள். அவளுக்குரிய குரவரும் இங்கில்லை.

விதூழகன்.—பின்னை நும்பொருட்டு அவள்கண்ணிற் காதற்குறிப்பு எப்படி? (நிகழ்ந்தது)

வேந்தன்.—மாதவர்மகளிர்க்கு ஆசாரவிநயம் இயல்பே யாகும். அங்ஙன மாயினும்,

11. என்மு கத்தையெதிர் தந்த போதுவிழி
யிணைகள் மாறுமிள முறுவலோ
தன்மு கத்துதய மாம தோபிறிது
தான்கு றிக்குமி விதங்களால்
அன்ன வள்விநய முன்த டுப்பதுசெய்
வதின்ம தன்புரியு மவ்வினை
நன்ன ரெற்குவெளி வரவு மில்லைநனி
மறைவு மில்லையவள் நடையிலே.

விதூழகன்.—உம்மைப் பார்த்தமாத்திரமே உம்முடைய மடியில் ஏறுவாளா என்ன?

வேந்தன்.—எம்முட்பிரிவுண்டாகி அவள் தோழியரோடு புறப்படும்பொழுதில் அவள் நாணம் உடையவளாயிருந்தும் அவள் தன் உள்ளக்குறிப்பு மிகவும் புலப்படும்படி யிருந்தது. அஃதெப்படியென்றால்,

12. ஒருகாரண மின்றிக்குசை நுதிதைத்தது பதமென்
றுரைதந்துமெ லியல்தங்கினள் சிறிதேயடி வைத்து
மரமேவிய கிளைவற்கலை பற்றுமலு முகனை
வளைவித்தது விடுவிப்பவ ளெனநின்றன ளவணே.

விதூழகன்.—அப்படியானுல் வழிக்குணவு கட்டிவைத்துக் கொள்க. இந்தத் தவவனம் உம்மால் உபவனமாகச் செய்யப் படுவதென்று காண்கின்றேன்.

வேந்தன்.—துணைவ! இங்குள்ள தவசிகள் ஒரு சிலர்க்கு நான் இன்னவன் என்று தெரிந்தவன் ஆவேன். அதைப்பற்றி ஆராய்ந்து பார். நான் என்ன காரணத்தை ஏறிட்டுக் கொண்டு மறுபடியும் ஒருதரமாவது அந்த ஆசிரமத்துள்ளே நுழையலாம்.

விதூழகன்.—என்ன காரணம் ஏறிட வேண்டும். நீர்தாம் வேந்தராவீரே!

வேந்தன்.—அதனுல் என்ன?

விதூழகன்.—காட்டு விளைவாய நீவாரநெல்லில் ஆறி லொருபங்கு எமக்குக் கடமையிடுங்கள் என்று (கேட்கலாமே).

வேந்தன்.—ஏ, மடவோய்! காப்பதற்காக இவர் செலுத்துங் கடமைப் பங்கு வேருகும். அது பெருமணிக் குவியலினும் எதிர்கொண்டு ஏற்று மகிழத்தக்கது என்று தெரிவாய். பார்,

13. வருணத் தவர்நின் றரசர்க் கெழுமவ்
வளஞ்ஞெ நிலையா தழியும் வனம்வாழ்
உரிமைத் துறவோர் தவநற் பயனின்
றுதவா ரொருபங் கழியா துளதே.

[திரைமறைவில்] பெருமகிழ்ச்சி. யாம் இருவரும் தேடியது தானே கிடைத்தவர் ஆனேம்.

வேந்தன்.—(செவிகொடுத்துக் கேட்டு) உபசாந்தத்தொடு தீரமும் உடையது இந்தத்தொனி· இது தவசிகள் பக்கம் நின்று உண்டாயது ஆகும்.

வாயிலோன்.—(வந்து) வெல்க, ஏந்தலே! இதோ ருஷி மக்கள் இருவர் வாயிலிடத்து நின்றுகொண்டிருக்கின்றனர்.

வேந்தன்.—அத்தகையராயின் தாமதித்தல் கூடாது. அவ் விருவரையும் உள்ளே வரவிடு.

வாயிலோன்.—அப்படியே வரவிடுகிறேன் (என்று சென்று ருஷிமக்களோடு கூட வந்து) இதுதான் வழி, பகவான்களே!

[இருவரும் வேந்தனைச் சிறிது தூரத்தே காண்கின்றனர்]

முன்னவர்.—என்ன ஆச்சரியம்! இவர் வடிவம் மிகவும் ஒளி விட்டு விளங்குமேனும் விசுவசிக்கத்தக்கதாக உள்ளது. அல்லா

மனும் ருஷிகளினின்றும் அதிக வேற்றுமையில்லாத வேந்தர்க்கு இது தகுவதேயாம். எப்படி எனின்,

14. அனைவரும் பயனுணற் குரியவா சிரமமிவ் [யோ
வரசன்கைக் கொண்டுள னெனினும்வண் காவல்
கினையடைந் திவ்னுநற் றவநிதந் தொகைசெய்தே
யிலகுவன் பொறியடங் கியவயத் திவனைநன்
முனியெனப் புரவலப் பெயரைமட் டினுமதன்
முனநிறீஇ யினியபுண் ணியமொழித் தொடை
அனுதினம் பரவுதம் பதியர்சா ரணரடிக் [யினூல்
கடியிசைப் பதுவிசும் பகமினுந் தொடுமரோ.

மற்றையர்.—(தாண்டாயனன்) ஏ, கௌதம! இவர் இந்திரன் தோழரான துஷ்யந்த மகாராஜர்.

முன்னவர்.—(கௌதமன்) அதனால் என்ன?

மற்றையர்.—அதனாலன்றோ,

15. எயில்வன் கணையம் மெனுநீள் புயனு
விருணீர்க் கடலெல் லையின்மண் முழுதும்
இயலிவ் வொருவன் தனியாள் வதுதான்
இவணற் புதமாய் நினைதற் கிலையால்
அயல்விண் ணிளமங் கையர்கொள் பகையால்
அசுரத் தொகைவெல் வதைமற் றிவன்கை
வியனாண் சிலையின் னிடையும் சதவேள்
வியனெண் குலிசத் திடையும் விழைவார்.

இருவரும் (அருகில் வந்து) அரசரே! நும் செங்கோல் வெல்வதாக!

வேந்தன்—(அணை நின்றெழுந்து) நும் இருவரையும் அடி பணிகின்றேன்.

இருவரும்.—நலமே விளைக!

(என்று பழம் முதலியவற்றைக் கையுறையாக இடு கின்றனர்)

வேந்தன்.—[தலைவணங்கி ஏற்றுக்கொண்டு] அடியேனுக்கு ஆணையிட்டருள ஆவல்கூர்கின்றேன்.

இருவரும்.—நீர் இங்கு வந்திருப்பதை ஆசிரமத்தில் வாழ்பவர் தெரிந்து அவர்கள் உம்மை வேண்டிக்கொள்கின்றனர்.

வேந்தன்—என்ன ஆணை செய்தருள்கின்றனர்?

இருவரும்.—மகருஷி கண்வர் இவ்விடத்தில் இல்லாமையால் அரக்கர்கள் வேள்விக்கு இடையூறு செய்கின்றார்கள். இதன் பொருட்டு ஒருசிலதினம் சாரதியோடும் படைத்துணையோடும் எழுந்து வந்துதங்கி, எங்கள் ஆசிரமம் சிறந்த காவலையுடையதாகச் செய்யவேண்டும் என்பதேயாம்.

வேந்தன்—அருளப்பெற்றேன் ஆனேன்.

விதூஷகன்—[மறைவில், அரசனை நோக்கி] இந்த வேண்டுகோள் இப்போது உமக்கு அநுகூலமேயாகும்.

வேந்தன்—ரைவதக! கணையுஞ் சிலையும் எடுத்துக்கொண்டு தேரினை அருகிற் கொணர்ந்து நிறுத்தும்படி சாரதியிடத்தில் நான் சொன்னதாகச் சொல்.

வாயிலோன்.—ஏந்தலே! வெல்க! எப்படி ஆணையோ அப்படி (என்று போகின்றான்).

இருதவமக்களும்.—(மகிழ்ச்சியுடன்)

16. உன்மரபின் முன்னவரை நன்குதொடர் தந்த
வுன்செய லிதோமிகவு மொத்ததெனலாகும்
புன்கணுள ருக்கபய வேள்விபுரி யக்கை
பூண்டவொரு காப்பினர்பொ யில்லைபுரு மன்னர்.

வேந்தன்.—(இருவரையும் நோக்கி) பெரியீர்! இருவீரும் முன்னர்ச் சென்றருளுங்கள். யான் உங்கள் அடியைப்பற்றியே வந்துவிடுகின்றேன்.

இருதவமக்களும்.—அரசரே! வெல்க! என்று செல்கின்றனர்.

வேந்தன்.—மாடவிய? நீயும் சகுந்தலையைத் தரிசிப்பதற்குக் குதூகலம் உள்ளனையா?

விதூஷகன்.—முதலில் அது வெள்ளமாகப் பெருகிற்று. இப்போது அரக்கர் செய்தியைக் கேட்டதிலிருந்து துளி கூடப் புறப்படவில்லை.

வேந்தன்.—அஞ்சவேண்டாம். நிச்சயம் என் அருகிலேயே இருக்கப்போகின்றாய்.

விதூழகன்.—அப்படியானால் அரக்கரினின்று காப்பாற்றப் பெற்றவன் ஆவேன்.

வாயிலோன்.—(வந்து) வெல்க! ஏந்தலே! தேர் ஸித்தமாக வந்துள்ளது: என் வேந்தருடைய விஜயப்பயணம் எதிர் பார்க்கப்படுகிறது. (பின்னும்) தேவியின் திருவாணை ஓலையைக் கொண்டு நகரத்தினின்று கரபகன் வந்து வாயிலின் உள்ளான்.

வேந்தன்.—(ஆதரவோடு) என் மாதா அவர்களால் அனுப் பப்பட்டவனா என்ன?

வாயிலோன்.—பின் என்ன?

வேந்தன்.—அவனை உடனே வரவிடு.

வாயிலோன்.—அப்படியே (என்று சென்று கரபகனுடன் மீண்டுவந்து கரபகனை நோக்கி)

இதோ வேந்தர் உள்ளனர்; அருகிற்போ.

கரபகன்.—(அருகிற் சென்று) ஏந்தலே! வெல்க, வெல்க! லோகமாதேவியார் ஆணையிடுகிறார்கள்—"வரும் நான்காம் நாளில் என் உண்ணாவிரதம் முடிவது. அந்நாட்பாரணையில் நீடுவாழும் நீர் அவசியம் வந்து உடனிருக்க வேண்டும்" என்பதே.

வேந்தன்.—இப்பக்கத்தில், தவத்தோர் காரியம் உள்ளது. இப்பக்கத்திற் குரவர் ஆணையுள்ளது. இரண்டும் கடக்க முடியாதனவாகும். இப்படியிருக்க நான் இவற்றுள் எதைத் தள்ளி எதைச் செய்ய இருப்பேன்.

விதூழகன்.—திரிசங்குபோல நடுவில் இருமே.

வேந்தன்.—விளையாட்டு வார்த்தை போதும். நான் உண்மையாகவே மயங்குகின்றேன்.

17. செயப்புகும் வினைக்கிடன் பிரிந்துபிற வாகிச்
சேய்மையவெ னுள்ளமிரு பங்குபட வோடும்
அயற்பொறை யெதிர்ப்பட வதிற்றடை யுறப்பெற்
றவண்இரு புறஞ்செலு நதிப்பெருவெள் ளம்போல்

(பின்னும் நன்றாக ஆராய்ந்துகொண்டு)

தோழ! நீ நம் தாயாரால் என்னைப்போலப் புதல்வனாகவே கொள்ளப்பட்டுள்ளனை. இப்போது மீண்டு சென்று இங்கே தவத்தோர்காரியம் கவனமாகச்செய்யவேண்டியுள்ளதென்று நம்

தாயார்க்குத் தெரிவித்து அங்கே புதல்வன் செய்யுங்காரியம் எல்லாம் நீயே செய்தற்குத் தக்கவன் ஆகின்றாய்.

விதூஷகன்.—அரக்கர்க்கு அஞ்சினவனென்று என்னை நீர் கருதவேண்டாம்.

வேந்தன்.—[புன்சிரிப்புடன்] பார்ப்பனப் பெருந்தகை ஆகிய நின்கண் இஃது எவ்விதம் உண்டாகும்.

விதூஷகன்.—அப்படியானால் ஓர் இளங்கோமகன் எவ்விதஞ் செல்வனோ அவ்விதமே யான் செல்லவேண்டும்.

வேந்தன்.—தவவனத்திற்குத் தடையாயுள்ள இவற்றைத் தள்ள வேண்டியதுதான். இங்குள்ள எல்லாவற்றையும் உன்னுடன்கூடவே தொடர்ந்து பயணங்கொள்ளும்படி ஏவுகின்றேன்.

விதூஷகன்.—[கர்வத்துடன்] அப்படியானால் இப்போதே நான் இளவரசாகிவிட்டேன்.

வேந்தன்.—(தனக்குள்) இந்த வடு (பையன்) நிலையான புத்தி உடையவன் ஆகான். என் உள்ளத்து வைத்த வேண்டுகோளை எப்போதாவது அந்தப்புர மங்கையர்க்குச் சொல்லிவிடுவன். இருக்க. இவ்விதம் இவனுக்குச் சொல்லுகிறேன். (என்று விதூஷகனைக் கையிற் பற்றிக்கொண்டு) (வெளிப்படை) தோழ! மகருஷிகளைப் பெருமை பாராட்டியே நான் ஆசிரமத்திற்குச் செல்கின்றேன். மாதவர் மகளாகிய சகுந்தலையின் ஆசையால் இல்லை என்பது உண்மையே. பார்,

18. மான்குழவி போலமத னன்விழிகொ ளாமல்
 வளர்ந்தமக ளெங்கணுளள் எங்கணுளம் யாமே
 யான்முதலில் நண்பவிளை யாடசதி யாய்நிற்
 கியம்புகுழ றன்மொழி யெணங்கொளல்மெ யென்றே.

விதூஷகன்.—பின்னே எப்படி (நினைப்பேன்)?

என்ன,

(எல்லோரும் போயினர்)

இரண்டாம் அங்கம் முற்றும்.

## மூன்றாம் அங்கம்.

[முன்னுரை.]

[பின் தர்ப்பைகளை எடுத்துக்கொண்டு குருமாணாக்கன் வருகின்றான்].

மாணாக்கன்.—என்ன ஆச்சரியம்! மகத்தாய மேன்மையுள்ளவர் ஆவர் நம் துஷ்யந்தமகாராசர். இவர் ஆசிரமத்துள் நுழைந்த அளவிலே நாம் நடத்தும் காரியங்கள் எல்லாம் இடையூற்றினின்று நிச்சயமாய் விடுபட்டன.

1. உங்கார நேர்கொண்டு விண்ணெழுந்த
ஒலியொன்றி னிடையூ றிருந்தூர மோடின்
அங்கண னவன்வானி நாண்வைப்ப னேலென்
னுமென்றி யாமெந்த வாரேது வேமோ.

வேதியிற் பரப்புதற்குரிய இந்தத் தர்ப்பைகளை இப்போதே புரோகிதரிடம் சேர்ப்பிக்கின்றேன். (என்று)

[சுற்றிப்போய்ப்பார்த்துச் சிறிதுதூரத்தினின்று ஆகாயத்தில்] ஏ பிரியம்வத! யார்க்காக இந்த விலாமிச்சை இழுதும் தண்டின் உள்ள தாமரையிலையுங் கொண்டுபோகின்றாய். (செவிசாய்த்து) என்ன சொல்கின்றாய்?

வெயிலின் அலைந்ததால், சகுந்தலைக்குக் கடுமையான உடல் நலிவுண்டாயிருக்கிறதென்றும் அவளுக்கு உடல் வெப்பந் தீர்ந்து குளிர்தற்காக என்றும் சொல்கின்றாயா?

அப்படியாயின் விரைந்து சென்று வேண்டியதைக் கவனித்துச் செய். அவள் நம் குலபதியாகிய பகவான் கண்வருக்குப் பிராணன் ஆக உள்ளவள் என்பது நிச்சயம். அதற்குள் நானும் யாகத்தில் மந்திரித்த சாந்திநீரை அவள்பொருட்டுக் கௌதமி கையிற் கொடுத்து வரவிடுகிறேன். [என்று சொல்லிச் சென்றனன்]

இது தனிமொழி.

தது. இவளே என் மனத்திற்கினிய மேலான காதலி. இவள் சிலாவட்டத்திற் பரப்பிய நன்மலர்ப்பாயலில் அதிசயப்பட அமர்ந்து இருதோழியராற் பணிசெய்யப்பெறுகின்றனள். இருக்க, இப்போது இங்கேநின்று இவர்கள் ஒருவர்க்கொருவர் அன்புகூர்ந்து நம்பிக்கையாகப் பேசுவனவற்றைக் காதுகொடுத் துக் கேட்கிறேன் [என்று பார்த்துக்கொண்டு நிற்கின்றான்.]

[பின்னர்ச் சகுந்தலை முன்சொன்னவாறு தன்தோழிய ருடன் அமர்ந்து உரையாடிக்கொண்டிருப்பவளாகத் தோன்று கின்றனள்.]

தோழியரிருவரும் [அருகினின்று விசிறிக்கொண்டு]

தோழி சகுந்தலை! இந்தத் தாமரையிலைக்காற்று உனக்கு இன்பமாயுள்ளதா?

சகுந்தலை.—என் சகியீர்! நீரிருவரும் எனக்கு வீசுகின்றீர் களா?

[தோழியரிருவரும் தம்துயரத்தை அநுகரித்துக்காட்டித் தம்முள் ஒருவரொருவரை நோக்குகின்றனர்.]

வேந்தன்.—இ ந் ந ல் லா ள் சகுந்தலை கடுமையான நலி வடைந்தவளாகத்தான் காணப்படுகின்றாள். இதுதான் என்ன வெயிலின்கொடுமையோ அல்லது என் உள்ளத்தினுள்ளது போன்ற மன்மதன்கொடுமையோ இரண்டுவிதமாயும் என் நெஞ்சு நினைவது. [காதலோடு உற்றுநோக்கி] இதில் ஐயமே உண்டாவதில்லை.

9\. முலையிற் றடவுவி லாமிச் சைக்குளி
 ரிழுதோ டொருவலை முளரித்தண்
டுலரச் சிதைபடும் விழைதக் கவள்வடி
 வுறுகட் படினுந லெழில்கூரும்
நலிவெப் பிணைமத னெடுநட் பகல்வெயி
 லனியொப் பெனவுத வுறுமேனும்
அலைவிற் கவினிள மகளுக் கிதுவித
 மயர்தற் குரிதிலை யழல்வேனல்.

பிரியம்வதை.—[மறைவில்] அநசூயே! அந்த ராஜருஷியை முதன்முதற் பார்த்ததுதொட்டுச் சகுந்தலை காதலாற்றுன்பப்

படுபவளேயாவள். அப்படியானுல் இந்தத்துன்பம் அவர் நிமித்தமாகவே எழுந்ததாகும்; வேறென்ன?

அநசூயை.—தோழி! எனக்குந்தான் இவ்வித சந்தேகம் மனத்திற்குள்ளே உண்டாவது. இப்பொழுது இவளையே கேட்போமே. [வெளிப்படை] சகி! உன்னை ஒன்று கேட்கவேண்டியிருக்கிறது. உனக்கு ஸந்தாபம் மிகக் கடுமையாகத்தானே உள்ளது?

சகுந்தலை.—[மலர்ப்பாயலிற் கிடந்தபடியே தன்முன்பாதியளவின் நிமிர்ந்து] தோழி! நான் என்ன சொல்லவேண்டுகின்றாய்?

அநசூயை.—சகி, சகுந்தலே! மன்மதன் நூலிற்சொல்லுங் காரியங்களுக்கு நாங்கள் உட்படாதவர்களா யுள்ளனம். ஆயினும் இதிகாசக் கட்டுரைகளிற் காதலுற்றவர்களுடைய நிலைமை இப்படியாம் என்று கேட்டிருக்கிறோம். அப்படியே உன் நிலைமையும் உள்ளதாகக் காண்கின்றோம். நீ சொல்லு. எதனால் உனகரு இந்த வருத்தம் உண்டாயிருக்கிறது? மாறுபாட்டிற்குக் காரணத்தை உள்ளபடி அறிந்துகொள்ளாமல் அதற்குப் பரிகாரமான தொன்றைத் தொடங்குவதில்லையன்றோ!

வேந்தன்.—எனக்கு உண்டாகிய சந்தேகம் அநசூயையையும் தொடர்ந்து பற்றியது. தன்னினைவினுல்மட்டும் உண்மை

சகுந்தலை.—[தனக்குள்] என்காதல் மிகவும் வலியதாயுள்ளது. இவர்கட்குக்கூடத் தெரியும்படி திடீரெனத் துணிந்து சொல்ல வலியற்றுள்ளேன்.

பிரியம்வதை.—தோழி! இவள் நன்குசொல்கின்றாள்: ஏன் உன்வருத்தத்தை நீ கவனிக்கவில்லை? ஒவ்வொருநாளும் உன் அவயவங்கள் மெலிகின்றனவே; உன் அழகுமட்டும் உன்னை விடுவதில்லையே.

வேந்தன்.—பிரியம்வதை உண்மையாகவேதான் பேசுகின்றாள். அது எப்படியெனின்

10. மென்முக கபோலமெலி வெய்திமெலி வெய்தும்
வெம்முலைகள் வன்மையிள கிக்குழையு மார்பில்

நன்புய மிரண்டுமிக வும்பெரி திறைஞ்சும்
நன்றிடை நடுங்குமொளி மாறிவெளி தாரும்
மன்மத னலக்குமிவள் கண்ணென திரக்கம்
வாருநிலை யின்னெழில்கண் வாரியுண வுள்ளாள்
வன்கொடிய சூறைதொட வந்தது லர்ந்து
வாடுகொடி மாதவியி னீடுதளி ரொத்தே.

சகுந்தலை.—சகியீர்! வேறியாருக்குத்தான் நான் சொல்லப் போகிறேன். ஆயினும், இதைச் சொல்வதனால் உங்களுக்குந் துன்பம் உண்டாக்குவேனவேன்.

இருதோழியரும்.—அதனாலேதான் உன்னை வற்புறுத்து கிறோம். அன்புள்ளவர்க்குட் பொதுவாகப் பிரித்துக்கொண்ட துன்பமன்றோ பொறுக்கக்கூடிய வேதனையாயிருக்கும்.

வேந்தன்.—

11. இடருஞ் சுகமுஞ் சமமா நினைதோ
ழியரான் வினவப் படலா னிளமான்
மடநெஞ் சொளிநோய் வருகா ரணமுண்
மையின்வாய் மொழியா ளிலையா லிவள்தன்
படைநல் விழிகள் திருமித் திருமிப்
பலகா லெனைமுன் பருகப் பெறினும்
விடைசொல் லுறுமிவ் விடையா வலுடன்
மிகவஞ் சுவவென் னிருசெஞ் செவியே.

சகுந்தலை.—[நாணத்துடன்] நம் தவவனத்தைக் காப்பவ ராகிய அந்த ராஜருஷி எப்போது என்பார்வைவழியிற் பட் டாரோ [என்று ஒன்றுஞ் சொல்லாதுநிற்க]

இருதோழியரும்.—பிரியசகி! அப்புறம் சொல்லு.

சகுந்தலை.—அப்போதுமுதலே அவர்பாற் சென்ற காத லால் இவ்விதம் வருத்தப்படுபவள் ஆகின்றேன்.

வேந்தன்.—[களிப்புடன்] கேட்கவேண்டுவது கேட்கலா யிற்று.

12. மதனே சுடுதற் கொருகா ரணமாய்
மறுபோ தவனே குளிர்செய் தனனல்

எதிர்கோ டையினீற் றுலகத் துயிர்கட்
கெழுநீன் முகில்கொண் டியல்நா ளெனவே.

சகுந்தலே.—உங்கட்குச் சம்மதமானல் அரசருக்குள் முனி யாகிய அவருடைய அருளுக்கு நான் எவ்விதம் உரியவளாவே ஞே, அவ்விதமே அமைப்பீராக. வேறுநினைவீரேல் எனக்கு எள்ளும் நீரும் இறைப்பீராக.

வேந்தன்.—இவ்வார்த்தைகள்தாம் என்சந்தேகங்களை அடி யோடறுத்தன.

பிரியம்வதை.—[மறைவில்] அநசூயே! மன்மதனல் இவளுக் குண்டாகிய வருத்தம் வெகுதூரம் ஏறியது. இனிக் காலந்தாழ்ப் பதை இவள் பொறுக்கமாட்டாள். இவள் யாரிடத்திற் காத லாற் கட்டுண்டிருக்கிருளோ அவர் புருகுலத்திற்கு அணிக லமாக உள்ளவர். இவள் காதல் மிகவும் தக்கதென்று நாம் மகிழ்ந்தேற்றுக் கொள்வோம்.

அநசூயை.—[மறைவில்] நீ எப்படி உரைத்தாய், அப்படி யேதான். [வெளிப்பட] தோழி! பாக்கியவசத்தால் உனக்கு ஒத்த இடத்தே காதலேற்பட்டது. கடலைவிட்டு ஒருபேரியாறு எங்கே சென்றுவிழும்?

பிரியம்வதை.—கொழுந்தளிருள்ள கொடிமாதவியை நல்ல மாமரமல்லது வேறு எது இதுவரையுந் தாங்கத்தக்க தாகின்

வேந்தன்.—முயலை அடையாளமாகக்கொண்ட கலைப்பிறை யை விசாகவிரட்டை பின்தொடர்வது என்ன விசித்திரம்?

அநசூயை.—மற்று, நந்தோழி உள்ளத்து விரும்பியதைப் பிறருக்குத் தெரியாமலும் தாமதமில்லாமலும் நிறைவேற்ற உபாயம் யாது? அதை எப்படித் தேடிக்கொள்ளுவோம்.

பிரியம்வதை.—பிறருக்குத் தெரியாமற் செய்வதுதான் ஆராய்ந்து கொள்ளவேண்டும். விரைவிற் புரிவதென்றல் அஃது எளிதுதான்.

அநசூயை.—எப்படி?

பிரியம்வதை.—ராஜருஷியாகிய அவர் அன்புடன் விழித் துப் பார்த்ததினின்று அவருக்கு இவள்பாலுண்டாகிய காதலை நீ ஊகித்துக் கொள்ளவில்லையா? இந்நாள்வரையும் துயிலாது

விழித்தலால் அவர் மேனியிளைப்பதுங் குறித்துக் கொள்ள வில்லையா?

வேந்தன்.—ஈது உண்மையே, நான் இப்படித்தான் ஆய்விட்டேன். அஃதெப்படியெனின்,

13. இரவுக் கிரவென் முகனிற் கணையா
யிடுநற் புயனிற் கனகத் தொடியுள்
பொருவெப் பழலக் குளிரற் றெழுவெம்
புனல்கட் கடையின் வழியச் சுடர்மாய்
தருபற் பல்மணித் தொகையிற் றிணிநாண்
தடவித் திகழும் வடுமுன் கையின்மட்
டொருவுற் றுருவுற் றிழியுந் தொறும்யான்
உடனே செருகிச் செருகிக் கொளுவேன்,

பிரியம்வதை.—[நன்று ஆலோசித்து] தோழி! அவருக்கு ஒரு மன்மதநிருபம் எழுது, அதை ஒரு நல்ல பூவிலே மறைய மூடிவைத்துத் தேவப்பிரசாதம் என்று பெயரிட்டு நான் அவ் வேந்தர்கையிற் சேர்ப்பித்துவிடுகிறேன்.

அநசூயை.—இப்படி மிகவும் மெல்லிதாகச் செல்லவிடுவது எனக்கு இனிப்பது. ஆயினும் சகுந்தலை என்ன சொல்வளோ?

சகுந்தலை.—நீங்களேவுவதில் எனக்கு மாறுபாடேது?

பிரியம்வதை.—அப்படியானல் உன் உள்ளக்கருத்தை அவர். குறிப்பிற் கொண்டுணர்தல் முன்னிட்டு எளிய இனிய மொழிகளில் ஒரு யாப்பு அமைக்க நீ சிறிது சிந்திப்பாயாக.

சகுந்தலை.—தோழி! நினைத்துப்பார்க்கிறேன், ஒருகால் அவர் என்னைத் தள்ளிவிடுவரோ என்ற பயத்தினல் என் நெஞ்சம் நடுநடுங்குகின்றது.

வேந்தன்.—[தனக்குள்]

14. உன்னைவிடு மென்றுவெரு வுண்டவன்கண் ஐயம்
உள்ளனைய வன்றழுவ வுள்கவல்வ னின்றே
பொன்மகளை வேண்டியவ னெய்துவனெய் தானும்
பொன்மகள்வி ரும்பியது மெய்தரிதெவ் வாறே.

பிரியம்வதை.—தன்னலத்தைப் பழிப்பவளே! மேனியெல்லாம் குளிரும்படி விளங்கும் சரற்கால சந்திரிகையை எவன்தான் தன் ஆடையால் மறைக்க விரும்புவான்?

சகுந்தலை.—[மென்சிரிப்புடன்] நீர் ஏவியபடியே செய்வேன் [என்று இருந்து தன்னுள்ளே ஆராய்கின்றாள்.]

வேந்தன்.—யான் விரும்பிய இவளை இமைகொட்டுதல் மறந்து கண்களாற் பார்ப்பதற்கு இதுதான் உண்மையிற் பொருத்தமான நிலையாம். அஃது எப்படியெனில்,

15. சொற்றொடை தொடுக்கநினை வுற்றிவள் முகத்தே
தோய்புருவ மென்கொடியி னொன்றெழ நெரிக்கும்
எற்றிகழ்க போலமெறி நற்புளக மாண்போ
என்கணவள் காதல்மிகல் நன்குதெரி விக்கும்.

சகுந்தலை.—என் தோழியர்காள்! நான் பாடல் எண்ணித் துணிந்துவிட்டேன். அதனை எழுதுவதற்கு வேண்டிய கருவிகள் பக்கத்தில் ஒன்றுமில்லையே.

பிரியம்வதை.—இந்தக் கிளிவயிறுபோன்ற அழகிய தாமரைப் பச்சிலையில் உன் நகத்தைப் பதித்து எழுதுவாய்.

சகுந்தலை.—[சொல்லியவாறு அநுகரித்து] என் தோழியர்காள்! இதைக் கேளுங்கள். இது கருத்துக் கியைந்ததோ அன்றோ?

இருதோழியரும்.—கவனமாயுள்ளோம். [சகுந்தலை படிக்கின்றாள்]

16. அருளில் லவநின் னிடனே பதியும்
அகமூர் விழைவே னுடையங் கமெலாம்
இரவும் பகலும் வலிதே சுடும்வேள்
இவணின் னிதயம் பிறிதோர் கிலனே.

வேந்தன்.—[சரேலெனத் துணிந்து அணுகச்சென்று]

17. உடற்கண்மெலி வெய்துவை மதன்சுடுவ னுன்னை
யுவன்இடை விடாதெனை யெரிக்குமிதன் மேலென்
இடைப்பகல் முயற்பிறை யினைத்தெறுதல் போல
இன்குமுத நன்மல ரினைப்புரித லின்றே.

இருதோழியரும்.—(பார்த்து மகிழ்கூர்ந்தெழுந்து) காலம் தாழ்க்காது நினைத்தவுடன் தோன்றிய எங்கள் மனம்விழைந்த விருந்தினர்க்கு நல்வரவாகுக.

சகுந்தலை.—[எழுந்திருக்க விரும்புகின்றாள்]

வேந்தன்.—போதும் போதும், இடர்ப்படவேண்டாம்

18. அலர்மெல் லணையிற் பதிதந் தும்விரைந்
தணிதண் நளினச் சிறுதண் டுதிரைந்
துலர்தந் துமணக் கவுருப் பமிகும்
உனதங் கமிதால் வழிபா டுரிதில்.

அநசூயை.—இங்குள்ள சிலாதலத்தின் ஒருபக்கத்தில் யாம் விரும்பிய தோழர் அமர்ந்தருளலாமே.

வேந்தன்.—[அமர்கின்றான்]

[சகுந்தலை நாணத்துடன் இருக்கின்றாள்]

பிரியம்வதை.—நீங்கள் இருவீரும் ஒத்த காதலுடையீர் என்பது கண்கூடாகக் கண்டது. ஆயினும் இந்தத் தோழியிடத்தில் உள்ள நல்லன்பே என்னைத் திரும்பவும் சிலபேசும்படி தூண்டுவது.

வேந்தன்.—நல்லாய்! அஃது அடக்கிவைக்கப் படாதது தான். சொல்லவேண்டியதைச் சொல்லாது விடுவதுதான் உண்மையில் இரங்கத்தக்கதாகும்.

பிரியம்வதை.—உலகத்தில் உள்ள மக்களுள்ளே துன்பம் அடைந்தவர்க்கு இடுக்கண் களைபவனுக வேந்தன் இருக்கவேண்டும் என்பர். இதுவோ உங்கள் குலதர்மமாக உள்ளது.

வேந்தன்.—இதனினும் வேறு கிடையாது.

பிரியம்வதை.—அப்படியாயின், எங்கள் பிரிய சகியாகிய இவள் உம்மையே நினைந்து மன்மதபகவானுல் நிலைமாறுபட்டனள். அதனுல் இவள் உம் அருளாற்றுங்கி உயிர்காப்பதற்கு உரியளாகின்றாள்.

வேந்தன்.—நல்லாய்! காதல் எம்முட் பொதுவேயாகும். எல்லாவிதத்தாலும் அருள்செய்யப் பெற்றுள்ளேன்.

சகுந்தலை.—[பிரியம்வதையைப் பார்த்து] தோழீ! அந்தப் புரத்தைப் பிரிந்துவதிதலாற் கவலைகூர்ந்துள்ள ராஜருஷிக்கு நீ தடைசெய்ததுபோதும்.

வேந்தன்.—

19. அயலொன் றெணுதற் கிடனின் றெனதுள்
ளகமே வதிவாய் மதுநேர் விழியாய்
அயலா யெனையுள் ளுதியேன் மதனம்
படவும் முளவென் றனைமீண் டடுவாய்.

அநசூயை.—நண்பரே! வேந்தர்க்குப் பல மனைவியருண்மை நாங்கள் கேட்பதுண்டு! எங்கள் பிரியசகி தன் உறவினரை எப் படித் துன்பப்படுத்தினவள் ஆகமாட்டாளோ அப்படியே அவ ளைத் தாங்கிக் காக்கவேண்டுகிறோம்.

வேந்தன்.—நல்லாய்! பலசொல்லுதல் என்ன?

20. பலர்ம ணந்துகைப் பற்றி நிற்பினும்
பரவை யாடைசூழ் தரைவ ரைப்பொடும்
குலவு நுந்துணை யெனவி ரண்டுமென்
குலநி லைப்பதற் குரிய வாயிலே.

இருதோழியரும்.—கவலை யொழிந்தோம்.

பிரியம்வதை.—ஏ! அநசூயே! இதோ! மானிளங்கன்று கவலைகூர்ந்து தன் கண்ணை இங்குமங்கும் வைத்துக்கொண்டு தன்தாயைத் தேடுகின்றது; வா அதைத் தாயோடு சேர்ப் போம். [என்று புறப்படுகின்றனர்]

சகுந்தலை.—நான் காவலற்றிருக்கின்றேன். உங்களில் யாரே னும் ஒருவர் என் கிட்டவருக.

இருதோழியரும்.—உலகத்தையே தாங்கும் காவல் உன் அருகில் உள்ளது. (என்று சென்றனர்)

சகுந்தலை.—போயே போய்விட்டீர்களா?

வேந்தன்.—நீ பதறுவது வேண்டாமே. உன் பக்கலிலே உனக்கு வேண்டிய பணிகளைச் செய்தற்கு ஆள் இருக்கின்றானே.

21. தாலச் சிவிறிப் படிநன் னளினத்
தண்டின் தளிரைக் கொண்டின் குளிரிற்
றளர்வெப் பெளிதிற் றணவப் புனல்பெய்
தருதண் வளிமெய் தவழப் புரிகோ
சாலக் கரபத் திணைசேர் துடையாய்
தழுவிச் சுகமாய் மடியிற் கொடுநின்

தருசெக் கமலத் தனமென் சரணந்
தடவித் தருகோ வெதுநிற் குளமே.

சகுந்தலை.—என்னால் வெகுமானிக்கத்தக்கவரிடத்தில் என்னைப் பிழைக்குட்படுத்தி அபசாரப்பட விரும்பமாட்டேன். [என்று எழுந்துசெல்லத் தலைப்பட்டாள்]

வேந்தன்.—அழகிய நங்காய்! பகலின் கொடிய வெப்பம் இன்னும் குறைந்திலது. இவனுக்கும் நிலைமை உன்னைப் போலவே தான் உள்ளது.

22. முலையிற் குளிரத் தனிமூ டியநன்
முளரித் தளிரோ டினிதே கிடைகொள்
அலர்மெத் தணைவிட் டெவணீ புகுவாய்
அழகுற் றயர்மெய் யுடன்வெய் யிலிலே.

[என்று வலிந்து அவளைப் பிடித்துத் தடுக்கின்றான்]

சகுந்தலை.—புருகுலவேந்தீர்! ஒழுக்கத்தைக் காப்பீராக. நான் மன்மதன் கையில் அகப்பட்டுவருந்தினும் எனக்கு நான் அதிகாரியில்லையே.

வேந்தன்.—பயந்தவளே! குரவர்க்கு அஞ்சி நடுங்குதல் வேண்டாம். இதைக் கேட்டாலும் தருமநெறியைத் தெரிந்த குலபதி இங்குப் பிழை என்று கொள்ளமாட்டார். பார்,

23. முனியொத்து மகிபர்க்கு ஞளர்பெற்ற மகளிர்
முறையிற்கந் தருவத்தொண் மணனிற்றம் பதியோ
டினிதுற்ற பலருள்ள ரவர்முற்றுங் குரவர்க்
கியைதக்க மகிழ்வுய்த்தல் செவிபெற்று ளேமால்.

சகுந்தலை.—ஐயன்மீர்! என்னை இப்போது விடுவீராக. திரும்பவும் என் தோழிமாருடைய உடன்பாடுதெரிய விரும்புகின்றேன்.

வேந்தன்.—இருக்க. விடுகிறேன்.

சகுந்தலை.—எப்போது?

24. அணிகோ மளநன் புதுமென் மலரில்
அழகீ யறுகா லுறுபுண் மருவா
துணல்போல் மெலவே யுனதின் னிதழின்
னுயர்தே னசைதீர் தரவுண் டபினே.

(என்று அவள் முகத்தினைத் தனக்கொப்ப உயர்த்த விரும்புகின்ருன்)

சகுந்தலை.—[அவன் கையைத் தள்ளுவதுபோல நடிக்கிருள்]

[திரைமறைவில்] சக்கரவாகப் பேடையே! நின் இனிய துணையிடம் விடைபெற்றுக்கொள். இரவு நெருங்கிவந்து விட்டது.

சகுந்தலை.—[காதுகொடுத்து மனந்தடுமாறி] புருகுல வேந்தீர்! ஐயமேயில்லை. என் மேனிநிலைமையை நேரே தெரிய வேண்டி ஆரியை கௌதமியம்மை இங்கேதான் வருகின்ருள். அதுவரைக்கும் இந்த மரக்கிளையின் நடுவிலே ஒளித்திரும்.

[வேந்தன் அப்படியே தன்னை மறைத்துக்கொண்டு இருக்கின்ருன்] பின்னர்த் தவமகளாகிய கௌதமி கலசத்தைக் கையிற் கொண்டு இருதோழியருடன் வருகின்ருள்.

இருதோழியரும்.—கௌதமியம்மா! இதோ! இதோ!!

கௌதமி.—[சகுந்தலையருகிற் சென்று] நங்காய்! உன் உடம்பிற் காய்ச்சல் இப்போது இலகுவாய் இருக்கிறதா?

சகுந்தலை.—என்மேனி சிறப்படைந்தது.

கௌதமி.—இந்த மந்திரித்த தர்ப்பைப்புனலால் உன்மேனி ஆபத்தே இல்லாமல் இருக்கும். [என்று சகுந்தலையின் சென்னியிற் றெளித்து]

பிள்ளாய்! பகற்பொழுது கழிந்து முடிகின்றது. வா, பர்ணசாலையே போவோம். (என்று சொல்லிப் புறப்பட்டனர்)

சகுந்தலை.—[தனக்குள்] ஏ, மனமே! முதல்முதலே நின் ஆசைக்கினியது சுகமாய்க் கிடைத்தபோது உன் அச்சத்தினின்று நீ விடுபட்டாயல்லை. இப்போது அதைப் பிரிந்து இரங்குவது உனக்கு எப்படிப் பரிகாரம் உண்டுபண்ணும்? ஏ கொடி சுற்றிநின்ற புக்கிலே! கொடிய வெப்பத்தை நீக்குவாய். பின்னும் பெரும்போகம் உண்ணவேண்டி உன்கட் சொல்லிக்கொள்கிறேன்.

[என்று அவள் இடர்ப்பட்டு இடர்ப்பட்டு உடனின்ற பிறரோடு சென்றனள்]

வேந்தன்—[முன்னிருந்த இடத்தை யடைந்து பெருமூச்சுடன்]

ஐயோ! நான் விரும்பிய இடத்து உண்டாகும் இடையூறுகள் பலவாகும். எதனாலோ எனின்,

25. புயனின் வளைந்துளநல் லிமைவிழி யின்முகனைப்
பொரநிமி ரும்படியான் புரிதர வும்பலகால்
உயவி னெழின்மிகுவாள் விரலின் மறைந்துதவிர்
உறுகென மாவவிழும் இதழெவ னுண்டிலனே.

இந்த இடத்தைவிட்டு நான் எங்கே போகவல்லேன். மற்றும் என் மனத்திற்கினியவள் நன்றாக அநுபவித்து நீங்கிய இக்கொடி மண்டபத்திலேதான் ஒரு முகூர்த்த அளவிற்காவது வதிகின்றேன்.

26. இதுமலர் நிறைந்தவள்த னெழிலினுரு வம்பதியு
மினியசய னங்கொள் சிலையால்
இதுநளின மெல்லிலையி னவள்நகம்வ ரைந்துமறு
கியவுலரு மதன நிருபம்
இதுபுய மிழிந்தமுள ரியினணிகொள் தண்டின்வளை
யெனவிவை தளைந்த விழியேன்
இதுபுனலின் வஞ்சிமனை வெறிதென விருந்தும்வலி
திவணகலும் வன்மை யிலனே.

[ஆகாயத்தில்] வேந்தே!

27. மாலை மேவுமவி யுண்ணுமழல் வேதிவளைய
வந்து வேள்வினை மன்னுகல னூடுவெருவாய்
மாலை மேகநிக ராயபிசி தாச னர்கடாம்
மருவும் யாம்வெருவு மாறுநிழல் செய்துழல்வரால்.

வேந்தன்.—இதோ வருகின்றேன்.

[என்று செல்கின்றனன்]

மூன்றும் அங்கம் முற்றும்.

## நான்காம் அங்கம்

### விஷ்கம்பம்

[பின்னர் இருதோழியரும் மலரெடுப்பதாக அபிநயித்துக் கொண்டு புகுகின்றனர்]

அநசூயை.—பிரியம்வதா! சகுந்தலையானவள் காந்தர்வவிதி முறைப்படி மணமுடித்துத் தனக்கு ஒத்த கணவனை அடைந்தது என் உள்ளத்தில் எப்படி மகிழ்ச்சி தருவதோ அப்படியே இப்பொழுது கவலையுந் தருகின்றது.

பிரியம்வதை.—எப்படி அது?

அநசூயை.—அந்தக் கோமுனிவர் வேள்வியை நிறைவேற்றிய பின்னர் முனிவர்களால் விடையளிக்கப்பெற்றுத் தம் நகரமடைந்து அந்தப்புரத்துள்ளே புக்கவர் இங்கே நிகழ்ந்த செய்திகளை இப்போது நினைப்பாரோ நினையாரோ.

பிரியம்வதை.—நம்பு. இத்தகைய வடிவுள்ளவருடைய இயல்பு நல்ல குணத்தோடு மாறுபடாது. நம் தந்தையார் இங்கே நிகழ்ந்த செய்தியைச் செவியேற்றபின், இந்தவேளை என்னதான் எதிர்மொழி சொல்வாரோ, தெரிகிலேன்.

அநசூயை.—நான் எப்படி நினைக்கின்றேனோ அப்படித்தான் அவர்க்கும் உடன்பாடு.

பிரியம்வதை.—எப்படி?

அநசூயை.—இவளைக் குணமுள்ள ஒருவர்க்குத் தருவதென்பதே நம் குரவருடைய முதன்மையான நினைப்பு. அதைத் தெய்வமே கிடைக்கச் செய்துவிட்டது. மிகவும் வருத்தப்படாமல் அவர் விரும்பியது எளிதிலே நிறைவேறியதுபற்றித்தான்.

பிரியம்வதை.—[பூக்கூடையைப் பார்த்துவிட்டு] தோழி! ஆராதனைக் காரியத்துக்குப் போதுமான அளவு பூக்கள் பறித்தாயினவோ?

அநசூயை.—என் இனிய தோழீ! சகுந்தலையின்பொருட்டு மங்கலாதேவியை வழிபடவேண்டாமா?

பிரியம்வதை.—பொருத்தந்தான். [என்று இருவரும் அச்செயலிலே முயல்கின்றனர்]

7

[திரைமறைவில்] இதோ யான் ஏடா!

அநசூயை.—[செவியுற்று] விருந்தினர் ஒருவர் தெரிவிப்பது போல் உள்ளது.

பிரியம்வதை.—பர்ணசாலையில் சகுந்தலை யிருக்கின்றாளில்லையா?

அநசூயை.—அவள் இருக்கிறாள். அவள் மனந்தான் அருகிலில்லை.

பிரியம்வதை.—நிற்க; இதுவரை எடுத்த பூக்கள் போதும் [என்று செல்கின்றனர்]

[திரை மறைவில்] ஓ விருந்தை யிகழ்ந்தோய்!

1. இவணடைந்ததவ நிதியெமைத்தெரிகி
லாதெவன்னினைவை பிறிதிலா
தவனுணர்த்தினுமுன் மத்தன்முன்சொனதெ
விதமெணுனினைய விதமெணுன்.

பிரியம்வதை.—ஓ! கொடிது கொடிது!! கேடே வந்து விட்டது! சகுந்தலை தன் மனம் தன்னிடத்தில்லாததனால் வழிபடத்தக்க யாரோ ஒருவர்க்கு எவ்விதமோ பிழை செய்தவளாயினள் போலும்.

[எதிரே பார்த்து] உண்மையாய் வேறு யாருமில்லை. எளிதிற் சினமுறுதற்குரிய துர்வாஸமாமுனிவர்தாம் இவர். அவரே அப்படிச் சபித்துவிட்டுத் தடுக்கமுடியாத விரைந்த நடையில் மீளப் புறப்பட்டுப் போகின்றார். நெருப்பல்லது வேறு யாது இப்படிச் சுட வல்லதாகும்?

அநசூயை.—விரைந்துபோய்க் கால்களில் விழுந்து வணங்கி அவரைத் திருப்பி அழைத்துவா. அதற்குள் அர்க்கியத்திற்குப் புனல்கொண்டு விரைந்து வருகின்றேன்.

பிரியம்வதை.—அப்படியே. [என்று சென்றனள். ஓரடி எடுத்து வைத்துத் தடுமாறியதாகக் காட்டி] நான் விரைந்தோடி வந்ததால் என் முன்கையிலிருந்து பூக்குடலை நழுவி விழுந்து விட்டது. [என்று பூக்களைப் பொறுக்குவதாக நடிக்கின்றாள்]

[வந்து] தோழீ! இயல்பிலேயே கோணலாயுள்ள அவர், யார் தொடர்ந்து வேண்டினால்தான் ஏற்றுக்கொள்வார்? எப்படியும் யான் அவரைத் திரும்ப இரங்கும்படி

அநசூயை.—[சிரித்துக்கொண்டு]

அதுவும் அவருக்கதிகமேயாகும். சொல்லு, சொல்லு.

பிரியம்வதை—எவ்வளவு வேண்டிக்கொண்டாலும் மீண்டும் வருதற்கு அவர் இணங்காமைகண்டு பின் இவ்விதம் வேண்டிக்கொண்டேன்.

அநசூயை.—எப்படி?

பிரியம்வதை.—பகவானே! உம்முடைய மகிமையைத் தெரியும் தரமில்லாத இளம்பெண் நமக்குச் செய்த ஓரபராதம் முதல்முதல் நிகழ்ந்ததென்று தெரிந்து பொறுத்தருளவேண்டுமென்று [இரந்தேன்].

அநசூயை.—அப்புறம், அப்புறம்.

பிரியம்வதை.—நான் சொன்னது மாறத்தக்கதில்லை. ஆயினும், 'அடையாளமான அணிகலங் கண்டவுடன் சாபம் தீரும்' என்று தமக்குள் முணுமுணுத்துக்கொண்டே அவர் மறைந்து போனார்.

அநசூயை.—அப்படியாயின் நமக்கு மூச்சுவிட இயலும். அந்தக் கோமுனிவர் புறப்படும்போது தம் நினைவிற்கு அடையாளமாகுமென்று, தம் பெயரெழுதிய மோதிரத்தைத் தாமே சகுந்தலை விரலிலிட்டனர். இதனால் சகுந்தலை அந்த உபாயத்தைத் தன்னிடத்தே வைத்துள்ளனள் ஆவள்.

பிரியம்வதை.—தோழீ! போவோம். நாம் தேவகாரியத்தைச் செய்துமுடிப்போம். [உற்றுநோக்கி] அநசூயே! இங்கே பார். நம் அன்புள்ள சகி தன் இடதுகையை முகத்தில் அணைத்துக்கொண்டு எழுதியசித்திரம்போல உள்ளாள். தன் கணவன் பாற்புக்க உள்ளத்தினாலே தன்னையுந் தெரியாமல் இருக்கின்றாள். இவள் வருபவரை எப்படித் தெரியவல்லவள் ஆவள்.

அநசூயை.—பிரியம்வதா! இந்தச் செய்தி நம் இருவர் வாயில் மட்டும் இருப்பதாகுக. நம் அன்புள்ள தோழி இயல்பாகவே மெல்லிய நெஞ்சுடையவள். ஆதலால், காப்பாற்றத் தக்கவள் அன்றோ?

பிரியம்வதை.—நவமாலிகைக்கொடிக்கு இப்பொழுது எவர் தாம் வெந்நீர் தெளிப்பார்?

(விஷ்கம்பம் முற்றும்)

## நான்காம் அங்கம்

---

[ தூங்கி விழித்தெழுந்த சீடன் புகுகின்றனன் ]

சீடன்.—( தனக்குள் )

இப்போது திரும்பி வந்துள்ள காசிபமுனிவரால் விடியற் பொழுதைத் தெரிந்து சொல்லும்படி அமர்த்தப்பட்டுள்ளேன். இப்போது இரவு இன்னும் எவ்வளவுள்ளதென்று இவ்வெளியிடத்தினின்று பார்க்கிறேன். ( நடந்துபோய்ச் சுற்றிப் பார்த்து ) ஆ, விடிந்துபோயிற்றே. அஃதெப்படியெனின்

2. தருபயிர்க் கதிபன்மேல் மலைமுடிக் கிழிவனல்
   தருகிழக் கிரவிமுன் னருணனுய்த் தெழுவனிவ்
வொருகணத் திருசுடர்க் குதயமும் மறைவுமண்
   உயிர்கள்வாழ் திசையுமிப் படியெனப் புகலுமே.

( இன்னும் )

3. அம்புலி மறைந்தது மதேகுமுத வோடை
   அங்கண்மகிழ் செய்கில தெனுந்தகைய தொட்
தம்பிரிய ரிற்பிரிவி னுமிட ரளக்கும் [பம்
   தன்மையிலை தாங்கரிது மென்மகளி ருக்கே.

( திரையினைச் சரேலென விலக்கிக் கொண்டுவந்து )

அநசூயை.—காதலுக்குரியவற்றில் முகந்திரும்பாதிருக்கும் இப்பேர்ப்பட்டவனுக்குங் கூட, அந்தத் துசியந்தர் என்னும் பேரரசர் சகுந்தலையிடத்து அநீதியாய் நடந்தனர் என்னும் இது தெரியாததில்லை.

சீடன்.—இதோ! ஆகுதி செய்யும் வேளை வந்துவிட்டது. குரவர்க்குத் தெரிவிக்கின்றேன். ( என்று செல்கின்றான் )

அநசூயை.—தூங்கி உணர்ந்தாலும் இன்னது செய்வதென்று தெரிகிலேன். உசித காரியங்கள் செய்வதற்குக் கூடக்

கைகால்கள் எழவில்லை. இப்போது காமன் தன் விருப்பம் நிறைவேறினன் ஆகுக. இப்படிப்பட்ட பொய்யன்பக்கல் அறிவு பாழ்பட்டு நம் தோழி கால் வைத்தனள். அல்லது துருவாஸ முனிவர் கோபமே இவ்வாறு மாறுபாட்டை விளைத்ததோ. அப்படி இல்லையாயின் அத்தகைய கோமுனிவர் மீண்டுபோய் இந்நாள் வரைக்கும் ஓர் எழுத்தும் கூட விடுக்காமல் இருப்பது எப்படியாகும். அப்படியாயின் அவருக்கு நினைவூட்டுதற்குரிய அடையாளமாகிய மோதிரத்தை இங்கு நின்று அனுப்பலாம். துன்பம் பொறுப்பதையே ஒழுக்கமாக உடைய தவத்தினருள், யாரிடம் இதை வேண்டலாம். குற்றம் நம்முடைய சகியைச் சார்ந்ததேயாயினும் அயலிடத்து நின்று இங்கு மீண்டு வந்துள்ள நம் தாதையார் ஆகிய காசிபரிடத்துச் சகுந்தலை துஷ்யந்தரை மணந்து கருவுற்றனள் என்று தெரிவிக்கத் தடுமாறுகின்றேன்.

பிரியம்வதை.—[வந்து மகிழ்ச்சியுடன்]

தோழீ! சகுந்தலையின் பயணத்துக்குரிய மகிழ்ச்சிச் சடங்கை நிறைவேற்ற விரைந்துவா, விரைந்துவா.

அநசூயை.—தோழீ! எப்படி இது? (நேர்ந்தது)

பிரியம்வதை.—இப்போது கேள். நன்று உறங்கினளா என்று கேட்டறியவேண்டிச் சகுந்தலையினிடம் சென்றிருந்தேன்.

அநசூயை.—அப்புறம், அப்புறம்.

பிரியம்வதை.—அப்பொழுது நாணத்தினால் தலை குனிந்திருந்த இந்தச் சகுந்தலையைத் தாமே தழுவித் தாதை காசிபர் 'புகையாற் பார்வை கலங்கப்பட்டாலும் வேள்வி செய்பவன் இடும் ஆகுதி தெய்வ வசத்தால் அக்கினியிலே வீழ்ந்தது. குழந்தாய்! நன்மாணுக்கனுக்கு உதவிய கல்விபோல எனக்கு நீ துக்கப்படத் தகாதவளாக உள்ளனை. கோமுனியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நின்னை அக்கணவன் கோயிலுக்கு இப்போதே செல்ல விடுக்கின்றேன்.' [என்று இவ்வாறு மகிழ்வுரைத்தார்]

அநசூயை.—மற்று, யாரால் இந்தச் செய்தி தந்தை காசிபருக்குக் குறிப்பிடப்பட்டது?

பிரியம்வதை.—தழற்றெய்வத்தை வழிபடப் புக்க அவருக்கு வேதமயமான அசரீரி வாக்கால்.

அநசூயை.—[புன்சிரிப்புடன்] சொல்லு, சொல்லு.

பிரியம்வதை.—[ஸம்ஸ்க்ருத மொழியைக்கொண்டு]

அசரீரி—

4. அந்தணவு னன்புதல்வி நங்கைதுசி யந்த
 ளுனுதவ லுற்றவொளி தான்வயிறு வாய்த்தாள்
சிந்தைதெளி வாயுலகு செவ்வன மளிக்கச்
 செக்கனலை யுண்மறைய வைத்தசமி யென்ன.

அநசூயை.—[பிரியம்வதையைத் தழுவிக்கொண்டு]

தோழீ! எனக்கு இது விருப்பமேயானாலும் இப்பொழுதே சகுந்தலை அழைத்துச் செல்லப்படுவள் என்ற கவலையோடுகூடத் தான் அரியதான இந்த மகிழ்ச்சியை நான் அநுபவிக்கின்றேன்.

பிரியம்வதை.—நம்முடைய கவலையை, விளையாடலால் ஒருவாறு போக்கிக்கொள்வோம். வருந்துகின்ற அவள் துயர் நீங்கியவளாக வேண்டியதுதான்.

அநசூயை.—அதனாலன்றோ பலநாளானாலும் வாடாத மகிழம்பூ மாலையைத் தென்னங்குடலையுள்வைத்து இந்த மாமரத்தின் கிளையில் தொங்கவிட்டிருக்கிறேன். அதை எடுத்து உன் கையில் வைத்திரு. நானும் அதற்குள் கோரோசனை, நேர்கட்டி அறுகம்புல் முதலிய மங்கலதிரவியங்களைச் சேகரித்து வருகிறேன்.

பிரியம்வதை.—அப்படியே செல்க.

[அநசூயை புறப்பட்டனள்]

பிரியம்வதை.—[மகிழம்பூக் குடலையை எடுத்து வருவது போல நடிக்கின்றனள்]

[திரைமறைவில்]

ஏ கௌதமி! சகுந்தலையை அழைத்துச் செல்வதற்கு அந்தச் சார்ங்கரவன் முதலியோரைத் தூண்டுவாயாக.

பிரியம்வதை.—[காது கொடுத்துக்கேட்டு]

அநசூயை.—சீக்கிரம், சீக்கிரம். அஸ்தினபுரம் செல்லுதற்குரிய இந்த முனிவர் கூப்பாடு செய்கின்றனர்.

அநசூயை.—[கையில் மங்கலதிரவியங்களுடன் வந்து] தோழீ! வா, வா நாம் போவோம். [என்று சொல்லி நடக்கின்றனர்]

பிரியம்வதை.—[நன்கு நோக்கி]

சூரியோதயத்திலே சகுந்தலை குளித்துத் தலைவாரிமுடித்துத் தவப்பெண்கள் நீவாரநெல்லின் அக்ஷதையைக் கையில் வைத்துக்கொண்டு ஸ்வஸ்தி வாசனம் சொல்லி வாழ்த்தாநிற்க இங்குள்ளனள் ஆவள். நாம் அவளருகு செல்வோம். [என்று அவளருகிற் செல்கின்றனர்]

[பின்னர் மேற்சொல்லியபடி ஆசனத்தில் அமர்ந்தவளான சகுந்தலை தோன்றுகின்ருள்]

தவப்பேண்டிருள் ஒருத்தி [சகுந்தலையை நோக்கி] குழந்தாய்! உன் கணவன் பெருமதிப்பிற்கு அறிகுறியாக நீ கோப்பெருந்தேவி யென்னும் பட்டப்பெயர் அடைக.

மற்றவள்—பெண்ணே! நீ வீரகுமாரனைப் பெறுவாயாக.

மூன்ருமவள்.—உன் கணவர் உன்னை வெகுமானமாகக் கருதும்படி நீ சிறப்பாயாக.

[இங்ஙனம் ஆசீர்வாதம் தந்து கௌதமி தவிர மற்றெல்லாருஞ் சென்றனர்.]

இருதோழியரும்.—(அருகில் வந்து) சகீ! ஈது உனக்கு இன்பமான நீராடல் ஆகுக.

சகுந்தலை.—என்னுடைய தோழிகட்கு நல்வரவாக. இங்கே அமருங்கள்.

இருவரும்.—[மங்கலக் கலன்களை எடுத்துக்கொண்டு பக்கத் தமர்ந்து]

தோழி! சித்தமாயிரு. இப்போது மங்கலதிரவியங்களால் காப்பிடுகிருேம்.

சகுந்தலை.—இஃது எனக்கு வெகுமானமே ஆகும். என் தோழியரால் அலங்கரிக்கப்பெறுதல் இனி எனக்கு அரியதேயாம். [என்று கண்ணீர் விடுகின்றனள்]

இருதோழியரும்.—மங்கல தருணத்தில் நீ அழுவது ஏற்பதன்று. [என்று கண்ணீரைத் துடைத்து அவளை அலங்காரம் செய்வதாக அநுகரிக்கின்றனர்]

பிரியம்வதை.—உயர்ந்த அணிகளால் அலங்கரித்தற்குரிய உன் வடிவம் எளிதில் ஆசிரமத்திற் கிடைத்த இவைகளால் வேறாகக் காண்பது.

[முனிமகார் இருவர் கையுறையுடன் புகுந்து]

இருவரும்.—இவ்வணிகலங்களை இங்கே நங்கை அணிபவளாகுக.

[எல்லாரும் பார்த்து அதிசயிக்கின்றனர்]

கௌதமி.—அப்பா, நாரத! இவைகள் எப்படிக் கிடைத்தன!

முன்னவன்.—தந்தை காசிபருடைய பெருந்தகைமையினாலேதான்.

கௌதமி.—அவர் மனோபலத்தாற் படைத்தனரோ என்ன?

பின்னவன்.—அப்படியில்லை, கேளும். சகுந்தலைபொருட்டு வனத்திலுள்ள முதுமரங்களின் மலர்களைக் கொண்டு வருகவென்று அப்பெரியவரால் நாங்கள் ஏவப்பெற்றோம். அப்பால் நிகழ்ந்தன இவை.

5. மங்களத் தினமதில் வணிவதற் குரியதாய்
மதிநிலா நிகரவோர் தருவெண்பட் டுதவலும்
பொங்குமின் பாயலத் தகமடிப் புறமிசைப்
பொலிதரப் புனையநல் கியதுமற் றெளிதினே
அங்கிளைத் தளிரினுக் கிடையிதோர் தளிரெனற்
கமையநன் கிவணிறை யளவுமே வெளியினீள்
செங்கைகொண் டடவியின் தெய்வதத்தொகுதியிச்
செம்பொனன் கலமெலா மிம்பர்மன் பெய்தவே.

பிரியம்வதை.—[சகுந்தலையை உற்று நோக்கி]

தோழீ! இந்த அநுக்கிரக மேன்மையால் உன் கணவன் கோயிலில் நீ அநுபவிக்கும் அரசத்திருவானது குறித்துக் கொள்ளப்படுகின்றது.

[சகுந்தலை நாணத்தைப் புலப்படுத்துகின்றாள்.]

முதல்வன்.—(நாரதன்) கௌதம! வா, வா, குளிக்கச் சென்ற காசிபர்க்கு வனதேவதைகள் செய்த சேவையைத் தெரிவிப்போம்,

பின்னவன்.—(கௌதமன்) அப்படியே [என்று புறப்படுகின்றனர்]

இருதோழியரும்.—உயர்ந்த நங்காய்! நாங்கள் ஆபரணங்களை உபயோகித்தலிற் பயிற்சியில்லாத ஜனங்கள். ஆயினும் சித்திரங்கள் எழுதும் பழக்கத்தால் இவ்வணிகலன்களை உன் அவயவங்களில் இடுகின்றோம்.

சகுந்தலை.—உங்கள் சாமர்த்தியம் நான் அறிந்ததே. [இருவரும் அணி செய்வதாக அநுகரிக்கின்றனர்]

[பின்னர்க் குளித்துவருகின்றார் காசிபர்]

காசிபர்.—

6. சகுந்தலை புறஞ்செலு மிவண்தருண மென்று
தரிக்கரிய துன்பமுள மொட்டியது கண்டம்
மிகும்விழியி னீரினை யடக்கலி னெழாது
வீடுமொலி வெங்கவலை மூடியது பார்வை
புகும்வனம் வதிந்துமொரு நட்பகற லெற்குப்
புன்கணிவி தம்புரிய வல்லதெனி னந்தோ
தகும்புதல்வி யைப்பிரிய லுற்றுழி மனைக்கட்
சார்ந்துறைப வர்க்கெவித மாம்புதிய துன்பே.

[என்று சென்றனர்]

இருதோழியரும்.—அம்மா சகுந்தலை! அலங்காரம் நிறைவேறியுள்ளனை. இப்போது இவ்விரு வெண்பட்டுக்களையும் தரித்துக்கொள். [சகுந்தலை எழுந்து உடுக்கின்றாள்]

கௌதமி.—குழந்தாய்! இதோ தந்தையார் ஆனந்தக் கண்ணீர் வழியாநிற்க உன்னைத் தழுவும் விருப்புடன் அணுகிவிட்டார். ஆதலால் ஆசாரப்படி எதிர்கொண்டு அணைவாயாக.

சகுந்தலை.—அப்பா! நமஸ்கரிக்கின்றேன்.

காசிபர்.—

7. தலைவற்கு வெகுமான மெனநீ யயாதி
சருமிட்டை யுளம்வைத்த படிநிற்பை யும்ம
நிலைபூரு வாநின்ற வவளொப்ப நீயும்
நிலமுற்று மினிதாளு மகவுற்று வாழ்வை.

கௌதமி.—பகவானே! இது ஆசீர்வாத வார்த்தைமட்டு மில்லை வரமேயன்றோ!

காசிபர்.—குழந்தாய்! இப்போது ஆகுதிபெய்யப்பெற்ற தழற்றெய்வங்களை உடனே வலம்வருவாயாக.

(அனைவரும் வேதியை வலம்வருகின்றனர்)
[இருக்குவேத சூத்தால்]

8. திசைதொறுங்குசை முறைபரப்பிய திண்ணைசூழ்தர விதியினிற்
தீதுபோர்தர வாகுதிப்பெரு மணமெழப்பல சமிதைபெய்
திசைதருங்குழி யிவைகளிற்பொலி தருவைதான மெனும்பெய
ரியையு மங்கிகள் முழுது நின்றனை யினிதளிக்க வெநாளுமே.

இப்போது நீ புறப்படலாம் அம்மா. [சூழப்பார்த்து] அந்தச் சார்ங்கரவன் முதலியோர் எங்குள்ளார்?

மாணுக்கன்—[புகுந்து] பகவானே! இதோ நாங்கள் உள்ளோம்.

காசிபர்—நின் தங்கைக்கு வழிகாட்டுவாயாக.

சார்ங்கரவன்—இப்படி, இப்படி வருக. [எல்லோருஞ் செல்கின்றனர்]

காசிபர்.—

9. வருந்தவரு தாகமுள போதுநுமை முன்னீர்
வார்த்தளிசெ யாதுமுதல் மாந்தமுய லாளால்
பொருந்தவணி செய்வதை விரும்பியுள ளேனும்
பொத்திலுயர் நட்பினு மிடைத்தளிரும் வவ்வாள்
அரும்பிவரு போதினொரு கன்னிமலர் பூப்பின்
அந்நிலையின் மங்கல விழாவயர்வ ளந்நும்
இருந்துணை சகுந்தலை புகுங்கணவன் கோயில்
இவண்விடை யளிப்பிரனை வீருமிவ ளுக்கே.

[உடனே குயில்கூவுவதைக் குறித்துக்கொண்டு]

10. இனியநற் குரலினிற் பிறர்வளர்க் குறுகுயில்
இசைசெயல் வனமதில் வளர்வினைத் துறவுபூண்
பனிமலர்த் தருவினம் மிவைசகுந் தலைசெலும்
பயணநன் றநுமதம் பகருநல் விடைபொருஉம்.

ஆகாயத்தில்

11. புனல்வண் கமலமொ டொளிருந் தடமிரு
புறன்மல் கிடைவெளி மகிழ்வார்க
பொழிலின் தருநிரை பகல்வெய் யவன்வெயில்
புதிதின் குளிர்செய நிழல்கூர்க
வனசந் தருதுகள் நிகரும் படிநில
மணல்மெல் லெனவலி திலதாக
வளிமென் மையினுடன் வரநன் றியல்தர
வழிநன் சுபமுட னினிதாயே

[அனைவரும் அதிசயத்துடன் காதிற் கேட்கின்றனர்]

கௌதமி—குழந்தாய்! தபோவனத்திலுள்ள தெய்வமகளிர் உடன்பிறப்புள்ள உறவோடு உனக்கு நல்விடை அளிக்கின்றனர். அப்பகவதிகளை நமஸ்கரித்துக்கொள்.

சகுந்தலை—[வணக்கத்துடனே நடந்து, பிறரறியாமல் தோழியரைப் பார்த்து]

சகி பிரியம்வதா! ஆரியபுத்ரரைத் தரிசிக்கும் பெருவிருப்பத்தால் இப்போது ஆசிரமசாலையைவிட்டுப் பிரிகின்றேனுடைய இருபதங்களும் முன்னே வைக்குந்தோறும் துயருற்றுத் துயருற்று ஓய்ந்துதளர்வன.

பிரியம்வதை.—தபோவனத்தைப் பிரியும் துன்பம் கேவலம். உன்மட்டில் இல்லை. தபோவனமும் உன்னைப் பிரிவதில் இப்போது ஒத்த துன்பநிலையிற்றான் உள்ளதென்று காணப்படுவது.

12. புற்கவளம் கக்கின வுழைக்குல மனைத்தும்
புள்மயிலி னஞ்சிறை விரித்துநட மாடா
பற்பல்கொடி யும்விழி யழும்புன லுதிர்க்கும்
பான்மையின் வெளுத்திலை யுதிர்ப்பனகண் பாராய்.

சகுந்தலை.—[தன்னுள் நினைந்து] அப்பா! என்னோடு பிறந்து வளர்ந்த தங்கையாகிய வனசந்திரிகை என்னும் இந்தக் கொடியைத் தழுவி விடைபெற்றுக்கொள்கின்றேன்.

காசிபர்.—உனக்கு அதனிடம் உடன்பிறப்பிற்குரிய அன்பிருப்பதை யான் அறிவேன். அஃது உன் வலது புறத்தே யுள்ளது.

சகுந்தலை.—[கொடியை அணுகி] ஏ வனசந்திரிகையே! நீ மாமரத்தை அணைந்திருந்தாலும் நின்னை அடைந்து தழுவுகின்ற என்னைக் கிளைகளாகிய உன் புயங்களால் எதிர்தழுவுவாயாக. இன்றுமுதல் நான் நினக்குத் தூரமானவிடத்தே பிரிந்து போயிருப்பவள் ஆவேன்; நிச்சயம்.

காசிபர்.—

13. நின்பொ ருட்டுமுனம் யானி னைத்தபடி
நிற்கி யைந்தகண வன்றனை
முன்னி ழைத்தநல் வினைக்கி ருந்தபயன்
முற்ற வெய்தினைநீ யாகவே
தன்ப டிக்குநவ மாலி கைக்கொடியுந்
தழுவ லாயதுநன் மாமரம்
உன்பொ ருட்டுமிது தன்பொ ருட்டுமிவ
ணுறுக ணற்றநிலை யெய்தினேன்.

இங்கிருந்து இனிப் புறப்படுவாயாக.

சகுந்தலை.—தோழியர்காள்! இஃது உங்கள் இருவர் கையிலும் அடைக்கலமாகுக.

இருதோழியரும்.—இந்த மக்களை யார்கையில் அடைக்கலம் வைக்கின்றனை (என்று கண்ணீர் விடுகின்றனர்).

காசிபர்.—அநசூயே! அழவேண்டாம். உங்களாலேயே சகுந்தலை ஆற்றப்படவேண்டியவள்.

[எல்லாருஞ் செல்கின்றனர்]

சகுந்தலை.—இந்தப் பெண்மான் தன்னுட் கருவுற்ற பாரத்தால் மெதுவாக நம் குடிலின் பக்கத்துத் திரிகின்றது. வருத்தமின்றிச் சுகமாக ஈன்றவுடன் அந்த மகிழ்ச்சியைச் சொல்லுதற்கு யாரேனும் ஒருவனை என்பால் வரவிடுப்பாய் அப்பா.

காசிபர்.—அப்படியே. யான் இதனை மறக்கமாட்டேன்.

[நடைதடுக்கப்பட்டதாக நடித்து]

சகுந்தலை.—எதுவோ என்னைத் திரும்பவும் திரும்பவும் ஆடையைப் பிடித்து இழுக்கின்றதே (என்று பின்னே திரும்பினாள்).

காசிபர்.—குழந்தாய்!

14. கூர்த்துள தருப்பைநுனி யின்பிளவு பட்டுக் [வாய்
கொண்டபு ணொழிக்கவெணி யிங்குதியி னெய்
சேர்த்திநனி யாறுதல்செய் போதிளைய சாமைச்
செய்யபிடி யூட்டிவளர் வித்தனையெதைத் தான்
ஆர்த்தவரு ளான்மகவு போலவிவ ணீவைத்
தாதரவு செய்வையெதை யவ்வுழையின் கன்று
பேர்த்துவதி தற்கியல்கி லாதுநினு டன்செல்
பெற்றியறி வித்துனடி பற்றிவரு மம்மே.

சகுந்தலை.—கன்றே! உன் உடனுறைவதை விட்டுப்போகும் என்னை ஏன் தொடர்கின்றனை? உன் தாய் உன்னை ஈன்ற சிறிது நேரத்தில் இறந்துபோக, அதுதொட்டுப் பிரியும் இது வரைக்கும் என்னால் நீ நன்கு காக்கப்பெற்றனை. இனி உன்னைத் தந்தையார் கருதிக்கொள்வர். அதனால் நீ திரும்பிச் செல். [என்று அழுது கொண்டேகினள்]

காசிபர்.—

15. பெருநீர் வரவைத் திரமாய் விழிகள்
பெறுமே லிமையின் னிடையே தடைசெய்
தரைமே டவலோ தெரியாய் வழியிற்
றடுமா றுவைகா லிடமா றுவதால்.

சார்ங்கரவன்.—பகவானே! உறவுள்ள மக்கள் நீர்நிலை வரைக்குந்தான் வழிவிடுதற்கு உடன்செல்ல லாகுமென்று கேட்கப்படுகின்றது. இதோ குளக்கரை உள்ளது. அங்கு எங்கட்குரிய தூதுமொழியைச் சொல்லியருளி நீங்கள் மீள்வது தக்கதாகும்.

காசிபர்.—அப்படியாயின் இந்தப் பால்மரத்தின் நிழலிலே தங்கியிருப்போம். [எல்லாரும் சென்று தங்குகின்றனர்]

காசிபர்.— [தமக்குள்] அத்தகைய துஷ்யந்தனுக்குத் தகுதியான தூதுவார்த்தை என்ன சொல்லலாம்? [என்று சிந்திக்கின்றார்]

சகுந்தலை.—[மறைவில்] தோழி! தன்னுடன் உலாவும் சேவல் இடப்பக்கத்துத் தாமரையிலையின் உள்ளே இருந்தும் காணப்படாமையால் இந்தச் சக்கரவாகப் பேடை ஆதுரத்தால்

புலம்புவதைப் பார். நான் செய்தற்கரியதைச் செய்கின்றேன் என்பது நிச்சயம்.

அநசூயை.—சகி! இவ்விதம் நினைக்கவேண்டாம்.

16. ஒருபேடை யிதுவும் விழைசேவ லில்லா
துறுதுன்பி னல்நீ டிரவைக் கழிக்கும்
பெருநோயை விரகந் தருமேனு மாசைப்
பிணிப்போ வெவைக்குஞ் சகிப்பிப்ப தாகும்.

காசிபர்.—சார்ங்கரவ! சகுந்தலையை முன் உய்த்து அவ் வேந்தனுக்கு என்சொல்லாக இது சொல்லத் தகும்.

சார்ங்கரவன்.—தேவரீர் ஆணை செய்தருள்க.

காசிபர்.—

17. மனம டங்கெமது நிதியு நின்றனுயர்
மரபு நன்குநினை தந்துதன்
இனமொ டுஞ்சிறி தெணுது காதலெழ
வெவள்க ணீபுரிவை யவளிவள்
நினைய டைந்தமனை வியரின் மற்றுநகை
நிலவ நீடுவிழி வைப்பைநீ
பினர்வி ளங்கினிவள் பேற தாமதுசொல்
பெண்கி ளைக்கியைவ தில்லையே.

சார்ங்கரவன்.—தூதுவார்த்தை (நினைவில்) கொள்ளப் பட்டது.

காசிபர்.—குழந்தாய்! நீயும் இப்போது நியமிக்கப்பட வேண்டியவள்தான். நாம் வனத்தில் வாழ்வோமாயினும் உலகி யல் நன்கு அறிவோம்.

சார்ங்கரவன்.—ஞானிகள் தெரியாதது ஒன்றுமில்லை யன்றோ?

காசிபர்.—அத்தனைய நீ இங்குநின்று கணவன் கோயிலை அடைந்தபின்,

18. உன்குரவ ருக்கினி தியைந்துபணி செய்வாய்
ஒத்தமனை கட்குவிழை தக்கதுணை யாவை
நின்கணவன் மாறுபடி னும்வெகுளி கொண்டு
நீயவன்கண் மாறுபட யாதுநினை யாயால்

நன்பரி சனங்களை யிருந்தருள் கொடாள்வை
நன்னிலை யதிற்கருவ மெய்தலை யிவற்றால்
இன்சொலிள மங்கையர் மனைக்கிறைவி யென்ற
வெழிற்பதம் வகிப்பரிகல் பெண்டிர்குல நோயே.

கௌதமி நினைப்ப தெப்படியோ?

**கௌதமி.**—மணமகட்குத் தக்க உபதேசம் இதுதான். குழந்தாய்? இவையெல்லாம் நன்றாய் உள்ளத்தில் வைத்துக் கொள்வாயா?

காசிபர்.—குழந்தாய்! என்னையும் உன் தோழிமாரையும் தழுவி யணைந்துகொள்.

சகுந்தலை.—அப்பா! பிரியம்வதை முதலிய என் தோழியர்கள் இவ்விடத்திலேயே திரும்பிப் போகவேண்டுமோ?

காசிபர்.—இவ்விருவரும் தானஞ் செய்யப்பட வேண்டியவரே யாவர். இவர்கள் இப்பொழுது அங்கே செல்லத்தக்கவர்களில்லை. உன்னுடன் கூடவே கௌதமி வருவாள்.

சகுந்தலை.—[தந்தையைத் தழுவிக்கொண்டு] மலையவெற்பினின்று வேரோடு பிடுங்கப்பட்ட சந்தன இளமரம்போல இப்போது தந்தையின் திருமேனியைத் தழுவுதலினின்றும் நழுவி அந்நியதேசத்தில் எப்படி உயிர் வாழ்வேன்?

காசிபர்.—குழந்தாய்! நீ ஏன் இப்படி நடுங்குகின்றாய்?

19. புருகுலத் தலைவனு லெழில்மனைக் கிறைவியாய்ப்
புகழ்சொலத் தகுவையாய்ப் பெருநலப் பதவியிற்
குரவருக் கினியஇற் பணிகளிற் கணமுநீ
குழைவுறற் குரியைசில் பொழுதினிற் குணதிசைப்
பரிதியிற் சுடர்வரப் புனிதநற் புதல்வனைப்
பயனுறப் பெறுகுவை யிவணெனைப் பிரிவதிற்
பொருமனத் துயரமற் றவணெணிக் கவலவும்
பொழுதுனக் கிலையெனத் தெரிவைநற் புதல்வியே.

சகுந்தலை.—[தந்தையின் அடியில் வீழ்ந்து வணங்குகின்றனள்]

காசிபர்.—நீ எது விரும்புவையோ அது கை கூடுக.

சகுந்தலை.—[இருதோழியரையும் அணுகி] தோழியர்காள்! நீவிர் இருவரும் என்னை ஒருசேரத் தழுவிக்கொள்ளுங்கள்.

இருவரும்.—[தழுவிக்கொண்டு] சகி! அந்த அரசர் முன்நிகழ்ந்தது ஒருவேளை நினைவிற்குவாராமல் மறந்தவராயின் அப்போது அவர் பெயர் எழுதிய இந்த மோதிரத்தை அவருக்குக் காட்டுவாயாக.

சகுந்தலை.—இந்த ஐயப்பாடு எனக்கு நடுக்கத்தைச் செய்வதே.

இருதோழியரும்.—அஞ்சவேண்டாம். கெடுதலை நினைப்பது நேயத்தின் இயற்கை.

சார்ங்கரவன்.—பகலோன் ஒரு நுகத்தளவு உயரம் எழுந்து விட்டான்.

சகுந்தலை.—[ஆசிரமத்தை எதிர்நோக்கி நின்று] அப்பா! மறுபடியும் தபோவனத்தை எப்போது காண்பேன்!

காசிபர்.—இது கேட்கத்தக்கது.

20. எதிர்நாலு கடல்சுற்று புவிமா மடந்தைக்
கினிதாய துணையாய்வெல் துசியந்த னுக்கொத்
துதிதோத யங்கொண்டு தவுசந்தி மெய்ப்பே
ருளனுக விகலற்ற ரதவீர மகனை
அதிநாள் செலாதங்க ணலமாக நல்கி
அரசேந்து குலபார மவனேந்த வைத்துப்
பதியோடு மிவணுசி ரமசாந்த நிலயம்
பணிசெய்ய மீண்டுன்ற னடிவைப்பை நீயே.

கௌதமி.—[சகுந்தலையை நோக்கிக்] குழந்தாய்! பயண வேளை கழிகின்றது. தாதையைத் திரும்பிச் செல்லவிடுவாய்.

[காசிபரை நோக்கி.] அப்படியன்றாயின் நெடுநேரம் திரும்பத் திரும்ப இவள் சொல்லிக்கொண்டே யிருப்பள். தேவரீர் திரும்பிச் செல்லுங்கள்.

காசிபர்.—என் தவ ஒழுக்கம் தடைப்படுகின்றதுதான்.

சகுந்தலை.—[தந்தையைப் பின்னரும் தழுவி] அப்பா! உம் திருமேனி தவ ஒழுக்கத்தால் இளைத்துள்ளது. அதனால் என்பொருட்டு அதிகக் கவலைகொள்ளவேண்டாம்.

காசிபர்.—[பெருமூச்சுடன்]

21. குடிலின்முன் வாயிற்க ணர்ச்சித்து நீபெய்
குளநன்னெல் நீவார முளைகொள்வ தம்மே
இடனிற் புகும்போது கண்காணும் யானங்
கெதுகா ரணங்கொண்டு முதிர்சோக மோய்வேன்.

செல்வாய். உனக்கு வழியெல்லாம் சுபகரமாகுக!

[சகுந்தலை உடன்செல்வாரோடு நடந்தனள்]

இருதோழியரும்.—[சகுந்தலையைப் பார்த்து] ஆ! துன்பம், துன்பம்! (கொடிது, கொடிது.) சகுந்தலை மரவரிசையால் மறைக்கப்பட்டனளே!

காசிபர்.—[பெருமூச்சுடன்] அநசூயே! உங்களுடன் அறத்தில் ஒத்து ஒழுகியவள் சென்றுவிட்டனள். வருத்தத்தை அடக்கிக்கொண்டு மீள்கின்ற என்பின்னே வாருங்கள்.

இருதோழியரும்.—அப்பா! சகுந்தலை இல்லாது பாழ்பட்ட தபோவனத்தில் நாங்கள் எப்படிப் புகுவோம்?

காசிபர்.—நேயப்பெருக்கம் இப்படித்தான் காட்டும். [ஆழ்ந்த சிந்தனையுடன் நடந்து] என்ன ஆச்சரியம்! சகுந்தலையைக் கணவன் கோயிலுக்குச் செல்லவிட்ட இப்போதுதான் எனக்கு ஆறுதல் உண்டாயது. எப்படியெனின்,

22. கன்னிபிற னுக்குரிய பொன்னனைய ளாவள்
கைக்கொள்கண வற்கிவளை யுய்த்துளஇவ் வேளை
அன்னிய னடைக்கல மவன்கையினின் மீள
அளித்தவ னிகர்த்துள மிகப்பொலிவ தென்கண்.

(நான்காம் அங்கம் முற்றும்.)

## ஐந்தாம் அங்கம்

[பின்னர் விதூஷகனும், அணைமீதமர்ந்து வேந்தனும் தோன்றுகின்றனர்].

விதூஷகன்.—[காது கொடுத்துக் கேட்டு] ஏ, நண்பரே! சங்கீதசாலையின் உள்ளே கவனம்வைத்துக் கேளும். இப்படி யென்று தெரிவிக்கப்படாத இனிமையும் சுத்தமும் உடைய சுரத்தோடு சேர்ந்த இசைத்திறம் கேட்கப்படுவது. அத்தகைய ஹம்ஸபதிகை வண்ணம் பயில்கின்றாள் என்று தெரிகின்றேன்.

வேந்தன்.—பேசாதிரு, நான் கேட்கும்வரைக்கும். [வெளியிற் பாடப்படுவது]

1. புதுப்புது மதுப்பருகும் வேட்கையினி லெங்கும்
   போயலைவை மாவினிணர் அவ்வணஞ்சு வைத்து
   மதுக்களிவண் டேகமல மட்டும்வதி வுற்று
   மகிழ்ந்திதனை யெவ்விதம றந்தனைகொ லோதான்.

வேந்தன்.—ஆ ஆ! இராக வெள்ளந்தான் பாட்டு!

விதூஷகன்.—பாட்டின் சொற்பொருள் விளங்குகின்றதா?

வேந்தன்.—[முறுவல் செய்து] இவன் ஒருதரம் இவளைக் காதலித்தான். வசுமதிதேவியை வேறாக வைத்து அவள் என்னைப் பழிப்பதைத் தெரிந்துகொண்டேன். நண்ப! மாடவிய! நீ ஹம்ஸபதிகையிடன் சென்று 'சாமர்த்தியமாகப்பழிக்கப் பட்டேன்' என்று நான்சொன்னதாகச் சொல்.

விதூஷகன்.—நீர் எப்படி ஆணை செய்வீர் அப்படியே. [எழுந்து] ஏ, நண்பரே! பிறர்கைகள் என் குடுமிபற்றி இழுக்க அவளால் அடிக்கப்படுவேன்; விண்ணரமகளிரால் பிடிக்கப் பட்ட வீதராகனைப் போல எனக்கு விடுதலை யில்லையாகும்.

வேந்தன்.—போ, நாகரிகமுறையாக இவளுக்குத் தெரிவி.

விதூஷகன்.—கதி ஏது? [என்று சென்றனன்]

வேந்தன்.—[தனக்குள்] பொருள்பொதிந்த பாடலைக் கேட்டு என்ன காரணமோ நான் (காதலியரைப்) பிரியாதிருந்த போதும் கடுமையான கவலைக் குள்ளாகின்றேன். மற்று,

2. வனப்புளது கண்டுமது ரிக்குமிசை கேட்டு
மகிழ்ந்தமரு மேனுமுயிர் வன்கவலை கூரும்
முனர்த்தெரி வராதுதனுள் வாசனையின் மூழ்கும்
முன்பிறவி நேயமன னினைதல் மெய்யாம்.

[என்று பெருங்கலக்கத்துடன் நிற்கின்றான்]

[பின்னர்க் கஞ்சுகி புகுகின்றான்]

கஞ்சுகி.—ஐயோ! நான் இந்த நிலைமையை அடைந்து விட்டேனே!

3. நடைமுறைப் படியெனக் கவனமுற் றுவளகம்
நனிபுரப் பதுசெயற் குரியவேத் திரமிதோ
தொடுகிழப் பருவமா யடிதளா டிப்படர்
தொறும்வழிக் குதவுதற் கினியகைத் தடியரோ.

தருமகாரியம் அரசரால் (எவ்வமயத்தும்) தள்ளத்தக்க தன்று. இப்பொழுதுதான் அறவணையை விட்டு எழுந்த இவருக்குத் திரும்பவும் இடையூறு விளைக்கும் ஆதலால் இந்தக் கண்வர்மாணவர் வரவைத் தெரிவிக்கும் காரியத்தை நான் வகிக்க மாட்டேன். ஆயினும் இந்த உலகத்தலைமையைக் கொண்ட அதிகாரமானது இளைப்பாறுதற்கு இடந்தராததுதான். எப் படியெனின்,

4. ஞாயிறொரு போதுபரி பூண்டதை யவிழ்க்கான்
ஞாலமிசை வாயுபக லும்மிரவும் வீசும்
ஆயபுவி பாரநித மேந்துமர வண்ணல்
ஆறிலொரு பாகமடை வார்க்குமற மஃதே.

இருக்கிற வரைக்கும் ஆணையை விடாது செய்கின்றேன். [சுற்றிப்பார்த்து நடந்து]

இதோ! மன்னர்பிரான்

5. தன்குழவி யிற்குடி நடாவிநர ரில்லாத்
தனித்தல மிதிற்சமன மின்றிவதி கின்றான்

கன்றுபிடி மேயரவி காய்தலுற யானைக்
காவலர சங்கொர்குளிர் நீழல்புக லொத்தே.

[அணுகி] வேந்தரே! வெல்க, வெல்க!

இமாலயத்தின் தாள்வரைவனத்தில் உள்ள இவர், காசிபருடைய தூதுமொழியை வகித்துக்கொண்டு பெண்பாலாருடன் வந்த மாதவராவர். இது கேட்டபின் தேவரீர் ஆணை (எதோ).

வேந்தன்.—[ஆர்வமுடன்] என்ன! காசிபருடைய தூது வகித்தவர்களா?

கஞ்சுகி.—வேறு யார்?

வேந்தன்.—அப்படியானால் உபாத்தியாயர் சோமராதருக்கு வேதத்திற் சொல்லிய விதிமுறைப்படி ஆசிரமவாசிகளை வரவேற்று உபசரித்துத் தாமே அவர்களை இங்குப் புகுவித்தற் குரியரென்று என் வார்த்தையால் விண்ணப்பம் செய். யாமும் மாதவரைத் தரிசித்தற்குசிதமான அவ்விடத்தில் ஆவலோடு எதிர்பார்த்து நிற்போம்.

கஞ்சுகி.—தேவரீர் ஆணை எப்படியோ அப்படி.

[என்று சென்றனன்]

வேந்தன்.—[எழுந்து] வேத்திரவதி! தழற்செல்வனை வழிபடும் தலத்திற்கு வழியைக் காட்டு.

வாயிற்காரி.—தேவரே! இதோ, இதோ.

வேந்தன்.—[செல்கின்றவன்] [அரசாட்சியில் உள்ள துன்பத்தை வெளிப்படுத்தி] எல்லாப்பிராணிகளும் விரும்பியதை அடைந்தவுடன் இன்பம் எய்துகின்றன. அரசர்க்கோ எனின் விரும்பியது கிடைத்த இடத்தும் அது துன்பத்தை உள்வைத்துக்கொண்டே இருக்கின்றது.

6. உயர்த்திகள் கிடைத்தபொழு தாவல்முடி வெய்தும்
உற்றது புரப்பதி லிவற்கிடர் மிகுக்கும்
துயர்ப்படல் விடற்கிலை தொடற்கிலைம ணாட்சி
சூழ்வெயில் மறைத்தகுடை தோய்கையுள தண்டின்.

[திரைமறைவில்]

இருவைதாளிகர்.—(தாழிசைபாடுவார்) தேவரே வெல்க.

முன்னவன்.—

7. நின்னின்ப மேவாது மண்ணின் பொருட்டே
நீபாடு படுகிற்பை நிதமென்ப தென்னே
உன்கன்ம மிவ்வா றியற்கைத் திறத்தின்
உனக்குற்ற தாகுங் கனப்பாத வங்கள்
சென்னித் தலத்தே கடும்பானு வெப்பம்
சேரப் பொறுத்துத்தன் கீழெய்தி னோர்க்குக்
கொன்னுங் கொடுந்தாப மில்லா தளித்துக்
குளிர்நீழல் நல்கும் விதங்கண்ட தன்றோ.

பின்னவன்.—

8. தவறிச்செலு மவரைத்தகு தண்டத்தற முய்ப்பை
தர்க்கிப்பவ ரமையப்புர வொழுகச்சொல வல்லாய்
கவினற்செல்வ நிலையிற்றிரள் கிளைநிற்கப வுறவோர்
கடன்முற்றவு முடிகிற்பது குடிகட்குநி னிடையே.

வேந்தன்.—வாடிய என் உள்ளத்தை இவை புதிதாகத் தளிர்க்கச் செய்வன. [என்று செல்கின்றான்]

வாயிற்காரி.—இதோ தழற்செல்வனை வழிபடும் மேடை, ஆகுதி உதவும் பசுநிற்கும் தாழ்வாரவாயிலிற் புதிதாக நன்கு அலகிட்டு விளக்கப்பட்டுத் திருவிதாக உள்ளது. இதில், தேவரீர் ஏறி அருள்க.

வேந்தன்.—[அதில் ஏறிப் பரிசனத்தின் தோளைப்பற்றி நிற்கின்றான்]

வேத்திரவதீ! எதைக்கருதிப் பகவான் காசிபர் என்பக்கல் முனிவரை வரவிடுத்திருக்கலாம்?

9. விரதா திகள்முற் றியதா பதர்பால்
விறல்நற் றவமே கெடுமா றிடையூ
றுருகா வுளதோ அறமே வளர்கான்
உறவா முயிர்கட் கெவனு னுமிடர்
தரலா யினதோ இலையேல் விளைவே
தடையா யினதோ கொடிஎன் மறனாற்
றெரியா திவிதம் பலவும் கருதிச்
சிதைவே னளவில் படரா னுளமே.

வாயிற்காரி.—நல்லொழுக்கத்திலே மகிழ்கின்ற முனிவர் தேவரீரைப் பெருமைபாராட்ட வந்துள்ளா ரென்று நம்புகின்றேன்.

[இதன் பின்னர் முனிவர்கள் கௌதமியுடன் சகுந்தலையை முன்னிட்டுவரக் கஞ்சுகியும் புரோகிதரும் முன்னே புகுகின்றனர்]

கஞ்சுகி.—தேவர்காள்! இதோ, இதோ.

சார்ங்கரவன்.—ஏ, சாரத்வத!

10. நீதிமுறை யின்வழுவி லாதுவளர் செல்வம்
நீடுநர பாலனிவ னேனும்வரு ணத்துப்
போதவிழி வாயவனு மேதவழி போகாப்
பொற்பினுள னேனுமெது போதுநரர் பல்காப்
பூதலவ னம்பயில நின்றமன னாலே
புக்கபல மக்கள்நிரை தொக்குவளர் கோயில்
ஈதுபெரி துந்தழலி னுல்வளையு மில்லம்
என்னநுழை தற்கரிய தென்றெணுவ லென்னே.

சாரத்வதன்.—நகரத்திற் புகும்போதே நீ இப்படி ஆகிவிட்டாய். நானும்,

11. நெய்பூசி னேனைக் குளித்தோனு மாசில்
நிற்போனை நற்றூய னுங்கண் ணுறங்கல்
செய்வோன் றனைக்கண் விழித்தோனும் வன்கட்
சிறைப்பட் டிருந்தோனை மற்றுத்த னிட்டத்
தெய்தற்கு வல்லானு மெதிர்தந்து கண்டாங்
கிக்கோயி லின்பக்கல் இன்பத்தின் வாழப்
பெய்துள்ள பேராசை யொன்றூ னலைந்து
பெயர்கின்ற பல்லோர் தமைக்கண்கொள் வேனே.

சகுந்தலை.—[நிமித்தத்தைக் குறிப்பித்து]

ஐயோ! என் இடக்கணல்லாத கண் துடிப்பது ஏனோ?

கௌதமி.—குழந்தாய்! அமங்கலம் எய்தாது ஒழிக. உன் கணவன் குலதெய்வங்கள் உனக்கு மங்கலங்களை உதவுக. [என்று நடந்தனள்]

புரோகிதன்.—[அரசரைக் காண்பித்து] ஓ! மாதவர்களே! வர்ணாசிரமங்களைப் பரிபாலிக்கும் இவ்வரசர் முன்னமே ஆசனத்தைவிட்டு எழுந்து உம்மை எதிர்நோக்கி நிற்கின்றார். இவரைப் பாருங்கள்.

சார்ங்கரவன்.—ஏ! மகா ப்ராமணரே! இது மகிழ்ச்சி செய்வதே ஆம். ஆயினும் நாங்கள் நடுநிலையின் உள்ளனம். எதுபற்றியெனின்,

12. பொறைக்கனி சுமந்துயர் தருக்குலம் வணங்கும்
புதுப்புன லெடுத்துவி ணெடிற்பட விறங்கும்
நிறைத்தநிதி யிற்பெரு மிதத்திலர் நலோரிந்
நிகழ்ச்சிகள் பிறர்க்குபக ரிப்பவ ரியற்கை.

வாயிற்காரி.—தேவரே! இந்த முனிகளுடைய முகம் மலர்ந்து விளங்குதலால் இவர் நம்பிக்கைக்குரிய சாந்தமான காரியத்தை மேற்கொண்டவரென்று தெரிகின்றேன்.

வேந்தன்.—[சகுந்தலையைப்பார்த்து] பின்னர் இப்பெருந்தகையாள்

13. சுடர்மெய்யெழில் புறமேவிழ் தெரிதற்கில தாகித்
துகிலின்மறை வுறநற்றவ நிதியன்னவ ரிவர்தம்
இடையின்முதிர் தருவெள்ளிலை யிடைமென்றளிர் சிவண
இவண்வந்தெதிர் தருநன்றுயர் இவளங்கனை யெவளோ.

வாயிற்காரி.—தேவரே! என் நினைவில் மகிழ்ச்சி கருக்கொண்டுளதேனும் வெளியில் வழியவில்லை. இவள் வடிவமோ மிகவும் காண்டற்கினியதாயுள்ளது.

வேந்தன்.— ஆகுக. பிறன்மனையாள் உற்றுநோக்கத்தக்கவள் அல்லள்.

சகுந்தலை.—[கையை மார்பில்வைத்துகொண்டு] (தனக்குள்) ஏ மனமே! என் இங்ஙனம் நடு நடுங்குகின்றனை? ஆரிய புத்திரருடைய உள்ளக்கருத்தை உணர்ந்து தைரியமாயிரு.

புரோகிதன்.—[முன்சென்று] மாதவர்கள் விதிப்படி ஆராதிக்கப்பெற்றனர். இவர்கள் தம் ஆசிரியருடைய தூதுச் செய்தி ஒன்று கொண்டுவந்துள்ளனர். அதைத் தேவரீர் கேட்டருளத்தகும்.

வேந்தன்.—கவனமாயுள்ளேன்.

முனிவர்.—(கையை உயர்த்தி) அரசரே! வெல்க!

வேந்தன்.—எல்லோரையும் வணங்குகின்றேன்.

முனிவர்.—விரும்பியதை அடைவாயாக.

வேந்தன்.—முனிவர்கள் இடையூறிலாது தவம் புரிகின்றனரா?

முனிவர்.—

14. நலத்தவ ரறச்செயலி னுக்கெவித மூறு
நண்ணுமு னிடத்துலகு காவலுள போழ்தில்
நிலத்திடை வெயிற்கிரண ஞாயிறெதிர் காயும்
நேரமெவி தம்புகுவ தாகுமிருள் வேறே.

வேந்தன்.—என்னுடைய அரசப்பெயர் உண்மையிற் பொருளுடையதேயாம்.

அது நிற்க. பகவான் காசிபர் உலக நன்மையின்பொருட்டு நலமாக வுள்ளனரா?

முனிவர்.—சித்தியடைந்த பெரியோர், தம் வசமான நலங்கள் உள்ளவர், அவர் உம் கேடில் வாழ்வை முன்னர் வினவி இவ்வாறு கூறியருளினர்.

வேந்தன்.—பகவான் என்ன ஆணையிடுகின்றார்?

சார்ங்கரவன்.—ஒத்த காதலாற் காந்தருவமுறையில் இந்த என் மகளை நீ மணந்ததென்பது யாது, அது நம் இருவர்பாலும் அன்புள்ள என்னால் அநுமதிக்கப்பட்டதேயாம். எங்ஙனமெனின்,

15. நயத்தகு விருந்தினர் தமக்குண்முத லாக
நானுனை மனங்கொள்வல் சகுந்தலை விருந்தே
மெயிற்றிகழ்வ தொப்பளய னோர்வது வரர்க்குள்
மேவஇயை வித்தனன் வசைக்கினியு ளாகான்.

அதனால் இப்போது கருவடைந்துள்ள இவளைக்கொண்டு உடன்செய்யவேண்டிய தருமங்களை இனிது நடத்துக என்று.

கௌதமி.—ஐய! நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நான் பேசுவதற்கு உரிய சமயம் இஃதில்லை, எப்படி என்னின்,

16. விருப்பிலள் இவள்குரவ ரோடளவ ளாவல்
விருப்பிலை நினக்கும்வின வக்கிளைஞ ரோடும்
தெரித்தெதுசொல் வேன்ஒருவ ருக்கொருவர் தாமே
செய்தஇதில் யானிவண் தனித்தனி பிரித்தே.

சகுந்தலை.—[தனக்குள்] ஆரியபுத்திரர் என்ன சொல்வாரோ (தெரியவில்லையே)!

வேந்தன்.—இப்படிச் சொற்றொடுப்பது என்ன?

சகுந்தலை.—[தனக்குள்] சொற்றொடுப்பது என்ற வார்த்தை நிச்சயமாக நெருப்பேதான்.

சார்ங்கரவன்.—இப்படி என்பது எப்படி? நீரே மிகவும் நன்றாய் உலகியல் அறிந்த விரகர் ஆவீர்.

17. பெற்றகண வற்குரியள் கற்புடைய ளேனும்
பிறந்தக மிருப்பவளை வேறையுறும் ஞாலம்
மற்றவள் விருப்பமில னேனுமண வாளன்
மாடுறை வதற்குவிழை வார்கிளைஞர் பெண்ணை.

வேந்தன்.—இப்பெருந்தகையாள் முன்னம் என்னால் மணக்கப்பட்டவளா என்ன?

சகுந்தலை.—(துன்பத்துடன் தனக்குள்) ஏ, மனமே! உன்னுடைய ஐயப்பாடு இப்போது பொருத்தந்தான்.

சார்ங்கரவன்.—

(முற்பாதி)

18. புரிந்தசெய னீயெவன் வெறுப்பைஅறன் மாறிப்
புரிந்ததெவன் செய்தது மறத்தலெவ னேயோ

வேந்தன்.—இந்தப்படி பொய்யாகக் கற்பனைசெய்யும் கேள்விக்கு இடனெங்குள்ளதோ?

(பிற்பாதி)

18. பெரும் பொருள் படைத்ததின் மயங்கின ரிடத்துப்
பொருந்தும்வெகு வாகவிப ரீதமிது போலும்.

வேந்தன்.—பிருதியாக இழித்துரைக்கப்பட்டேன்.

கௌதமி.—குழந்தாய்! சிறிதுபோதுக்கு வெட்கப்படாமலிரு! அம்மட்டில் உன் மூடுதுகிலை எடுக்கின்றேன். அதன்பின்

உன்னைக் கணவர் அறிந்துகொள்வர். [என்று சொன்னவாறு செய்கின்றாள்]

வேந்தன்.—[சகுந்தலையை உற்று நோக்கித் தனக்குள்]

19. சுடரினிற் குறைவிலீ துருவிவா றணிதுமுன்
தொட்டதோ அல்லதோ துணிகிலேன் விடியலிற்
படர்பனித் துளியுள்வீழ் தளவலர்ப் பமரமாய்ப்
பருகவோ ஒழியவோ வலியிலே னுளன்மெய்யே.
[என்று ஆலோசித்துக்கொண்டு நிற்கின்றான்]

பரிசனம்.—[பிறரறியாமல்] ஆச்சரியம். நம்மைத் தாங்கும் அரசர் தருமத்தையே எதிர்பார்ப்பவர். இப்படிப் பட்ட வடிவம் சுகமாய்க் கிடைக்கப்பெற்றுப் பார்க்கப்பட்டும் வேறெவன் தான் விசாரிக்கப் புகுவான்!

சார்ங்கரவன்.—ஓ அரசரே! நீவிர் ஏனோ இம்மாதிரிமௌன மாயுள்ளீர்?

வேந்தன்.—ஓ தவச் செல்வர்காள்! எவ்வளவு சிந்தித்தாலும் இப்பெருந்தகை மாதை நான் பற்றினேன் என்ற நினைவு நிச்சயமாக எனக்கு வரவில்லையே. அங்ஙனமாகவும் கருக்கொண்டுள்ளவள் என்று குறிகளால் நன்கு தெளியப்படும் இப்பெண்டிற்கு யான் கணவனாதல் கூடுமோ என்று ஐயப்படுகின்ற நிலையில் எப்படி ஏற்றுக்கொள்வேன்.

சகுந்தலை.—[துன்பமுற்று அப்புறமாய்த் தனக்குள்] ஆரியருக்கு மணந்ததே ஐயப்படலாயின் நெடுந்தூரம் மேலே போன என் பேராசைக்கு இனிப் புகலிடம் எங்கேயோ?

சார்ங்கரவன்.—அவ்வளவு வேண்டாம்.

20. தன்னுடைமை வவ்வினவ னுக்கதுதந் தாங்குத்
தன்மக ளணைந்ததுடன் பட்டவள் தனக்கு
மன்னுரியை யென்றுகள்வன் மானுநினை யெண்ணு
மாமுனி நிலைவ மதிப்படைய லாமே;

சாரத்வதன்.—ஏ சார்ங்கரவ! நீ சும்மா இரு. ஏ சகுந்தலே! நாங்கள் சொல்லுவது சொல்லியாயிற்று. அத்தகைய இப் பேரரசர் வார்த்தை (உத்தரம்) இப்படியிருக்கிறது. இவருக்கு நம்பிக்கை யுண்டாகக் கூடிய எதிர்மொழியை நீ தருக.

சகுந்தலை.—(அப்புறமாக மறைவில்) (அப்போது) அவ்வளவு பெரிதான இவர் காதல் இப்போது இந்நிலை யடைந்ததாயின் இவர்க்கு இங்கு நினைப்பூட்டுவதால் என்ன பயனாகுமோ? என் உயிர் இப்போது துன்பப் படவேண்டியதேதான். (வெளிப்படையாக) ஏ, ஆரியபுதல்வரே! [என்று பாதி மொழிந்து] மணந்தபோதே ஐயப்படுதற்குரிய இவ்வமயத்தில் இந்த மரியாதை வழக்கத்திற்கு இடனில்லை. ஏ, புருகுலத்தரசரே! முன்னே ஆசிரமசாலையில் இயல்பாக உயர்ந்த மனமுடைய இவளை (என்னைச்) சமயத்துக்குத் தக்கவாறு சொல்லி ஏமாற்றிவிட்டு இப்போது இவ்வித வார்த்தைகளால் புறந்தள்ளுதல் உமக்குப் பொருந்தியதாகுமா?

வேந்தன்.—(காதுகளை மூடிக்கொண்டு) பாவம் ஒடுங்கி யொழிக.

21. இக்கொடி துரைத்தெனது பேர்கெட இழித்தற்
கென்கொல்பெரு வேட்கையிவ ணெய்தினை யடைந்தாய்
அக்கரை யிடித்தறல் தெளிந்தது கெடுத்தங்
கார்மர மெறிந்துபுகு மோர்நதி நிகர்த்தே.

சகுந்தலை.—ஆகுக. உண்மையிற் பிறனாற் கொள்ளப்பட்டவளாக ஐயுறுகின்றதனால் நீர் இவ்வாறு சொல்லத் தொடங்கினீராயின் அந்த உம்முடைய ஐயத்தை இந்த அடையாளத்தால் ஒழிக்க விரும்புகிறேன்.

வேந்தன்.—உயர்ந்த முறைதான்.

சகுந்தலை.—(மோதிரம் இருந்த இடத்தைத் தடவி) ஐயோ கெட்டேன்! என் விரல் மோதிரமில்லாத தாயிற்றே.

(என்று துன்பத்துடன் கௌதமியை நோக்குகின்றாள்)

கௌதமி.—சக்கராவதாரத்தினடுவிற் சசிதீர்த்தம் என்னும் நீரினை நீ வழிபடும் நிலையில் உன் மோதிரம் நழுவி விழுந்திருப்பது நிச்சயம்.

வேந்தன்.—[புன்சிரிப்புடன்] புதிது புதிதாகத் தோன்றும் அறிவுள்ளது பெண்பிறப் பென்பர். அது, இதுதான்.

சகுந்தலை.—இங்கே எப்படியும் விதி தன் வலிமையைக் காட்டிற்று. வேறொன்று உமக்குச் சொல்லுகிறேன்.

வேந்தன்.—இப்போது கேட்பது செய்வாம்.

சகுந்தலை.—ஒரு பகலில் நவமாலிகைப் (புதுமல்லிகை) பந்தலில், தண்ணீருள்ள தாமரையிலைத்தொன்னையை உம் கையில் வைத்திருந்தீர்.

வேந்தன்.—இன்னுங் கேட்போம்.

சகுந்தலை.—அத்தருணம் நான் மகவுபோல வளர்த்த நெடுங் கடைக்கண் என்ற பேருள்ள அந்த மான்கன்று கிட்ட வந்தது. நீர் இரக்கப்பட்டு இது முதலிற் பருகுக என்று சொல்லித் தண்ணீரைக் காட்டி அதை அழைத்தீர். அது உம்மிடம் பழகாததனால் உம்கையின் அருகில் வரவில்லை. பின்னர் அதே தொன்னை நீரினை நான் வாங்கினவுடன் அது என்னிடம் அன்புவைத்து வந்து உண்டது. அப்போது நீர், எல்லாம், ஒத்த இனத்திலே தான் நம்பிக்கை வைக்கும். நீயும் அதுவும் காடுவாழ் சாதி என்று இவ்வாறு பரிகாசஞ் செய்தீரில்லையா?

வேந்தன்.—தம் காரியத்தை நிறைவேற்ற விரும்பும் பெண் டிர் இதுமுதலான பொய்மயமான இனிய தேன் மொழிகளாற் சிற்றின்பத்தில் ஆசையுள்ளவர்களைக் கவர்கின்றனர்.

கௌதமி.—பெருந்தகையீர்! நீரிம்மாதிரி பணிப்பதற்கு உரியீரில்லை! தவவனத்தில் வளர்ந்த இவள் கபடமே அறியாதவள்.

வேந்தன்.—தவமுதியோய்—

22\. பெண்பிறவி யிற்பயில்வி லாதுவிர குண்மை
பேணுமனி தப்பிறவி பேர்வுழியு மோர்வம்
வண்மதியி னர்க்கென்குறை விண்தவழ்முன் தன்சேய்
மற்றொருபுள் ஓம்பவிடு மாங்குயிலுண் டன்றே.

சகுந்தலை.—[பெருஞ்சினத்துடன்]

ஆரிய ஒழுக்கமில்லீர்! உம்முடைய பொய்ம்மனத்தாற் பிறரை அளந்து பார்க்கின்றீர். தருமம் என்னுஞ் சட்டையின் மறைந்து புல்மூடிய கிணற்றுக்கு ஒப்பாகும் உம் நடிப்பை எவர்தாம் பின்பற்றுவார்?

வேந்தன்.—[தனக்குள்] இவளுடைய பெருஞ்சினம் கபடமில்லாததுபோலக் குறிக்கொள்ளப்பட்டு என்புத்தியை ஐயத்தில் வைப்பது. அஃதெப்படியெனின், இவளால்,

23. மறைந்துபுரி காதல்வினை வன்கொடிய நெஞ்சின்
மறந்தறி வராதுமருள் வேனிடை வெகுண்டு
சிறந்தமத னன்சிலை யொடிந்ததெனன வெங்கண்
சிவந்தனள் வளைந்தபுரு வங்கள்பிள வுண்ட.

[வெளிப்படை] நல்லோய்! துஷ்யந்தன் ஒழுக்கம் உலகறிந்தது. அங்ஙனமாயும் இது தேறப்படவில்லையே.

சகுந்தலை.—வாயிலே தேனும் மனத்திலே விடமும் உள்ள இவரை நம்பிப் புருகுலத்தவர் என்று இவர் கைகளில் அணைய லுற்றதனால் யான் தன் மனம்போனபடி திரிகின்றவளாக நன்கு செய்யப்பட்டேன். [என்று முன்றானையால் முகத்தை மூடிக் கொண்டு அழுகின்றனள்]

சார்ங்கரவன்.—தடுக்கப்படாமல், தானாகச் செய்தகாதல் வேட்கை இவ்வாறு உயிரைச்சுட்டு வறுக்கின்றது.

24. அதனன் மறைவிற் புரியப் படுநட்
பதிகந் தெளிதந் துசெயத் தகுமால்
மதியாய் வறியா இதயத் தவர்பால்
வருநட் பிவிதம் பகையா யிறுமே.

வேந்தன்.—ஓய்! உன் பெருந்தகையாளிடத்துள்ள நம்பிக்கையினாலேயே எங்களை மிகுதியான பழிப்புரைகளாற் குத்துகின்றாய்.

சார்ங்கரவன்.—[வெறுப்புடன்] நீங்கள் (செவியிற்) கேட்டது தலை கீழாகத்தான் உள்ளது.

25. பிறந்தது முதற்சிறிதும் வஞ்சனை பயிற்றப்
பெறுதவ ருரைப்பபிர மாணமில போலும்
பிறன்கணதி வஞ்சக மியற்றுவது வித்தைப்
பெரும்பய னெனப்பயில்வர் பேசுவதுமெய்யாம்.

வேந்தன்.—ஓய், மெய்சொல்வோய்! இப்படித்தான் நாங்களெல்லாம் இருப்பதாக ஒத்துக்கொள்வோம். இவளை வஞ்சிப்பதனால் எங்கட்கு என்ன கிடைக்கும்?

சார்ங்கரவன்.—வீழ்ந்து தொலைவதுதான்.

வேந்தன்.—புருகுலத்தவர் யாரும் விநாசத்தை வேண்டுவ ரென்பது நான் நம்பமாட்டேன்.

சாரத்வதன்.—இவ்விடை மொழிகளால் என்ன பயன்? குரவர் தூதுமொழிப்படி நாம் நடந்துவிட்டோம். நாம் மீண்டு செல்வோம்.

[வேந்தனைப் பார்த்து]

26. இன்னவள் நினக்குரிய பன்னியித னாலே
ஈங்கிவளை நீவிடுவை கொள்வை நினதிச்சை
தன்மனைவி யின்கணெது வும்புரிவ தற்குத்
தகுந்தலைமை யுள்ளதெவ னுக்குமிவ னன்றோ.

கௌதமி! முன்னே நட. (என்று புறப்பட்டனர்)

சகுந்தலை.—இப்பொய்ம்மையாளரால் இங்கே ஏமாற்றப் பட்டேன். புலம்புகிற என்னை நீங்களுங்கூட அப்படிக் கைவிட்டுப்போவதென்னே! [என்று பின்தொடர்கின்றாள்]

கௌதமி.—(நின்று) பிள்ளாய், சார்ங்கரவ! இரக்கப்படும் படி அழுகின்ற இச்சகுந்தலை நம் பின் தொடர்கின்றனள். தன்னை அறவும் தள்ளிவிட்ட கொடிய கணவனிடத்தில் என் புதல்வி என்னதான் செய்வளோ!

சார்ங்கரவன்.—[கோபத்துடன் திரும்பி]

(கேட்டில்) முற்கூறு கொள்வோய்! உன்நினைப்பின்படி நடக்க விரும்புகின்றாயா?

[சகுந்தலை பயமடைந்து நடுங்குகின்றாள்]

சார்ங்கரவன்.—சகுந்தலே!

27. எதுபுவிக் கரசுரைத் தனனதன் படியுளா
யெனின்முனிக் கெதுபயன் குலமிறந்துள நினால்
இதனின்மற் றிதயசுத் தியளெனத் துணிவையேல்
இறைமனைக் கடைநினக் கடிமையுந் தகுவதே.

நில்லு, நில்லு. நாங்கள் போகவே செய்வோம்.

வேந்தன்.—ஏ, தவத்தீர்! நும் பெருந்தகையாளைப் பிரியும்படி செய்வதேன்னோ?

28. அம்புலி யலர்த்துவது பைங்குமுத மேயாம்
அம்பரிதி செங்கமல மன்றியலர் விக்கா

தைம்பொறி யடக்கவல னன்னியர்கை தொட்ட
வங்கனைகண் நெஞ்சுதொட வம்முகன்வை யானே.

சார்ங்கரவன்.—நீர் வேறொரு மனைவியைக் கூடுதலில் ஆழ்ந்து முன்னிகழ்ந்தது மறந்திருக்கவும் அதன்கண் எப்படி அறமில்லாமைக்கு அஞ்சுகின்றீர்.

வேந்தன்.—இவற்றில் வலியதும் எளியதும் தேவரீரையே கேட்கின்றேன்.

29. யான்மூட னேவன்கொ லோமற்றிந் நங்கை
யியம்பிற் றெலாம்பொய்கொ லோவைய முற்றேன்
யானில் விடுத்தேனு மாவேன்கொல் வேற்றான்
இல்லாள் தொடும்பாவி யாவேன் கொலோதான்.

புரோகிதன்.—[ஆராய்ந்து] அப்படியாயின் இப்படிச் செய்வீர்.

வேந்தன்.—தேவரீரே எம்மை ஏவும்.

புரோகிதன்.—இப்பெருந்தகையாள் கருவுயிர்க்கும்வரையும் என் மனைக்கண் இருப்பாளாக. இப்படி ஏன் சொல்கின்றேன் எனின் சக்கரவர்த்தியாகும் புதல்வனையே முதலிற் பெறுவீரென்று முன்னே சாதுக்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளீர். முனிவர்மகள்மகன் அந்த இலக்கணம் அடைந்தவனாக உளனேல் இவளைத் தூயநெஞ்சினள் என்று மகிழ்ந்து அந்தப்புரத்திற் புகும்படி செய்வீர். வேறு அடையாளம் உடையவனாயின் இவளைத் தந்தையார் பக்கற் சேர்ப்பிப்பது முறைமையாகும்.

வேந்தன்.—குரவர் ஆலோசனை எப்படியோ அப்படி.

புரோகிதன்.—குழந்தாய்! என் பின்னே வா.

சகுந்தலை.—பகவதி, பூமிதேவி! எனக்குப் புகும்வழி திறந்தருள்வாய். [என்று அழுதுகொண்டு புரோகிதருடன் சென்றனள். தவவாழ்நரும் போயினர்]

வேந்தன்.—[சாபத்தால் நினைவு மறைக்கப்பட்டுச் சகுந்தலை போய்விட்டாளே என்று கவலையுறுகின்றான்]

[திரை மறைவில்] ஆச்சரியம், ஆச்சரியம்!

வேந்தன்.—[கேட்டு] என்ன இருக்கலாம்?

புரோகிதன்.—[புகுந்து ஆச்சரியத்துடன்]
தேவனே! இப்போது அற்புதம் அன்றோ நிகழ்ந்தது!

வேந்தன்.—யாது கொல்!

புரோகிதன்.—தேவ! கண்வர் பணியாளர் திரும்பிச் செல்கையில்—

(முற்பாதி)

30. தனதுபாக் கியமதைப் பழியுரைத் தினநலாள்
தனதுகை யிணையுயர்த் தழுவதற் கெழுவளால்

வேந்தன்.—அப்புறம்?

புரோகிதன்.—

(பிற்பாதி)

மினல்பரப் புறுபெண்மெ யரமகட் குரியநீர்க்
கினிதடுத் திவளெடுத் தெழுமறைந்த துபினே.

[அனைவரும் ஆச்சரியப்படுவது காட்டினர்]

வேந்தன்.—பகவ! அந்தச் செல்வம் முன்னால் வந்து நின்றும் நம்மால் தள்ளியே விடப்பட்டது. இன்னும் வீணை ஊகத்தில் ஏன் இழுக்கப்படுகிறோம். தேவரீர் சிரமபரிகாரம் செய்திரும்.

புரோகிதன்.—[நோக்கி] வெல்க!
[என்று வாழ்த்திச்சென்றனன்]

வேந்தன்.—வேத்திரவதி! மிகவும் கலங்கியுள்ளேன். படுக்கையறைக்கு வழியைக் காட்டு.

வாயிற்காரி.—இதோ இதோ. [என்று சென்றனள்]

31. முனிமாமக ளணைகாதலென் னுளமோதெரி யாமல்
முற்றும்புறன் விடலிற்றுணி வுற்றுள்ளன னெனினும்
எனதுள்ளறி யாமேயெழு துயரம்தவ வலிதாய்
இவள்மெய்சொல்வ ளெனநம்பவு மெனையேவுவ தொக்
[அனைவரும் சென்றனர்] [கும்.

(ஐந்தாம் அங்கம் முற்றும்.)

## ஐந்து, ஆறும் அங்கங்கட்கு இடைப்பிறவரல்

[இதன்மேல் தன்பிறகே ஒருவனைச் சிறைப்படுத்திப் பிணித்துவரும் காவலாளிகளுடன் நகர்காவல் செய்யும் இராச மைத்துனன் புகுகின்றான்]

காவலாளிகள்.—(அடித்து) அடே, திருடா! சொல்லு, சொல்லு. அரசர்க்குரிய திருப்பெயரை மணியிழைத்துப் பதித்த இம்மோதிரம் உனக்கு எங்கே கிடைத்தது?

ஆள்.—[தான் அஞ்சுவதுகாட்டி] பெரியோரே! அருள் புரிவீர். நான் இந்தத் தொழில் செய்வேன் அல்லன்.

முதற்காவலாளி.—பின்னை உன்னைத் தூய அந்தண னென்று கருதி அரசர் இதைத் தானங்கொடுத்தனரா என்ன?

ஆள்.—இப்போது கேளுங்கள். நான் சக்கராவதாரத்து நடுவிற் றங்கியிருக்கும் வலைஞன்.

இரண்டாங்காவலன்.—ஆறலைகள்வ! நாங்கள் நீ பிறந்த குலத்தைக் கேட்டேமோ?

மைத்துனன்.—ஏ, சூசக! முறையாய்த் தொடர்ந்து எல்லா வற்றையும் சொல்லவிடு. நடுவிலே இவனைத் தடைசெய்யாதிரு.

இருகாவலாளிகளும்.—எப்படி மைத்துனர் ஆணையோ, அப்படியே. சொல்லு.

ஆள்.—நான் வலைவீசி மீன் பிடிக்கும் தொழிலால் என் குடும்பத்தைத் தாங்கிவருகிறேன்.

மைத்துனன்.—[சிரித்து] உள்ளவரைக்கும் இந்தப் பிழைப்பு மிகவும் தூயதுதான்!

ஆள்.—எசமானரே! அப்படிச்சொல்ல வேண்டாம்.

1. குடிப்பிறப்பொ டொத்தகன்ம மிழிப்பதிற்பட மாயினும்
இடைத்தவிர்ந்து விடத்தகாவியல் பிற்றெனல்முறை யல்லவோ
மடுத்தநான்மறை வல்லவன்னருள் வாய்ந்தமென்மைய னாயினும்
படுத்துயிர்க்கிடர் செய்வினைக்குடன் பட்டபண்புகண் கண்டதே.

மைத்துனன்.—அப்புறம், அப்புறம்?

ஆள்.—ஒரு நாள் சிவந்த பெருமீனென்றை நான் சிறு துண்டங்கள் செய்தபோது அதன் வயிற்றினடுவில் இந்த மணிகளால் ஒளிவிடும் மோதிரத்தைக் கண்டு எடுத்துப் பிறகு அதை விற்கும் பொருட்டு வந்து காட்டிய நிலையில் கனந்தங்கிய தங்களால் பிடிக்கப்பட்டவனானேன். என்னைக் கொல்வீரோ விடுவீரோ. இது கிடைத்த வரலாறு இப்படியே.

மைத்துனன்.—ஜாநுக! கோரமான உடல்முடை நாறுவதால் இவன் மீன்பிடிப்பவன்றான் என்பதில் ஐயமில்லை. விரல் மோதிரம் வந்த வரலாறுதான் ஆராயத்தகும். ஆதலின் அரசர் கோயிற்கே போவோம்.

காவலாளிகள்.—அப்படியே. முடிப்பறுப்போய்! நட.

[எல்லாரும் நடந்து செல்கின்றனர்]

மைத்துனன்.—ஸூசக! யான்போய் இந்த விரன்மோதிரம் கிடைத்தவழியை அரசர்க்கு விண்ணப்பித்துப் பின்னர் அவர் ஆணையை எதிர்பார்த்துத் திரும்பிவரும்வரை இவனைக் கோபுர வாயிலிற் கவனமாக எதிர்நிறுத்திக் காத்துக்கொள்ளுக.

இருகாவலாளிகளும்.—அரசர் வெகுமானம்பெற மைத்துனர் உள்ளேபுகுக. (என்றவுடன் மைத்துனன் நடந்தனன்)

முதலாங்காவலாளி.—ஜாநுக! மைத்துனர் போய் நெடுநேரமானதே.

இரண்டாமவன்.—சமயங் கண்டுதானே அரசரிடம் புக வேண்டும்.

முதலாமவன்.—ஜாநுக! இவனைக் கொல்லும்பொருட்டு மாலையிட என்கைகள் துடிக்கின்றன. (என்று ஆளைக் குறித்துக் காட்டுகிறான்)

ஆள்.—தக்கோரே! காரணமில்லாது ஒருவனைக் கொலை செய்வது உரியதில்லை.

இரண்டாமவன்.—[நோக்கி] நம்முடைய எசமானர் அரசர் ஆணையினை எதிர்பார்த்துக் கையிற் சீட்டுடன் இந்தப் புறம் திரும்புவதாகக் காணப்படுகின்றார். கழுகுக்கு இரையாவையோ நாய் வாயைப் பார்ப்பையோ.

மைத்துனன்.—[நுழைந்து] ஸூசக! வலைவீசிப் பிழைக்கும் இவனை விடுக. மோதிரவரலாறு பொருத்தமானது.

சூசகன்.—எப்படி மைத்துனர் சொல்வதோ அப்படி.

இரண்டாமவன்.—இவன் எமன் வீட்டிற்குப் போய் மீண்டனன். (என்று ஆளைக் கட்டவிழ்த்து விடுவிக்கின்றான்)

ஆள்.—(மைத்துனரைக் கும்பிட்டு) பட்டரே! நான் பிழைத்தது உம் அருளால்தான்.

மைத்துனன்.—மோதிரத்தின் விலைக்குத் தக்க பரிசிலும் உனக்கு அரசர் தந்தார். (என்று ஆளின் கையிற் பொருளைக் கொடுக்கின்றான்)

ஆள்.—(வணங்கி வாங்கி) பட்டரே! அருளப்பட்டவனாயினேன்.

ஸூசகன்.—ஈதன்றோ பேருதவி! கழுமுனையதினின்று இறக்கி யானைக் கழுத்தில் இருத்தியது போலும்.

ஜாநுகன்.—மைத்துனரே! இந்த மோதிரம் அரசர் விரும்பியதென்பது இந்தப்பரிசிலே சொல்வது.

மைத்துனன்.—அவர் விருப்பம், அது பெருவிலையுள்ள மணிகளுடையதென்பதுபற்றி யன்று என நினைக்கின்றேன். அது கண்டதனால், தனக்கு மிகவும் இனிய ஒருவர் நினைப்பு உண்டாக்கியதுபற்றியாகும். இயல்பாகவே கம்பீர முள்ள வராயிருந்தும் ஒரு முகூர்த்தகாலம் கவலை கூர்ந்து கண்ணீருடன் விளங்கினர்.

ஸூசகன்.—மைத்துனர் நல்ல சேவகஞ் செய்தார் நம் வேந்தர்க்கு.

ஜாநுகன்.—மீன் பிடிக்கும் எசமானர்க்குத்தான் அவர் சேவகம் என்று சொல்லு. (என்று ஆளை வெறுத்துப் பார்க்கின்றான்.)

ஆள்.—ஏ, பட்டாரகரே! இதிற் பாதி உங்களது. உங்கள் நல்ல மனத்திற்கு விலையாகுக.

ஜாநுகன்.—இவ்வளவும் பொருத்தந்தான்.

மைத்துனன்.—ஏ, வலைஞனே! நீ மிகவும் மேலானவன். இது முதல் எனக்கு உயர்ந்த நண்பனாய்விட்டாய். நமக்குள் நட்பின் தொடக்கம் கள்ளே சான்றாக உண்டாதல் தக்கது. கள்ளுக்கடைக்கே நேரே போவோம்.

(என்று

# ஆறும் அங்கம்

[பின்னர் ஸாநுமதி என்னும் பெயருடைய அரமகள் ஆகாயமார்க்கத்தில் வந்து புகுகின்ருள்.]

ஸாநுமதி.—அரமகள் தீர்த்த ஸந்நிதியிடத்து முறையாகச் செய்ய வேண்டியது என்ருற் செய்தாயிற்று. இப்போது ஸாது ஜனங்கள் நீராடும் காலம் என்று தெரிகிறேன். இப்போது கோமுனி யுடைய முழுவரலாற்றையும் நேரே காண்பேன். மேனகையின் கூட்டுறவாற் சகுந்தலை யானவள் எனக்கு உடம் பாக உள்ளனள். தன் புதல்வியின் நிமித்தம் அவளும் என்னை முதலில் ஏவியிருக்கிருள்.

[சூழப்பார்த்து] வசந்த விழாக்கால மாயிருந்தும் விழாத் தொடங்குவது இல்லாததுபோல வேந்தன் கோயில் காணப் படுவது எதனுலோ? தியானத்திருல் எல்லாவற்றையும் உள்ள வாறறியும் ஆற்றல் எனக்கு உண்டு. இன்னும் என் பால் என் தோழி வைத்த பேரன்பு என்னுல் வெகுமானிக்கப் படவேண்டும். ஆயினும் இப்பொழில்காத்திருக்கும் இவ்விரு மகளிர்க்கும் மறைப்பு வித்தையால் யான் மறைந்து அவர் பக்கத்தே நின்று (எல்லாவற்றையும்) தெரிகின்றேன். (என்று நடித்துக் கொண்டு இறங்குகின்றனள்.)

[அதன்மேல் சேடி மாமரத்தின் அரும்புகளைப் பார்த்துக் கொண்டு புகுகின்ருள். வேருருத்தியும் அவள்பின்னே வரு கின்றனள்.]

முன்னவள்.—

2. வயந்தமதி யிற்குயி ரெனப்பசிய பொன்மை
மன்னிமகி ழுங்குயி லுடன்மிளிர்வை வண்டின்
இயைந்தவறு கால்சிதர மாவரு மரும்பே
இன்னிருது மங்கள மெனத்தெரிவை யெற்கே.

பின்னவள்.—ஏ, தோழீ! பரப்பிருதிகே! (அயலால் வளர்க்கப்பட்டோய்) என்ன இது? நீ ஒருத்தியாகவே பேசுகின்ருய்? (முணுமுணுக்கிருய்)

முன்னவள்.—மதுகரிகே! மாவின் அரும்பைக் கண்டு பரப்ருதிகா மகிழ்வது உண்டன்ருே. (பரப்ருதிகா=பிறரால் வளர்க்கப்படுவது=குயில் எ - று.)

பின்னவள்.—[மகிழ்ச்சியுடன் விரைந்து வந்து] மதுமாஸம் எப்படி வந்துவிட்டது?

முன்னவள்.—மதுகரிகே! மதமயக்கத்துடன் பாடித் திரிவதற்கு இதுவே உனக்கு உரிய காலம்.

பின்னவள்.—தோழீ! என்னைப் பிடித்துக்கொள். யான் அதுக்குள் நுனிக்கால்விரலால் ஊன்றி நின்று மாம்பூ மொட்டுக்களை மன்மதன் அர்ச்சனைக்காகப் பறிக்கிறேன்.

முன்னவள்.—எனக்கும் அந்த அர்ச்சனையின் பயனிற் பாதி கிடைக்குமல்லவோ.

பின்னவள்.—நாம் இருவரும் ஈருடம்புகளில் ஒருயிராக வாழ்கின்ருேம். ஆதலால் நீ அது சொல்லாவிடினும் கிடைப்பதேயாம்.

[தோழியாற் பிடித்துக்கொள்ளப்பட்டு நின்று அரும்புகளைப் பறிக்கின்ருள்]

ஆச்சரியம்! இம்மாவிற் பிறந்த அரும்புகள் இன்னும் மலராவிடினும் காம்பினின்று பறித்தவுடன் மணங்கமழ்வன. (என்று கபோதக்கையாற்கூப்பி)

3. வன்சிலை யெடுத்தமத னுக்கென எனுலே
 வழங்கலுற லாயினைவண் மாவின லரும்பே
கன்னிதன் புலந்தவித யங்குறியி னேவைங்
 கணைக்குளு நினக்கதிக மேன்மைபெறு வாயால்.

[என்று மாவரும்புகளை எறிகின்றனள்]

[திரையைத் திடீரென நீக்கிச் சினத்துடன் கஞ்சுகி புகுந்து] அறியாத பேதாய்! வேண்டாம். வேந்தரால் (தேவரால்) வஸந்தவிழாச் செய்தல் கூடாதென்று தடுக்கப்பட்டுள்ள

ஸமயத்தில் நீங்கள் மாவரும்புகளைப் பறிக்க ஏன் தொடங்குகின்றீர்கள்?

இருவரும்.—[அச்சமுற்று] ஐய! பொறுத்தருள்க. இது செய்தி தெரிந்தோ மில்லை.

கஞ்சுகி.—வேந்தராணை வஸந்தகாலத்து மலரும் மரங்களாலும் அவற்றிலுள்ள பறவைகளாலும் நன்கு அறியப்பட்டிருக்கையில் உங்களிருவராலும் கேட்கப்படவில்லையா? அஃதெப்படியோ,

4. மாந்தரு வரும்புமுன மேவெளி விடுத்தும்
வார்ந்தமக ரந்தமொடு சேர்ந்ததிலை தோன்றி
வாய்ந்துமல ரும்பருவம் வந்துமுகிழ் மட்டில்
வைத்துமல ராதபடி நிற்பது பனிப்போ
தூர்ந்துபெயர் தந்தொழிய வும்மினிய சேவல்
ஒண்குயிலி னன்குரல் களத்திடை யொடுங்கும்
போந்தவெரு வான்மதன னுந்தனது புட்டில்
புய்த்தகணை பாதியள விற்செருக லுள்வேன்.

ஸாநுமதி.—ஐயமே இல்லை. ராஜருஷி (கோமுனிவர்) பெருமகிமை யுடையவரன்றே!

முன்னவள்.—ஐய! மித்ராவசு என்னும் இராச்சியாதிகாரியால் வேந்தர்திருவடியின்கீழ்ப் பணிபுரிந்தொழுக ஏவப்பட்ட அந்நாள் முதல் இன்றுவரைக்கும் களிப்புச் சோலையிற் காவல்வினை புரிந்து வதிகின்றேமாதலால் இடையிற் றிடீரென வந்த இச்செய்தியை நாங்கள் கேட்டோமில்லை.

கஞ்சுகி.—ஆகுக. இப்படித் திரும்பவும் தொடங்கவேண்டாம்.

இருவரும்.—ஐய! எங்கட்கு(கேட்க) ஆவல் கூர்கின்றது. இம்மக்களாற் கேட்கத்தக்கது என்னின் இச்செய்தியைச் சொல்க. எதன்பொருட்டு நம் ஏந்தலால் வஸந்தவிழாத் தடுக்கப்பட்டது?

ஸாநுமதி.—மானிடர் விழாக்கொண்டாடுவதில் விருப்பமுள்ளவர்களன்றே. (இதன் தடைக்கு) ஒரு பெரிய காரணம் இருக்கவேண்டும்.

கஞ்சுகி.—பலரும் அறிந்த இது நன்மகளிர்உங்கட்குச் சொல்லப்படவில்லையா? சகுந்தலையைப் புறந்தள்ளிய இந்த உலகவசை உங்கள் காதிற் புகவில்லையா?

இருவரும்.—இராச்சியாதிகாரியின் வாயால் மோதிரங்கண்டதுவரை கேட்டிருக்கின்றோம்.

கஞ்சுகி.—அப்படியாயின் சொல்ல வேண்டியது சிறிதுதான். விரன்மோதிரங் கண்டவுடன் அந்நன்மகள்சகுந்தலை உண்மையாகவே மறைவிலே தம்மால் மணக்கப் பெற்றவளென்றும், மயக்கத்தால் அவள் புறந்தள்ளப்பட்டாளென்றும் வேந்தரால் நன்கு நினையலாயிற்று. அது முதலே அரசர் கழிந்ததற் கிரங்கத் தலைப்பட்டனர்.

5. இனிப்பவும் வெறுப்பர்முன மொப்பவுழை யர்க்கும்
எய்தலிலர் நேரின்வழி பாடுசெய நாளும்
தனிப்பலணை யிற்கிடைகொ ளாதுபுரள் வுற்றுத்
தங்கண்துயி லாரிரவு தாம்பல கழிப்பர்
மனைக்கண்மக ளிர்க்குரிய போதுசித மாற்றம்
மன்னியக ளோடலின் வழுங்கலரி தாகும்
பினர்ப்பிறர் பெயர்க்கவள் திருப்பெயர்பல் காலும்
பேசிநனி கூசிவெறி தாவர்நெடு நேரம்.

ஸாநுமதி.—எனக்குப் பிரியந்தான்.

கஞ்சுகி.—இதனாலுண்டாகிய மனவெறுப்பால், திருவிழாத் தடுக்கப்பட்டது.

இருவரும்.—பொருத்தமாயிருக்கிறது.

[திரைமறைவில்] வருக வருக தேவரீர்.

கஞ்சுகி.—[காது கொடுத்துக் கேட்டு]

ஏ! அரசர் (தேவர்) இங்கேயே வருகிறார். உங்கள் வேலையைச் செய்க.

இருவரும்.—அப்படியே. [என்று சென்றனர்]

[இதன்பின் கழிவிரக்கத்திற்கேற்ற வடிவுள்ள வேந்தனும் விதூஷகனும், வாயிற்காரியும் புகுகின்றனர்]

கஞ்சுகி.—[வேந்தரைப் பார்த்து] சிறந்த வடிவங்கள் எல்லா நிலையிலும் இனிய அழகுள்ளனவே; இப்படிக் கவலையுள்ள நிலை

யினும் அரசர் விரும்பத் தக்க காட்சியுடையராகவுள்ளனர். அஃதெங்ஙன மெனின்,

6. சிறந்தணி செயும்விதி துறந்திட மணிக்கை
செறிந்ததொரு பொன்வளை நெகிழ்ந்தந லுயிர்ப்பு
வறந்துசுட வின்னிதழ் சிவந்தன வெளுக்க
வண்டுயில்கொ ளாதுமனம் வெங்கவலை மல்க
நிறந்திகழ்க ணின்னொளி கலங்கியுள ரேனும்
நின்றத மியற்கையி னிலங்குகுண னாலே
திறந்துசெவி தின்னனி கடைந்தமணி போலத்
தேய்ந்தபொழு தத்துமொளி வார்ந்தெழில்செய்
[வாரால்.

ஸாநுமதி.—[வேந்தரைப் பார்த்து] தன்னை அவமதித்துப் புறந்தள்ளிவிட்டாலும் இவர்பொருட்டுச் சகுந்தலை வாடி வருந்துவது பொருத்தந்தான்.

வேந்தன்.—[கவலையால் மெல்ல நடந்து]

7. முதலிற் பிணைமான் விழியாள் விழைவாள்
முயல்வுற் றுணர்விக் கவுமே துயில்தந்
ததமுற் றிவிதங் கெடுநெஞ் சவனின்
றநுதா பமுழக் கவிழிப் பதிவண்.

ஸாநுமதி.—இரங்கத்தக்கவள் ஆகிய இத்தவமகள் பாக்கியம் இப்படியா உள்ளது!

விதூஷகன்.—[மறைவில்] திரும்பவும் இவர் சகுந்தலைக் காய்ச்சலாற் பீடிக்கப்பட்டுள்ளனர். இதை எந்த வழியாற் றீர்ப்ப தென்பது அறிகிலேன்.

கஞ்சுகி.—[அருகில் வந்து] வெல்க வெல்க வேந்தர் பெருமான்! மகாராசரே! களிப்புச் சோலையிடன் முற்றும் நன்றாய்க் கவனிக்கப்பட்டது. அரசர் விருப்பப்படி மகிழு மிடங்களில் வதிந்தருளலாம்.

வேந்தன்.—வேத்ரவதி! நெடும்போது விழித்திருந்ததனால் இன்றைக்கு அறவணையில் வீற்றிருக்க நம்மால் ஆவதன்று. முறைசெய்வதில் ஐயரால் எது கவனிக்கப்பட்டதோ

அதை ஓலையில் ஏற்றி இங்குத் தரலாம் என்று என்சொல்லால் அமைச்சர் ஆகிய பிசுநரிடம் சொல்லு.

வாயிற்காரி.—எப்படி வேந்தராணையோ அப்படி. [என்று சென்றனள்]

வேந்தன்.—வாதாயநா! நீயும் உன் வேலையிலில்லாமற் போகாதே.

கஞ்சுகி.—தேவரீர் ஆணை எப்படியோ. (அப்படி) [என்று நடந்தனன்]

விதூழகன்.—தேவரீர் ஈக்கூட இல்லாமற் போக்கிவிட்டீர். இப்போது இக்களிமரக்காவில் தாபம்போகக் குளிர்ந்து இனியதாகிய இந்தத் தலத்தில் நீவிர் சுகித்து மனமகிழ்வீராகுக.

வேந்தன்.—[பெருமூச்சுவிட்டு] கேடுகள் ஓட்டைகண்டு மேன்மேற் புகுவன என்ற பழமொழி யாதுண்டோ அது பிறிதின்கட் செல்லாததுதான். எங்ஙனமெனின்,

8. முனிமா மகளன் புநிலைக் கவொறு
   மூடும் மிருளென் னுளனீ துவிடத்
தனிமா முகிழும் பிணையும் மதனன்
   தனுவைத் தனனண் பவெனைத் தெறவே.

விதூழகன்.—நில்லுங்கள். இந்தத் தடிக்கட்டையால் மன்மதநோயை அழித்துவிடுகிறேன்.

[என்று தடிக்கட்டையைத் தூக்கி மாவரும்புகளை விழ வெறிதற்கு விரும்புகிறான்]

வேந்தன்.—[புன்சிரிப்புடன்] ஆகுக! நில்லு. பார்ப்பனர் வலி நன்கறிந்ததே.

நண்ப! எங்கு அமர்ந்து என் காதலியைச் சிறிதாவது அநுகரிக்கும் கொடிகளைக் காட்டி என் பார்வைக்கு இனிது செய்வேன்?

விதூழகன்.—நீவிர் நம் அருகிற் பணிபுரியும் சதுரிகை என்பவளை அழைத்து நாம் இந்த வேளையை மாதவிப்பந்தலின் கீழ் இருந்து கழிக்க விரும்பினேம், அப்போது அங்கு நம் கையாலெழுதிய சகுந்தலை வடிவமைந்த சித்திரப்பலகையை எடுத்து வருக என்று அவட்கு ஆணை செய்தீரன்றோ!

வேந்தன்.—மனமகிழ்தற்குரிய இடம் இப்பேர்ப்பட்டது தான். ஆதலால் அதே வழியைக் காட்டுக.

விதூஷகன்.—இதோ இதோ! தேவரீர்.

[இருவரும் போகின்றனர். ஸாநுமதியும் பின் தொடர்கின்றனள்.]

விதூஷகன்.—இது மணிச்சிலாவட்டத்தொடு கூடிய மாதவிப் பந்தல். இது நாம் நுகர்தற்கினிதாய் மலர்ந்து நம் நல்வரவை விரும்புவதுபோல் உள்ளது. இதனால் இங்குப் புகுந்து அமருங்கள். [இருவரும் புகுந்து அமர்ந்தனர்.]

ஸாநுமதி.—கொடிகளின் அருகினின்று என் சகியின் சித்திர வடிவினை அம்மட்டில் நானும் பார்த்திருப்பேன். பின்னர் இக்கணவரின் பலவிதமாக வெளிவரும் காதலைத் தெரிந்து (என்தோழிக்கு) அறிவிக்க விரும்புகிறேன். [என்று அப்படியே செய்து நின்றனள்]

வேந்தன்.—நண்ப! சகுந்தலையுடன் முதலிலே நிகழ்ந்த எல்லாச் செய்திகளையும் நினைக்கின்றேன். உனக்கும் அவற்றைச் சொல்லியுள்ளேன். அவளை நான் புறந்தள்ளிய போது நீ என்பக்கல் இல்லாமற் போயினாய். முன்னேயும் எத்தனையோ கதை சொன்ன நீ ஒரு சமயத்திலும் அவள் பெயர் கூடச் சொல்லவில்லை. நீயும் என்னைப்போல எப்படி மறந்துவிட்டாய்?

விதூஷகன்.—நான் மறக்கவேயில்லை. ஆனால் எல்லாவற்றையும் சொல்லி முடிவில் மறுபடியும் 'உன்னோடு பரிகாசமாகப் பிதற்றியது. ஈது உண்மையி னிகழ்ந்தது அன்று' என்று நீர் உரைத்ததனால், களிமண்மூளையுள்ள என்னால் நீர் சொன்னவாறே கொள்ளப்பட்டது. மேலும் வந்துதீரவேண்டியது வலிதன்றோ!

ஸாநுமதி.—இம்மாதிரியே (ஆவது).

வேந்தன்.—[நினைத்துப்பார்த்து] நண்ப! என்னைப் பாது காப்பாய்.

விதூஷகன்.—ஈதென்ன! உம்மிடம் இவ்வாறு காண்பது பொருந்துவதன்று, நன்மக்கள் ஒருகாலும் தங்களைத் துன்பத்

திற்கு இடமாக்கமாட்டார்கள்; பெருங்காற்றினும் மலைகள் அசையா அன்றே!

வேந்தன்.—தோழ! காரணமில்லாமற் புறந்தள்ளிய பெருந் துன்பத்திற்கு வசமாகிய என் காதலி என் நிமித்தமாகப் பதை பதைத்த நிலையை நினைத்து நினைத்துத் திடமாக யான் புகலிடம் இல்லாது தவிக்கின்றேன். அவளோ என்னின்,

9. புறந்தள்ளவு மிவணின்றுற வேகும்மவண் கூடப்
புகுதற்கென வவர்பின்முயல் பவளைக்குரு சீடன்
திறங்கொள்குரு வேபோலிவ ணீநில்லென வாயாற்
சேணுஞ்செலு மொலியின்மொழி செயலான் மறுபடியும்
நிறைதந்தறல் ஒழுகுற்றல மருமொண்பெரு விழியை
நெடுவெங்கொடி யேனென்னிடை நினையத்தணி யுய்த்தாள்
எறிதந்தகொல் விடனைத்தட வியவெங்கணை யெனவஃ
தெனைமெய்ம்முழு வதுநெஞ்சொடு மெரியச்சுடு வதுவே.

ஸாநுமதி.—ஆ! இம்மாதிரி (வருந்துவது) தம் வினைவசத் தால் ஆயதன்றே? ஆதலான் இவர் துன்பப்படுதலில் எனக்கு இன்பந்தான்.

விதூழகன்.—ஓய்! யாரேனும் ஓர் ஆகாயசாரணன் அவளைக் கொண்டு போயிருக்கலாமென்று எனக்கு ஓர் ஊகம் உண்டாவது.

வேந்தன்.—தன் பதி தெய்வமென்றிருப்பவளை வேறு யார் தான் தொட மனம் துணிவர்? உன் தோழி உதித்த இடம் மேனகை என்றன்றே கேட்டிருக்கிறேன். அவளுடன் திரிப வரால் நின்தோழி எடுத்துச் செல்லப்பட்டாள் என்று என் மனம் எண்ணுவது.

ஸாநுமதி.—இவன் மறந்ததுதான் ஆச்சரியம். உணர்ந்தது (ஆச்சரியம்) இல்லை.

விதூழகன்.—இப்படி யிருப்பின் நாளடைவில் அத்தகை நல்லாளுடன் கூடியுறைவீரன்றே.

வேந்தன்.—எப்படிப் போலும்?

விதூழகன்.—தம்பெண்கள் கணவரைப் பிரிந்து வருந்தும் நிலையைப் பார்ப்பதற்குத் தாய்தந்தையர் வலியிலரன்றே!

வேந்தன்.—தோழ!

10. மாயையோ கனவதோ மதிமயக் குற்றதோ
மற்றென்புண் ணியபலன் னவளவே கெடுவதோ
போயதென் கைகடந் தினியெய்தா வகையதே
பொங்கவா வெள்ளமோ சிறைகடந் தோடுமே.

விதூழகன்.—அப்படியன்று. கிடைக்கவேண்டியது நினையாமற் கைவிட்டவிடத்தும் கிட்டுவது இன்றியமையாதென்பதற்கு அந்த விரல் மோதிரமே எடுத்துக்காட்டாகும்.

வேந்தன்.—[விரல் மோதிரத்தைப் பார்த்து] இது பெறுதற்கரியதாய்ப் பெற்ற இடத்தினின்று நழுவியது துக்கிக்கத் தக்கதன்றோ.

11. சிவந்தவள் நகங்களின் மனங்களி செயுந்தண்
செவ்விர லிணைந்தநிலை தீர்ந்துநழு வுற்றாய்
உவந்தமணி யாழிபய னலைதை யேயொத்
துன்னல்வினை யும்புன்சிறி தென்றுணர்வ துண்மை.

ஸாநுமதி.—வேறொருவர் கையை அடையப்பெறுமாயின் உண்மையாகவே துக்கிக்கத்தக்கதாகும்.

விதூழகன்.—ஓய்! பெயர் பொறித்த இந்த மோதிரம் எதன்பொருட்டு அவள் கையினுள்ளே இடப்பட்டது?

ஸாநுமதி.—என் ஆவல்தான் இவனைக் கேட்கச் செய்தது.

வேந்தன்.—கேட்க. யான் என் நகரத்திற்கு மீளும் அமயத்து என் காதலி கண்ணீருடனின்று ஆரிய புத்ரரை மறுபடியும் வழிபட அருள்வதற்கு எவ்வளவு நீண்டகால மாகும் என்றாள்.

விதூழகன்.—அப்புறம், அப்புறம்.

வேந்தன்.—பின்னே இம்முத்திரையிட்ட மோதிரத்தை அவள் விரலிலிட்டு நான் இப்படி உரைத்தேன்,

12. ஈதிடையென் பேரெழு தெழுத்தினிலொவ் வொன்று
எண்ணுக தினந்தினங் கடைச்செலும் வரைக்கப்
போதின்விழை வாய்பிறர் புகற்கரி தெனந்தப்
புரம்புக வழைக்கநின் புறம்புகுமெ னளே.

அதுவும் கொடிய நெஞ்சுடைய என் மயக்கத்தால் நடத்தப்படவில்லை.

ஸாநுமதி.—ஒத்துக்கொண்டதைச் செய்யாதபடி தெய்வம் வருத்த காலஅளவு நிச்சயமாய் இனியதேயாம்.

விதூழகன்.—வலைஞரால் துண்டிக்கப்பட்ட செம்மீன் வயிற்றினடுவில் இது எப்படிப்புக்கிருந்தது?

வேந்தன்.—சசீதீர்த்தத்தில் வணங்கும் பொழுது உன் தோழியின் கையினின்று நழுவிக் கங்கையின் வெள்ளத்திற் புக்கது.

விதூழகன்.—பொருத்தந்தான்.

ஸாநுமதி.—அதனாலேதான் நல்லவளாகிய சகுந்தலையிடத்து, தர்ம விரோதத்திற்கு அஞ்சிய இந்தக் கோமுனிவர்க்கு மணம் நிகழ்ந்ததுபற்றி ஐயம் உண்டாயிற்று. இல்லையேல் இத்தகைய பெருங்காதல் எதற்காக ஓர் அடையாளத்தை வேண்டுகின்றது? ஈதெப்படிப் பொருந்தும்?

வேந்தன்.—இந்த மோதிரத்தையே பழிக்கிறேன்.

விதூழகன்.—[தனக்குள்] இவர் பற்றுவது பித்துப்பிடித்தவர் வழியாகும்.

வேந்தன்.—

13. அவள்கவின்றிர ளிளநறுந்தளி ரனவிரற்கர மதனைநீ
எவன்விடுத்தணி தந்துநீள்புன லிடையமிழ்ந்தனை யிதனின்வே
றிவண்பகுத்துணர் வற்றதோகுண வியல்குறிக்கொள வில்லையான்
தவவிரும்பிய விவளையென்னைகொல் தணவுறத்துணி வுற்றதே.

விதூழகன்.—[தனக்குள்] ஐயோ! இனி யான் பசியால் விழுங்கப்பட வேண்டியவன்தான்.

வேந்தன்.—ஒரு காரணமுமில்லாமல் புறந்தள்ளியதை நினைந்து நினைந்து நெஞ்செரிகின்ற இம்மனிதனுக்கு நீ இரங்கி இன்னும் ஒருதரம் எதிர் தோன்றுவாயாக.

சதுரிகை.—[திடீரெனத் திரையை நீக்கிக் கையிற் சித்திரப் பலகையோடு புகுந்து]

பட்டத்துப் பெருந்தேவி இந்த ஓவிய வடிவில் உள்ளனள். [என்று சித்திரப்பலகையைக் காட்டுகின்றாள்]

விதூஷகன்.—ஏ, தோழ! ஒவ்வோரவயவமும் அவ்வவற்றிற்குரிய பாவனையை யுட்கொண்டு இனிமையாயிருத்தலால் பார்த்துக் கொண்டே யிருக்கத்தக்கது. என் பார்வை மேடு பள்ளங்களில் தடுமாறுவது போலுள்ளது.

ஸாநுமதி.—ஆ! இந்தக் கோமுனியினுடைய சாதுரியம் ஆச்சரியப்படத்தக்கதுதான். நான் என் தோழியின் முன்னர் இருப்பதாகவே தெரிகிறேனன்றோ.

வேந்தன்.—

14. எவ்வெது நலத்ததெனை வில்லையவ் வதாந்தாம்
ஏய்ந்தகிழி யிற்செவன மேவரைவர் காண
அவ்வியல்ப தாகவள மாவெழுத லானும்
அம்மவிவள் நற்கவின் வரைந்ததிவ ணற்பம்.

ஸாநுமதி.—கழிந்ததற்கு இரங்கும் பெருந்தன்மைக்கும் குற்றமற்ற நட்பிற்கும் இது பொருத்தமானதே.

விதூஷகன்.—ஓய்! இங்கே மூவர் நன்மகளிர் காணப்படுகின்றனர். எல்லாரும் காண்டற்கு இனியவரே. இவருள் யார் அத்தகை உயர்வுடைய சகுந்தலை?

ஸாநுமதி.—இம்மாதிரி வடிவினைத் துணிந்தறியாமையினால் இவன் கண்பெற்றது வீண் என்பது நிச்சயம்.

வேந்தன்.—இவருள் எவளை உய்த்துணர்கின்றாய்?

விதூஷகன்.—முடிப்பவிழ்ந்த கூந்தலினின்றும் மலர்கள் சிந்தாநிற்க, முகத்தில் வியர்வைத்துளிகள் அரும்பப் புயமிரண்டும் நீளத்தொங்கவைத்து நீர்பெய்து நனைந்த இளந்தளிருடைய மாமரத்தின் பக்கத்துச் சிறிதிளைப்பாறியவள் போல எழுதப் பெற்றுள்ளவள்தான் சகுந்தலை என்றும் மற்றவர் தோழியர் என்றும் ஊகிக்கின்றேன்.

வேந்தன்.—நீ சாமர்த்தியவான். என் காதலுக்கு அடையாளம் இங்குள்ளது.

15. எழுது மெல்லிய ரேகை யின்னிடை
 யென்வி யர்த்தகை விரல்பட
மழுக லாகிய தோர மற்றுமென்
 வழிக ணீர்மிசை விழுதலாற்
றழுவு கோலிழு கும்வ ணங்கரை
 தந்த தாகவு மிங்ஙனே
அழுகி யைந்தக போல நன்குறி
 யறவு யர்ந்தது பொங்கியே.

சதுரிகே! இவள் மகிழ்தற்குரிய வெளியிடம் பாதியே எழுதப்பட்டுள்ளது. எழுதுகோலைக் கொண்டுவா.

சதுரிகை.—ஐயர் மாடவியரே! யான் போய்வரும் வரைக்கும் இந்தச் சித்திரப்பலகையைப் பிடித்துக்கொள்ளும்.

வேந்தன்.—நானே இதைப்பிடித்துக் கொள்கிறேன். [என்று சொன்ன வண்ணஞ் செய்கின்ருன்] [சேடி சென்றனள்]

வேந்தன்.—யானோ என்னின்,

16. விரும்பியெதிர் தந்துபுக நின்றவளை முன்னம்
 விட்டெழுதி வைத்தவிவ ளைப்பெருமை செய்வேன்
வரும்வழி யினிற்பெரு நதிப்புனல் கடந்து
 மானிருெரு கானல்விழை வேனுரிய நண்ப.

விதூழகன்.—[தனக்குள்] இப்பெருந்தகையரசர் நதியைக் கடந்து மெய்யாகவே கானல் நீரை அடைந்தவர்தாம்.

(வெளிப்படை) ஏ, தோழரே! சித்திரிக்கவேண்டியது வேறென்ன!

ஸாநுமதி.—என் தோழிக்கு எந்த எந்த இடம் இனிய தாகுமோ அதை அதை இவர் சித்திரிப்பதற்கு விரும்புவராவர்.

வேந்தன்.—கேட்க.

17. இனமொ டன்னமறை புளின மண்டுநதி
 யினிய மாலினியு மதனயற்
புனித மன்கவுரி வருபெ ருங்கிரியின்
 புடையு ழைத்தொகைகொள் அடியையும்

*வனநெ டுந்தருவி னசைபல் வற்கலைகள்*
*மருவு நன்கிளையி னிழலிடைத்*
*தினவினங் கணிடன் கலையின் கொம்புரிஞும்*
*பிணையு மிங்கெழுதல் செயவுள்வேன்.*

விதூஷகன்.—[*தனக்குள்*] *நான் எண்ணுகிறபடி தாடி நீண்ட தாபதர் கூட்டங்களை இந்தச் சித்திரப்பலகையில் இவர் நிரப்ப வேண்டும்.*

வேந்தன்.—*நண்பா! மற்றும் சகுந்தலைக்கு விருப்பமாகிய அலங்காரங்களை இங்கே யாம் எழுத மறந்தேம்.*

விதூஷகன்.—*அவை எவை போலும்?*

ஸாநுமதி.—*வனவாழ்க்கைக்கும் நல்லிளமைக்கும் எது நெருங்கி யொத்ததோ அது எழுதியாக வேண்டும்.*

வேந்தன்.—

18. *மன்றுணைவ தொங்கலொளிர் கன்னம்வரை வார*
*வாகைமலர் காம்பொடு வனைந்திலள்வண் காதில்*
*மின்மழையின் பின்மதி நிலாவழிவ தென்ன*
*மென்கமல நூலணியல் வேய்கிலள் முலைக்கே.*

விதூஷகன்.—*ஓய்! ஏன் இந்நல்லாள் செவ்வாம்பல் மலரிதழ் போலும் முன்கையால் பயந்துபயந்து முகத்தை மறைத்து நிற்கின்றனள்? (கவனத்துடன் பார்ப்பதாகக் காட்டிக்கொண்டு) ஆ! ஆ! பூவிலுள்ள தேனைக் களவுகொள்ளும் வேசைமகவாகிய இந்த முருட்டுவண்டு இந்நல்லாள் முகத்து முறையின்றி வீழ்கின்றது.*

வேந்தன்.—*அந்த முருட்டுப் பையலைத் தடுத்துவிடு.*

விதூஷகன்.—*நீவிரே அடங்காதவரை யெல்லாம் அடக்குகின்றவர் ஆதலால் இவனைத் தடுத்தற்குத் தலைவராவீர்.*

வேந்தன்.—*பொருத்தந்தான். ஏடா! பூங்கொடிகட்கு இனிய விருந்தே! ஏன் இதில் வீழ்ந்து துயருறுகின்றாய்?*

19. *தாகமுள ளாயுமவள் நீயொழிய இன்றேன்*
*தான்பருகி லாதவளன் றேமல ரமர்ந்து*
*வேகமொடு நின்வரவை வேட்டவ ணிருப்பாள்*
*மென்மது கரிப்பெயர்கொள் நின்சதியிவ் வேளை.*

**ஸாநுமதி.**—இதைத் தூரத்தற்கு இது நியாயமாகும்.

**விதூழகன்.**—இந்தச் சாதி தடுக்கப்பட்டாலும் நேரே செல்லாத கோணலுள்ளது.

**வேந்தன்.**—ஏடா! இம்மாதிரி என் ஆணைப்படி நிற்பா யில்லையாயின் இப்போது கேள்,

20. புகுமென் னினியாள் புணரும் விழவிற்
புதுமாந் தளிர்போல் விழைபிம் பவிதழ்
தொகுமன் பின்மெலப் பருகிற் றதுநீ
தொடின்வைப் பன்மரைக் குளுனைச் சிறையே.

**விதூழகன்.**—இக்கொடுந் தண்டனையாலும் ஏன் பயப்பட வில்லை? [சிரித்துத் தனக்குள்] இவர் உன்மத்தர் ஆவர்; நானும் இவர் உடனுறைதலால் இவ்விதமாய்விட்டேன். (வெளிப்பட) ஓய்! இது சித்திரமன்றோ.

**வேந்தன்.**—என்ன, சித்திரந்தானா?

**ஸாநுமதி.**—எனக்கு மிப்போதுதான் பொருள் புலப்படலா யிற்று. எழுதினவடிவாயில்லாது நேரே யிருப்பதாக அநுபவிக் கின்றார் இவர், வேறென்ன.

**வேந்தன்.**—நண்ப! ஏன் இப்படி(க் கேட்டில்) முற்கூறு கொள்ள ஒழுகுகின்றனை?

21. அடைந்துக ணெதிர்ந்தென மகிழ்ந்தவள் மயங்கொள்
அகந்தரி சனம்பெறு சுகம்மநு பவஞ்செய்
இடந்தனி லெனும்படி இயம்புநி னழிம்பால்
இயைந்தனள் வரைந்தமெய் பினும்விழையும் இல்லாள்.

[என்று கண்ணீரை வடித்தனன்]

**ஸாநுமதி.**—பிரிவினுலாகிய இவ்வொழுக்கம் எங்கு மில்லா தது. முன்பின் முரணுவது.

**வேந்தன்.**—நண்ப! ஆற்றுதற்கு இடனில்லாத இம்மாதிரி யான துக்கத்தை எப்படி அநுபவிப்பேன்?

22. கனவிடத் திவள்புகத் தழுவுமந் நிலையுமோ
நனவுமிக் கடைதலா னழுவலுற் றொழியுமே
மனனிடத் துளவிவள் ளிதுபடத் தெதிரினும்
புனல்தடுப் பதுவிழித் துணைமடுத் தறியவே.

ஸாநுமதி.—புறந்தள்ளியதனால் சகுந்தலைக்கு ஏற்பட்ட துக்கத்திற்கு உம்மால் எல்லாவிதத்தும் நல்ல கழுவாய் செய்யப்பட்டது.

[சதுரிகை புகுந்து]

சதுரிகை.—வெல்க! வெல்க ஏந்தலே! எழுதுகோலும் வண்ணக்கரண்டகமும் எடுத்துக் கொண்டு இந்த இடம்வரப் புறப்பட்டேன்.

வேந்தன்.—அப்புறம் என்ன?

சதுரிகை.—தரளிகையுடனிருந்த தேவி வஸுமதி நானே ஆரியபுத்ரரிடம் சேர்ப்பிக்கின்றேன் என்று நடுவழியில் என் கையினின்று அவற்றை வலிந்து கவரப்புக்கனள்.

விதூழகன்.—தெய்வத்தால் விடுபட்டாய் போலும்.

சதுரிகை.—அவ்வமயத்தில் மரக்கொம்பில் தேவி உத்தரீயம் மாட்டியதைத் தரளிகை விடுவித்துக்கொண்டிருக்க நேர்ந்தது. அதற்குள் யான் என்னைத் தப்புவித்துக் கொண்டு வந்தேன்.

வேந்தன்.—நண்ப! என் வெகுமானத்தாற் செருக்கிய தேவியவள் இதோ வந்துவிட்டாள். நீ இந்தப் பிரதிரூபத்தைக் (சித்திரவடிவை) காப்பாற்று.

விதூழகன்.—என்னை (க் காப்பாற்று) என்று சொல்லுக. (சித்திரப் பலகையை எடுத்துக்கொண்டெழுந்து) நீர் அந்தப்புரக் கலகத்தினின்று எப்போது விடுபடுவீரோ அப்போது மேகந்திரையிட்ட மேனிலையிலுள்ள என்னைக் கூப்பிடும்.

[என்று விரைந்தடிவைத்துச் சென்றான்]

ஸாநுமதி.—பிறிதொன்றன்கண் உள்ளம் வைத்தவராகியும் முதலில் வெகுமானிக்கப்பட்டவளை விரும்புகின்றார். இதனால் இவர் சிதறுண்ட நேயமுள்ளவராவர்.

வாயிற்காரி.—[பின்னர்ப் பத்திரிகை வைத்த கையோடு வாயிலாள் (பிரதீஹாரி) புகுந்து] தேவ! வெல்க.

வேந்தன்.—வேத்திரவதீ! தேவியை இடைவழியில் நீ பார்க்கவில்லையா?

வாயிற்காரி.—மற்றென்ன, பார்த்தேன். மகாராணியார் என் கையிற் பத்திரிகையைக் கண்டதும் திரும்பிவிட்டார்.

வேந்தன்.—காரியந் தெரிந்தவள் ஆதலால் என் காரியத்தைத் தடுப்பது செய்திலள்.

வாயிற்காரி.—தேவரே! கிடைத்த பலவகைப் பொன்களையுங் கணக்கிடுமிகுதியால் ஊர்க்காரியத்தில் இந்த ஒன்றுமட்டும் கவனிக்கப்பட்டது. அஃது இப்போது பத்திரிகையில் (ஓலையில்) ஏறிட்டுள்ளது. அதனைத் தேவர் நேரே கண்டருள வேண்டும் என்று அமைச்சர் விண்ணப்பிக்கின்றார்.

வேந்தன்.—எங்கே பத்திரிகையைக் காட்டு?

[வாயிற்காரி கையிற் கொடுக்கின்றாள்]

வேந்தன்.—(முற்றும் படித்து) எப்படி?

'கடலிற் சென்று வாணிகஞ் செய்து பெரும்பொருள் ஈட்டியவனான தனமித்திரன் என்னும் வணிகன் வங்கமமிழ்தலால் மாய்ந்துபோயினன். அந்நல்லவன் பிள்ளையில்லாதவன் அன்றோ. அவன் ஈட்டிய செல்வத்திரள் அரசரை யடையவேண்டியது.' இஃது அமைச்சன் எழுதியது.

பிள்ளையில்லாமை மிகவுந் துக்கந்தான்! வேத்ரவதீ! பெருஞ்செல்வ முள்ளவனாதலான் அத்தகையோன் பல் பெண்டிராளனாகலாம். அவன் மனைவியருள் யாரேனும் ஒருத்தி கருவுற்றிருக்கிறாளா என்பது விசாரிப்பாயாக.

வாயிற்காரி.—தேவரே! இப்போது அவன் மனைவியருள் ஸாகேதச் செட்டியின் புதல்வி புஞ்சவனம் (ஸீமந்தச் சடங்கு) முடித்தனள் என்பது கேட்கப்படுகின்றது.

வேந்தன்.—தந்தையின் செல்வம் அவன் கருவிற்குரியது நிச்சயம். போய் இப்படி அமைச்சனுக்குச் சொல்லு.

வாயிற்காரி.—எது தேவர் ஆணையிடுவது அதுவே. (என்று நடந்தனள்)

வேந்தன்.—இங்கே வா.

வாயிற்காரி.—இதோ இருக்கிறேன்.

வேந்தன்.—வமிசம் உண்டா இல்லையா என்னும் இதனால் என்ன?

23. அன்பா ருறவா ளருளெவ் வெவ்வரை
அகலும் பிரிவா ணிடர்கூர் குடிகட்
கென்பா வழுமின் றியவவ் வுறவாய்
இயல்வான் துசியந் தனெனப் பறைசொல்.

வாயிற்காரி.—இவ்வாறன்றோ முரசறைய வேண்டும். [நடந்து திரும்பிப் புகுந்து]

நல்ல காலத்திற் பெய்த பெருமழைபோல, தேவரீர் சாசனம் மகிழ்ந்தேற்றுக் கொள்ளப்பட்டது.

வேந்தன்.—[நெடிது சுடுமூச்செறிந்து] ஐயோ! வழி முதல்வன் (மூல புருஷன்) இறந்ததும் பிள்ளையில்லாமற்போய்ப் பற்றுக்கோடில்லாத குடும்பங்களின் பொருள்கள் அந்நியனை யடைகின்றன. என் முடிவிலும் புரு மரபிற்குரிய திருமகட்கும் இதுவே செய்தியாகும்.

வாயிற்காரி.—அமங்களந் தொலைக!

வேந்தன்.—கிட்டிய சிறப்பை அவமதித்த என்னைச் சுடுக.

ஸாநுமதி.—ஐயமின்றி என்றோழியையே மனதிலிருத்தி இவர் தம்மைப் பழித்துக் கொள்கின்றார்.

வேந்தன்.—

24. துன்னிவளை தந்துயர் பயன்றர நினைந்து
சூழ்பருவம் வித்தியவ சுந்தரை நிகர்ப்ப
இன்குல நிலைப்பிட னெனுந்தரும பன்னி
யான்தனு ளமர்ந்தும்விட லெய்தின னெனாலே.

ஸாநுமதி.—உன் சந்ததி இப்பொழுது அளவில்லாமல் ஏற்படும்

சதுரிகை.—[மறைவில் வாயிற்காரியை நோக்கி] ஏடி! பொருளீட்டிய வணிகன் செய்தியால் நம் அரசர் இருமடங்கு அதிகமான துயருள்ளனர். இவருக்கு ஆறுதல் செய்ய முகில் மூடு மேனிலையினின்று ஐயர் மாடவியனை அழைத்து வருவாயாக.

வாயிற்காரி.—நன்று சொன்னாய். [என்று நடந்தனள்]

**வேந்தன்.**—ஐயோ! பிண்டம் பெறும் பிதுர்க்கள் உள்ளத்தில் ஐயம் ஏறியுள்ளது; எப்படியெனின்,

25. மறைசொல்பல் பொருள்களால் மற்றிவன் பின்னர்நம்
உறுகுலத் தினிலெவன் னுதவுந்தர்ப் பணமெனு
நிறைகணீர் கழுவியெஞ் சியபுனல் நிலவுசேய்
பெறுகிலேன் பெயஅருந்துவரையோ பிதிரரே.

(என்று மயக்கமுற்றனன்)

**சதுரிகை.**—[பரபரப்புடன் தாங்கிக் கொண்டு] உலகு தாங்கும் அரசரே! அயாவுயிர்த்துக் கொள்ளுங்கள். (ஆச்வாசனஞ்செய்க)

**ஸாநுமதி.**—ஆ, துக்கம்! ஆ துக்கம்! விளக்கு இருக்கும் போது மறைக்கும் திரையின் குற்றத்தால் இவன் இருளையே காண்பவனுவன். நான் இப்பொழுதே இதினின்று மீள்விக்கப் போகின்றேன். அங்ஙனமன்றேல் சகுந்தலையைத் தேற்றுவிக்குமிடத்து மஹேந்த்ரன் தாயார் வாயால் விரைவிற் றருமபத்தினியைக் கணவன் மகிழ்விக்கும்படி வேள்விப்பாகத்தை விரும்பிய தேவர்களே செய்விப்பார்களென்று சொல்லியதை நான் கேட்டிருக்கிறேன். அதனுல் இந்தக் காலத்தை எதிர்பார்ப்பது பொருத்தமேதான். இந்தச் செய்திகளால் என் இனிய தோழியை ஆற்றுவிக்கின்றேன். (என்று சுழன்று விண்ணிற் போயினள்)

[திரைமறைவில்] கொல்லத்தகாதவன், கொல்லத்தகாதவன்!

**வேந்தன்.**—[உயிர்ப்புற்றுக் காதுகொடுத்துக் கேட்டு] ஏடா! மாடவியன் வருந்துங் குரல் போலுள்ளதே, யாரங்கே உள்ளான்? [வாயிலாள்புக்குப் பரபரப்புடன்]

**வாயிற்காரி.**—தேவரே! அபாயமுற்ற தோழரைக் காப்பாற்றுங்கள்.

**வேந்தன்.**—எவனுல் இம்மாணுக்கன் அவமதிக்கப்பட்டான்?

**வாயிற்காரி.**—காணக்கூடாத ஏதோ ஒரு பேயாற் பற்றப்பட்டு முகில் மூடு மேனிலையின் உச்சிக்கண் ஏற்றுவிக்கப் பட்டுள்ளனர்.

வேந்தன்.—[எழுந்து] அம்மா திரி கூடாது. என் கோயில்களும் பேய்களாற் சூழப்படுகின்றனவா? இல்லாவிடில்,

26. தினந்தின மயங்கியத ஞனனி யிழுக்கிச்
சிதைந்தமன ஞலிது தெரிந்துகொள்கி லேனேல்
இனஞ்செய்குடி மக்கள்செல வெவ்வெவ்வழி யென்ன
எஞ்சுத லிலாமலுணர் தற்குவலி யேனே.

[திரை மறைவில்) ஓ! நண்பா! அவிதா, அவிதா.

வேந்தன்.(—நடைதடுமாறிப் போய்) நண்பா! அஞ்ச வேண்டாம், அஞ்சவேண்டாம்.

[திரைமறைவில்] (அதையே சொல்லி) நான் எப்படி அஞ்சாமல் இருப்பேன். யாரோ ஒருவன் என்னைத் தலைகீழாகப் பிடித்துக் கரும்புபோல் மூன்று துண்டாகச் செய்கின்றனன்.

வேந்தன்.—[கண்ணெடுத்துப் பார்த்து] வில் எங்கே?

யவனி.—(யவனதேயமகள்) [கையில் வில்லுடன் நுழைந்து] அரசரே! கணைவைத்த வில்லானது விரலுறையோடு இதோ உள்ளது.

வேந்தன்.—கணையுடன் வில்லை யெடுத்து [திரைமறைவில்]

27. புதிதுன் களத்துதிரம் பருகும் விருப்பமுளேன்
புலிகொல் பசுக்கியைய அலைநின் னடப்புகுவேன்
கதியில் லவர்க்குவெரு ளகலும் படிச்சிலைகொள்
கரமுள்ள னிப்பொழுது துசியந்த னிறகரனே.

வேந்தன்.—(சினந்து) எப்படி என்னையே குறிப்பது இது? நில்லு பிணந்தின்னி! இப்பொழுதே நீ பிழைத்திருக்க மாட்டாய். [வில்லை நாணேற்றி] வேத்ரவதீ! படிவழியைக் காட்டிச் செல்.

வேத்ரவதி—இதோ, இதோ, தேவரே!

[எல்லாருங் கூடச் செல்கின்றனர்]

வேந்தன்.—[சூழப்பார்த்து] இவ்விடம் பாழாயிருக்கிறதே.

[திரைமறைவில்] அவிதா! அவிதா! நான் உம்மைக் காண்கின்றேன். நீர் என்னைக் காணவில்லை. பூனைபற்றிய எலியைப் போல உயிரில் ஆசையற்றுள்ளேன்.

வேந்தன்.—ஏடா! மறைப்புவித்தையிற் செருக்குவாய் என் அம்பு உன்னைக் கண்டு விடும். இப்போதைக்கு மறைந்திரு.

28. புரத்தல்தகு மந்தண னளித்தடுதல் தக்க
புன்கண்செயு நின்னையடும் வன்மையதென் வாளி
கரப்பதெனி னுங்கலவு நீர்பிறிது தள்ளிக்
கண்டுகொள்வ தன்னமுயர் பாலிதுமெய் யன்றோ.

[என்று அம்பினை நாணிற் றொடுக்கின்றனன்]

[பிறகு மாதலி விதூஷகனை விட்டு அவனும் பின்னேபோத வருகின்றனன்]

மாதலி.—

29. நேரிந் திரனின் குறியிற் கசுரர்
நிறுவும் மவர்பால் வளையாய் சிலைநீ
ஆரன் பினர்மே லறவோர் விழியின்
னருள்பெய் குவர்வெங் கணையெய் கிலரே.

வேந்தன்.—(அம்புகளை விடுக்காமல் நிறுத்தி) ஏ! மஹேந்திர ஸாரதி மாதலீ! நல்வரவாருக.

[விதூஷகன் நுழைந்து] எவனால் நான் வேள்விப் பசு கொல்லப்படுவதுபோல் ஆயினேனோ அவன் இங்ஙனம் நல்வரவால் மகிழ்ந்தேற்கப் பெறுகின்றான்.

மாதலி.—[புன்சிரிப்புடன்] நீடுவாழ்வீர்! எதன் பொருட்டு இந்திரனால் அனுப்பப்பட்டேனோ அதைக் கேளும்.

வேந்தன்.—கவனமுள்ளேன்?

மாதலி.—காலநேமியின் வழியின் வந்த தானவர்கணம் வெல்ல முடியாதன்றோ.

வேந்தன்.—உள்ளதுதான்; நான் நாரதரிடம் முன்னே கேட்டிருக்கிறேன்.

மாதலி.—

30. சதமகன்னினை மிகவுநட்டதின் முனைமுகத்தவண் வெலவொணு
தவரை வென்றட நினைநினைந்துதன் படைமுதன்மையின் வைத்
[தனன்
கதிர்நிறைத்தொளி ரெழுபரிச்சுடர் கடிகிலாஇர விருளினைக்
கலைமதிச்சுடர் கடியநிற்பது கண்கொளத்தெரி வந்ததே.

அத்தகையநீர் தொடுத்த கணையுடன் இப்பொழுதே இந்த இந்திரன் தேரிலேறி வெல்லும் பொருட்டுப் புறப்படுக.

வேந்தன்.—இவ்வித வெகுமானத்தால் நான் அருள் செய்யப் பெற்றவன் ஆகின்றேன். மற்று மாடவியனைப் பிடித்து ஏன் இம்மாதிரி செய்தாய்?

மாதலி.—அதுவுஞ் சொல்கின்றேன். ஏதோ ஒரு காரணத்தால் நீர் மனம் வெதும்பிக் கவல்வதாகக் கண்டேன். பின்னர் உமக்குச் சினம் உண்டாக நான் அவ்விதஞ்செய்தேன். எங்ஙனமெனின்,

31. அடங்கிய நெருப்புவிற கின்னெழு மலைக்கின்
அங்கிட ருறுத்தி னரவும்பட மெடுக்கும்
தடம்புவி யுதித்தவ ரிடும்பையுறு போழ்திற்
றம்பெருமை தோற்றுவர்க ளென்பபெரி தேதான்.

வேந்தன்.—[தனிமையில்] நண்ப! இந்திரனுர் ஆணை கடத்தற்கரியதே. இந்தக் காரியத்தை என் சொல்லாற் சொல்லி இராச்சியத்தில் எல்லாவற்றையும் நன்கு தெரிந்து செய்யும்படி என் அமைச்சர் பிசுநர்க்கு இவ்வாறு தெரிவி.

32. உன்னலித யத்துமதி யேகொடுயி ரோம்பாய்
என்வலிவி னுணுடன் னெழும்பி றிதி னென்றே.

விதூழகன்.—நீவிர் எது சொல்வது அதுவே. (என்று சென்றனன்)

மாதலி.—நீடுவாழ்வீர்! தேரில் ஏறுக.

வேந்தன்.—[ஏறுவதாக அநுகரிக்கின்றான்]

[அனைவருஞ் சென்றனர்]

(ஆறும் அங்கம் முற்றும்.)

## ஏழாம் அங்கம்

[பின்னர் வேந்தனும் மாதலியும் தேரிலேறி ஆகாய மார்க்கமாக வருகின்றனர்]

வேந்தன்.—ஏ, மாதலி! மகவானால் இடப்பட்ட ஆணையை நிறைவேற்றினேன் ஆயினும் செய்த வெகுமானச் சிறப்பால் நான் ஒருதவியும் செய்யாதவனாக என்னைத் தீர்மானிக்கின்றேன்.

மாதலி.—(புன்சிரிப்புடன்) நீடு வாழ்வீர்! இருவருக்கும் மகிழ்ச்சிக் குறைதான்.

1. முன்புரியு நின்னுதவி யைக்குலிசி யன்பால்
முற்றுமெளி தென்றுள நினைப்பையொரு நீயோ
உன்பெரிய செய்கையை மகிழ்ந்தவனு மேதான்
உஞற்றிய சிறப்பொரு பொருட்டென எணுனே.

வேந்தன்.—மாதலி! இப்படியன்று; விடை நல்கியபோது தேவர்கள் எல்லாங்காணத் தம் அணையின் ஒருபாதியில் அவர் என்னை வீற்றிருக்கப்பண்ணி எனக்குச்செய்த அவ்வெகுமானம் என் ஆசைக்கு மேற்பட்டதன்றோ.

2. தனக்கிது கிடைக்கவிழை வூர்ந்தருகி னிற்கும்
சயந்தனை நிமிர்ந்தக னெடும்முறுவல் செய்து
வனப்பினரி சந்தனம லைந்துளமந் தார
மார்பணிய விட்டனன்வி ணோர்முதல்வ னென்கண்.

மாதலி.—வாழ்வீர்! நீவிர் அமரேசனிடமிருந்து ஈதடைதற்கு எவ்விதந் தக்கவரில்லை? பாரும்.

3. இன்புறு வலாரிதிவி நன்கிருவிதத்தால்
ஈண்டவுணர் முட்களைய லாயதிட ரின்றி
முன்புருட கேசரி நகஞ்செய்ததிவ் வேளை
முனைத்தலை வணங்கலில் கணைச்செயல துன்கண்.

வேந்தன்.—இங்கே சதமகனாரேயன்றோ புகழத்தக்கவர்.

4\. ஏயவினை யாளருயர் காரிய முடிப்ப
தின்றலைவர் தந்தவெகு மானபல னென்றோர்
ஆயிர வொளிப்பரிதி பாகனென முன்வைக்
காவிடினெவ் வாறிருள் துரப்பனரு ணன்றோன்.

மாதலி.—ஈது ஒப்பதேயாகும். (சிறிது மெல்லத் தேரைச் செலுத்தி)

நீடு வாழ்வீர்! தேவலோகத்தின் அப்புறத்தில் நிலை பெற்றுள்ள உம்முடைய புகழின் பெரும்பாக்கியத்தை இதோபாரும்.

5\. கற்பக நறுந்தளி ரெனுந்துகிலின் வானிற்
காரிகையர் மெய்யிடை யணிந்துமிகும் வண்ணத்
தற்பினெணி விண்ணமரர் பண்பொருள் கொள்பாவின்
அமைத்தெழுது கிற்பருன் புகழ்ச்சரித மங்கே.

வேந்தன்.—ஏ, மாதலி! நேற்று அசுரரைக் கொல்லும் விருப்பத்து முயன்றிருந்ததனால் வானத்திற்கேறுதற்குரிய விண்வழி என்னால் நன்று காணப்பட்டதில்லை. அதனால் (இப்போது) எந்தவாயுமார்க்கத்தில் நாம் உள்ளோமென்றுசொல்லு?

மாதலி.—

6\. திரிலோக நதிவான நிலையத் தரித்துத்
திகழ்சோதி யெழுபாகு படமீ னியக்கி
அரியீரடிப் பட் டழுக்கற்ற தாமீ
தறைவார்கள் பரிவாக வாயுக்கொண் மார்க்கம்.

வேந்தன்.—ஏ, மாதலி! அதனாலேதான் என் உள்ளம் வெளிக்கரணங்களுடன் தெளிவடைகின்றது. (தேர் உருளையை நோக்கி) மேகவழியில் இறங்கிக்கொண்டிருக்கிறோம் (போலும்).

மாதலி.—எப்படித் தெரியலாயது?

வேந்தன்.—

7\. சாதகம் பறக்குமுரு ளாரிடை வெளிக்கண்
தாவுபரி பூசுநிலை யாதசுடர் மின்னல்
போந்துளி யின்னனையு நேமியிவை நீர்சூல்
புக்கவுத ரப்புயன் மிசைச்செலல் குறிக்கும்.

மாதலி.—நீடு வாழ்வீர்! ஒரு கணப்பொழுதில் உம் ஆட்சிக்குரிய பூமியிலிருப்பீர்.

வேந்தன்.—கீழே நோக்கி மிகவிரைவின் இறங்குதலால் மனித லோகம் ஆச்சரியமான காட்சியுளதாகத் தெரிகின்றது. அது எப்படியெனின்,

8. தரையிறங்கு வதுபொருந்த முகடுயர்ந்து மலையெழும்
தருவினம்பல் கவடுகொண்டு தழைமறைந்த தறவிடும்
உருவொடுங்கி யறல்குறைந்த நதிதொடர்ந்து பெருகல்பார்
ஒருவனிங்க ணிலனிடந்தெ னருகுதந்த தனையதாம்.

மாதலி.—பார்த்து, நன்றுதான் (பெரு மதிப்புடன் பார்த்து) ஆச்சரியம். நிலமடந்தை காம்பீரியமான அழகு வாய்ந்தவள்.

வேந்தன்.—ஏ, மாதலி! கிழக்கிலும் மேற்கிலுமுள்ள கடல்களைத் தழுவியதும், உருக்கிவிட்ட பொன்னின் பெருக்குடையதும், மாலைக் காலத்துச் செவ்வானம்போல்வதும் ஆகி, அதோ தெரிகிற தாள்வரை எந்தத் திசையில் இருப்பது?

மாதலி.—நீடு வாழ்வீர்! இது ஏமகூடம் எனப் பெயர் பெற்ற கிம்புருஷ பர்வதமன்றோ. இது தவம் ஸித்தியெய்தற்குரிய புண்ணியத்தலமாகும்; பாரும்.

9. சுயம்புதர வந்துள மரீசிதிரு மைந்தர்
சுரர்க்கசுர ருக்கொரு பிதாவென வுயர்ந்தார்
இயம்புபிர சாபதி யெனப்பெறுவ ரன்னோர்
இன்மனைவி யோடுதவ நன்கயர்வ திங்கே.

வேந்தன்.—அங்ஙனமாமேல் கடந்து செல்லக் கூடாத மேன்மைகளன்றோ? பகவானை வலம் வந்து (வணங்கி) செல்ல நினைக்கின்றேன்.

மாதலி.—தீர்மானித்தது முதன்மைத்தாகும்.

வேந்தன்.—(இறங்குவதை அநுகரித்து) ஆச்சரியத்துடன்,

10. தேருறுப் புருளைகள் ஞருளவும் மொலிசெயா
செலவினில் விரையவும் துகள்களோ விழிகொளா

சீரினின் னிறுவியுந் தரைதொடா துளதுநின்
தேரிறங் கியுமிறங் கியதெனத் தெளிகிலேன்.

மாதலி.—சதமகனுக்கும் நீடுவாழும் உமக்கும் இவ்வளவே சிறந்த வேற்றுமை.

வேந்தன்.—ஏ, மாதலி! மாரீசருடைய ஆசிரமம் எங்குள்ளது?

மாதலி.—[கையாற் சுட்டிக் காட்டிக்கொண்டே]

11. உடல்புற்றி னொருபாதி மறையத்தன் மார்பின்
உரகத்தி னுபவீத மிடல் பெற்ற உரியிற்
படியுற்ற புதலிற்றொல் கொடிசுற்றி மிகவும்
படருற்ற களனிற்றன் புயனிற் பரப்பும்
நெடிதிட்ட சடையிற்புள் குடில்கட்ட அசையா
நிலைபெற்றோர் தாணுக்கு நிகரா அருக்கன்
சுடருற்ற வடிவத்தில் விழிவைத்து முனிவன்
றொடர்புற்று வதிகிற்கு மதுசொற்ற தலமே.

வேந்தன்.—இடர்களறுக்கும் தவத்தவர்க்கு என் வணக்கம் உளதாகுக.

மாதலி.—[தேரின் வாரினை இழுத்துப்பிடித்து] பெருவேந்தரே! அதிதியினால் வளர்க்கப்பட்ட மந்தாரதருவுள்ள (காசிப) பிரசாபதியின் ஆசிரமத்திற்கு நாம் வந்துவிட்டோம்.

வேந்தன்.—(இது) சாந்தத்தால் விண்ணுலகினும் மிக மேலானது. நான் அமிர்தமடுவில் மூழ்கினவன் போலுள்ளேன்.

மாதலி.—(தேரை நிறுத்தி) நீடு வாழ்வீர்! இறங்கியருள்க.

வேந்தன்.—(இறங்கி) ஏ, மாதலி! நீ இப்போது யாது செய்யப் போகிறாய்?

மாதலி.—தேரினை யான் நிறுத்திவிட்டேன். நாமும் இறங்குவோம். (அப்படியே செய்து) நீடு வாழ்வீர்! (இப்படி வருக) (சென்று) இங்கு வதியும் முனிவரின் தவவன நிலத்தைப் பாரும்.

வேந்தன்.—ஆச்சரியத்துடனேதான் பார்க்கின்றேன்.

12. மன்னுயிர்ச் சீவனம் வளியினா னிகழ்வதாம்
வனமெலாங் கற்பக மெனினுநன் றுசிதமாய்ப்

பொன்மரைத் துகள்பொரும் பொன்வணப் புனலிலே
புகலறத் தொடுகுளிப் பதுசெயப் படுவதால்
இன்மணிக் கனசிலா தலமிசைக் கடவுளை
இனிதெணப் பெறுவதா லரமகட் கெதிரிலே
புன்பொறிப் பகையவிப் பதுசெய்வார் முனிதவம்
புகுவதின் விழையுமிங் கிவர்தவம் புரிவரே.

மாதலி.—பெரியோர்விருப்பம் மேனேக்கிச் செல்வதன்றே? (நடந்து) வெளியில் நோக்கி; ஓ! விருத்த சாகல்லியரே! பகவான் மரீசி புதல்வர் யாது செய்துகொண்டிருக்கிறார்? என்ன சொல்கின்றீர்? பதிவிரதா தர்மத்தைக் குறித்துத் தாக்ஷாயணி கேட்டதனால் முனிவர்பத்தினிகளுடன் உள்ள அம்மனைவிக்கு அதைச் சொல்லிக் கொண்டிருக்கின்றனர் என்று (சொல்கின்றீர்).

வேந்தன்.—[காதுகொடுத்துக் கேட்டு] ஆச்சரியம். இந்தச் செய்தி சமயநோக்கி நாம் காத்திருக்க வேண்டியதைக்குறிப்பது நிச்சயம்.

மாதலி.—(அரசரை நோக்கி) நீடு வாழ்வீர்! உம்மை நான் இந்திரன் தந்தையார்க்குத் தெரிவிப்பதற்குச் சமயத்தை எதிர் பார்க்கிறேன். அதுவரை இந்த அசோக மரத்தடியில் நின்று கொண்டிருக்கலாம்.

வேந்தன்.—நீ எப்படி நினைவையோ அப்படியே. (என்று நிற்கின்றான்)

மாதலி.—நீடுவாழ்வீர்! நான் நிறைவேற்றச் செல்கிறேன். (என்று சென்றான்)

வேந்தன்.—[நிமித்தத்தை அநுகரித்து]

13. மங்கள முருக்கொடு முனேவிழி யெதிர்ந்தும்
மறைந்திட ரெனத்திரிய லாயதிற ஞலே
இங்குள மினிப்பது பெறற்கினி யெனேன்யான்
என்புய மிவண்துடி துடிக்குதி யெனேவீண்.

[திரைமறைவில்] (அடங்காமல்) வேண்டியபடி செய்யாதே. என்ன இவன் (இதற்குள்) தன் இயல்பிலே நடந்து கொண்டிருக்கின்றான்.

வேந்தன்.—[காது கொடுத்துக் கேட்டு] அடங்காமை புரிவதற்கு உரிய நிலம் ஈதில்லை. யாரைக் குறித்தோ இந்த இழிப்புரை நிகழ்வது. (சத்தம் வந்த வழியே உற்று நோக்கி ஆச்சரியத்துடன்) ஆ! ஆ! தவமகளிர் இருவரால் பின் தொடரப்பெற்ற இச்சிறுவன்தன் இளமைக் கேலாத வலியு டையனாகின்றான்; இவன் யாரோ?

14. தாய்முலைகள் வாயிலொரு பாதிபரு குங்காற்
றவிர்த்திடர் தரப்பிடர் சிலிர்த்துமயிர் பொங்குஞ்
சேயிள வரிக்குருளை யைத்தன்விளை யாடல்
சேர்ப்பது நினைத்துவலி தீர்ப்பதுசெய் வானே.

[இதன் பின்னே மேற்குறித்தது செய்துகொண்டு தவமக ளிருடன் சிறுவன் எய்துகின்றான்]

பிள்ளை.—ஏ, சிங்கக்குட்டி! உன் வாயைத் திற, உன் பற்களை எண்ணிப் பார்க்கிறேன்.

முன்னவள்.—ஏ, அடங்காதவனே! நம் குழந்தைகளின் வேறில்லாத இந்தப் பிராணிகளை ஏன் துன்புறுத்துகின்றாய்? ஆச்சரியம், உன் துருதுருக்கைத்தனம் வளர்கின்றதே. பொருத்த மாகத்தான் ருஷி ஜனங்கள் உனக்குச் சருவதமனன் (எல்லா வற்றையும் கொல்பவன்) என்று பெயரிட்டுள்ளனர்.

வேந்தன்.—என்ன காரணமோ இக்குழந்தையிடம் எனக் குண்டாகிய பிள்ளையிடத்துப் போல என் இதயம் நேயம் கொள்கின்றதே: என்னை இவ்விடத்து விருப்பம் உண்டாக்கு வது பிள்ளையில்லாமையேயாகும்.

பின்னவள்.—இதன் குட்டியை நீ விடாதிருந்தால் இத் தாய்ச் சிங்கம் உன்மேலே பாய்ந்துவிடும்.

பிள்ளை.—(புன்சிரிப்புடன்) அம்மா! பலமாகப் பயந்து விட்டேன் நிச்சயம். [என்று உதட்டைத் துருத்திக்காட்டி]

வேந்தன்.—

15. பெருப்பெரிய தேசுகொ ளொருத்தனுடை வித்தாய்ப்
பேணவென் விழிக்கெதிர் பிறங்குமிது பிள்ளை
நெருப்பொரு பொறிச்சிறிதி னுற்றுவிற கங்கண்
நேரின்வள ரும்வண நிலைத்தது நிகர்த்தே.

முன்னவள்.—குழந்தாய்! இந்த இளஞ் சிங்கராசனை விடு: உனக்கு வேறொரு விளையாட்டுப் பண்டம் தருகிறேன்.

பிள்ளை.—எங்கே; அதைக் கொடு. (என்று கையை நீட்டு கின்றனன்)

வேந்தன்.—எப்படி இவன் சக்கரவர்த்தி யிலக்கணம் தரித் திருக்கிறான்? அப்படியாயினும் இவனுக்கு

16. நவம்வரும் விடியனன் பரிதிகண் டலர்தரும்
நறியசெவ் விதழ்திறந் திடைகொளா முளரிபோல்
இவனின்வஞ் சனைசெயும் பொருள்விழைந் தினிதுநீள்
இதுகரம் வெளியிலா விரல்செறிந் திலகுமால்.

பின்னவள்.—நல்ல விரதமுள்ளோய்! (ஸுவ்ரதே) இவன் வாயளவில் ஒப்பவனல்லன், நீ போ. என் குடிலில் மார்க்கண் டேய முனிவர் குமாரனுடைய வண்ணத்தினாற் சித்திரிக்கப் பட்ட மண் மயில் உள்ளது. அதை இவனுக்குக் கொண்டுவா.

முன்னவள்.—அப்படியே. (என்று சென்றாள்)

பிள்ளை.—அதுவரையில் நான் இதனுடனேயே விளையாடு கிறேன். [என்று தவமகளைப் பார்த்து நகைக்கின்றான்]

வேந்தன்.—எளிதில் ஆற்றக்கூடாத இவன்கண் எனக்கு விருப்பம் ஊர்வது.

17. ஒருகா ரணமும் மிலையாய் முறுவல்
ஒளிரச் சிறிதே மிளிர்பல் முகிழின்
தெரியா வொலியக் கரமோ டினிதே
செயுமின் மழலைச் சொலினன் மடிமேல்
வருமா வலின்மைந் தரையேந் தியவர்
வளமே னியினிற் படிதூ ளியினாற்
பொருமா சுடையா ரெவரோ அவரே
புணியம் புரிதந் துளசெல் வரரோ.

தவமகள்.—ஆகுக, என்னை இவன் ஒரு பொருளாக எண் ணிலன். (பக்கத்திற் பார்த்து) ருஷி புத்திரருள் யாருளர் அங்கே? (வேந்தரைப் பார்த்து) இனிய திருமுகத்தீர்! (பத்ர முக) இங்கே வாரும். விடுவிக்க முடியாதபடி இறுகப் பிடித்து

இவன் குழந்தை விளையாட்டினாற் கொல்லப்படுகின்ற இந்த இளஞ்சிங்கராசனை விடுவித்தருளும்.

வேந்தன்.—(புன்சிரிப்புடன்) அப்பா! மகருஷியின் குழந்தாய்!

18. இளையகா ரரவுவாழ் நறியசந் தனமிகர்த்
திவிதமா சிரமவாழ் வுறுசெயற் கெதிர்செய்நீ
விளையவந் ததுமுதற் கெடலெனோ பல்லுயிர்
விரவிவாழ் தருசுகம் வளரநீள் சமனமே.

தவமகள்.—இனிய திருமுகத்தீர்! இவன் ருஷி குமாரன் அல்லன்.

வேந்தன்.—இவன் துருதுருக்கைத்தனம் இவன் வடிவத்திற்குப் பொருத்தமென்றே காட்டுவது. இடத்தின் நம்பிக்கையாலே தான் நாம் இப்படி எண்ண நேர்ந்தது. [அவள் வேண்டிக் கொண்டபடி செய்யும்பொழுது (குட்டியை விடுவிக்கும் பொழுது) குழந்தையை நன்று தொடப்பெற்றுத் தனக்குள்.]

19. யாரோ ஒருவன் மரபின் முளையா
மிவன்மெய் தொடவென் னுடலின் பமிதேல்
ஆர்புண் ணியன்மெய் யிவன்வந் தனனோ
அவனெஞ் சிவனின் பெவிதஞ் செயுமோ.

தவமகளிர்.—இருவரையும் உற்றுநோக்கி ஆச்சரியம், ஆச்சரியம்!

வேந்தன்—ஆர்யே! எதுபோலும்?

தவமகள்.—இந்தக் குழந்தைக்கும் உமக்குமுள்ள வடிவொப்புமை என்னை மிகவும் மகிழ்விக்கின்றது. உம்மோடு பழகாதவனாகியும் உமக்கிணங்கி யடங்கியவனென்று (வியக்கின்றேன்).

வேந்தன்.—[குழந்தையைத் தழுவியணைத்து] இவன் முனி குமாரன் அல்லனேல் பின் இவன் குலம் யாது?

தவமகள்.—புருகுலமே!

வேந்தன்.—(தனக்குள்) எப்படி எனக்கு ஒரே குலத்தவனாவான்? அதனாலேதான் இவள் இவனை என்னோடொத்த

வனாக நினைக்கின்றாள்போலும். பௌரவர்களுக்கு முடிந்த நிலையாகிய இவ்விரதம் வானப்ரஸ்தமாகவுள்ளது.

20. மேதினி புரப்பதனை வேண்டிமுனை மேவர்
வெண்சுதை யிழைத்தபெரு மாளிகையின் வாழ்வர்
ஓதுபதி நோன்பினி லொரேநியம முள்ளா
ளோடுறையும் வீடிது மரத்தடியின் ஞளில்.

[வெளிப்படை] மனிதர் தம் வளமையினால் இது அடையத்தக்கதில்லை.

தவமகள்.—இவ்வினிய முகத்தினர் எவ்விதஞ் சொல்கின்றனரோ அவ்விதமேதான். விண்ணர மகளின் சம்பந்தத்தால் இவன் தாய் இந்தத் தேவகுருவின் தவவனத்தில் இவனைப் பெற்றனள்.

வேந்தன்.—[மறைவில்] ஆச்சரியம்: என் ஆசை உண்டாதற்கு ஈது இரண்டாவது (நம்பிக்கை).

[வெளிப்படை] பின் அத்தகையாள் என்ன பெயருள்ள ராஜருஷியின் பத்தினியாவள்?

தவமகள்.—தர்மபத்தினியைப் புறந்தள்ளிய அவன் பெயரைச் சொல்ல எவர் நினைப்பார்?

வேந்தன்.—[தனக்குள்] இக்கதை என்னையே குறிப்பிடுகின்றது நிச்சயம். அஃதெப்படியாயினும் இக்குழந்தையின் தாயின் பெயரைக் கேட்டறிவேன். இல்லையேற் பிறர் மனையாளைப்பற்றிப் பேசுவது உயர்ந்தோர் வழக்கமாகாது.

[மண்மயிலைக் கையிலெடுத்துக்கொண்டு புகுந்து]

தவமகள்.—ஸர்வதமன! சகுந்த லாவண்யத்தைப் பார்.

பிள்ளை.—ஆவலுடன் கண்ணெடுத்து நோக்கி எங்கே என் அம்மா?

இருதவ மகளிரும்.—பெயரொப்புமையால் தாயிடன் அன்புள்ள இவன் ஏமாற்றப்பட்டான்.

பின்னவள்.—குழந்தாய்! இந்தச் சகுந்தத்தின் லாவண்யத்தை (மண்மயிலின் அழகைப்)பார் என்று அன்றோ சொல்லக் கேட்டனை.

வேந்தன்.—[தனக்குள்] என்ன இவன் தாயார்க்குச் சகுந்தலா என்பது பெயரா? பெயர்களுள் ஒப்புமையுடையன

எத்தனையோ உள்ளனவன்றே. மற்றுப் பெயர்மாத்திரம் பேசப்பட்டு (ஈது) எனக்குக் கானல்நீர்போல மிகவும் துன்பஞ் செய்வதாகுமோ?

பிள்ளை.—அம்மா! இந்த அழகிய மயில் எனக்கு விருப்பஞ் செய்வது [என்று விளையாட்டுப்பண்டத்தை எடுக்கின்றான்].

முன்னவள்.—[கலக்கத்துடன் பார்த்து] ஐயோ! இவனுடைய காப்புநாண் கைம்மணிக்கட்டிற் காணப்படவில்லையே.

வேந்தன்.—அதிகப் பரபரப்பு வேண்டாம். இவன் சிங்கக் குட்டியை அடித்து விளையாடிக்கொண்டிருக்கையில் இது நழுவி வீழ்ந்தது. [என்று அதை எடுக்க விரும்புகின்றான்.]

இருதவமகளிரும்.—இதைத் தொடவே வேண்டாம். [அதை எடுத்தவுடன்] இவரால் எப்படி எடுக்கப்பட்டதோ [என்று வியப்புடன் இருவரும் மார்பிற் கையை வைத்து ஒருவரொருவரைப் பார்த்துக்கொள்கின்றனர்].

வேந்தன்.—எம்மைத் தடுத்தது எதன்பொருட்டு?

முன்னவள்.—மகாராஜரே கேளும்: ஈது அபராஜிதை (பிறர் வெல்லத்தகாதது) என்னும் பெயருள்ள மூலிகை. இவன் ஜாதகர்ம (பிறவிச்சடங்கு) காலத்திற் பகவான் மரீசி மகனார் தந்தது. இதனைத் தாயும், தந்தையும், இவனுந் தவிர மற்றெவரும் தரையில் வீழ்ந்தால் எடுக்கமாட்டார் என்பது நிச்சயம்.

வேந்தன்.—பின்னர் எடுத்தால்?

முன்னவள்.—எடுத்தவரை இது பாம்பாகிக் கடித்து விடும்.

வேந்தன்.—நீங்கள் எப்போதாவது ஈது உருமாறியதை நேரிற் கண்டதுண்டா?

இருதவமகளிரும்.—அநேகந்தரம்.

வேந்தன்.—[மகிழ்ச்சியுடன் தனக்குள்] என் உள்ளத்து ஆசை நிறைவேறிய பின்னும் ஏன் நான் மகிழாமலிருப்பேன். [என்று குழந்தையைக் கட்டி அணைக்கின்றான்.]

பின்னவள்.—ஸுவ்ரதே! (நல்ல விரதமுள்ளவளே!) வா, இந்தச் செய்தியை நோன்பு நோற்றிருக்கும் சகுந்தலைக்குத் தெரிவிப்போம். [என்று நடந்தனர்.]

பிள்ளை.—என்னை விடும். இப்போது என் அம்மா கிட்டப் போகிறேன்.

வேந்தன்.—புதல்வ! என்னோடு கூடவே அம்மாவை மகிழ் விக்கப்போகிறாய்.

பிள்ளை.—என் தந்தை துஷ்யந்தர்; நீரில்லையே.

வேந்தன்.—[புன்சிரிப்புடன்] இந்த எதிர் மறுப்பே மிகவும் நம்பும்படி செய்வது.

[இதன் பின்னர் ஒரே சுருள்ளான கூந்தல் தரித்த சகுந்தலை புகுகின்றாள்.]

சகுந்தலை.—ஸர்வதமனனுடைய காப்புப்பூடு மாறுபட வேண்டியபோதும் மாறாது இயற்கையினிருந்த செய்தி கேட்டுப் பாக்கியம் உண்டாவதில் எனக்கு ஆசையெழவில்லை. மற்று எப்படி ஸாநுமதியாற் சொல்லப்பட்டதோ அப்படி இது நிகழ லாம்.

வேந்தன்.—[சகுந்தலையைப் பார்த்து] இந்தச் சகுந்தலை அத்தகையவள் தானா?

எந்த இவள்

21. மாசினிரு தூசுவனை தந்துநிய மத்தால்
வாண்முக னிளைத்தொருசு ருள்செய்குழல் வார்ந்த
ஏசில்குண சீலியரு ளேனெனினு நீள
என்பிரிவு நோன்பினை வகிப்பளி விதந்தான்.

சகுந்தலை.—[தள்ளியதை நினைந்து பின்னே இரங்கியதனால் நிறன்மாறிய வேந்தரைப் பார்த்து] உண்மையில் இவர் ஆரிய புத்திரர்போ லில்லையே. அப்படியில்லையாயின் அலங்கரித்த மங்களக்காப்பைத் தரித்துள்ள குழந்தையை மெய்யில் அணைத்துக் கெடுக்கின்றவர் இவர் யாரோ?

பிள்ளை.—[தாயை அணுகி] அம்மா! இதோ யாரோ ஒரு புருஷர் என்னைத் தம் குழந்தையென்று தழுவி யணைக்கின்றார்.

வேந்தன்.—என் அன்பே! இப்பொழுது நீ என் நிலையை அறிந்தனை யென்று நான் காண்பதனால் உன்கண் யானிழைத்த கொடுமையும் முடிவில் நன்மையாகவே மாறியதாகும்.

சகுந்தலை.—[தனக்குள்] மனமே! ஆறுதலடை. என்கண் பகைமையை விட்ட தெய்வத்தினுல் அருளப் பெற்றுள்ளேன். இவர் ஆரியபுத்திரர் என்பது உண்மையேதான்.

வேந்தன்.—

22. இன்மு கத்திஞ யிருண்ம யக்கமிங்
கிரிய லாகியென் னினைவு வந்ததும்
என்மு கத்தின்முன் னினிதி னெய்தினுய்
இதுவென் பாக்கியப் பயனி ஞயதால்
நன்மு யற்கறைத் தனியு வாமதி
நனியி ராகுவான் மறைதல் விட்டபின்
மன்னு ரோகிணிப் பன்னி யன்னவன்
மாடு வேகமாய்க் கூடி ஞளரோ.

சகுந்தலை.—வெல்க, வெல்க ஆரியபுத்திரர்! [என்று பாதி சொல்லிக் கண்டத்தை அடைக்குங் கண்ணீரோடு ஓய்கின் றனள்.]

வேந்தன்.—சுந்தரீ!

23. வெல்கென வழங்குசொல் விழிப்பெருகு நீரால்
வெந்தடையு றும்மெனினும் வென்றியுள ஞனேன்
மெல்லிலெம லாதுசெவ ணந்நறுவு நின்வெண்
மெல்லிதழ்மு கத்தைவிழி யிற்பருக லானே.

பிள்ளை.—அம்மா இவர் யார்?

சகுந்தலை.—உன் பாக்கியங்களையே கேள்.

வேந்தன்.—[சகுந்தலையின் அடிகளில் நன்றாய் வீழ்ந்து]

24. மெல்லெழின்மெய் நங்கைநினை வேண்டலன்விடுத்த
வெம்மைநி னுளத்திடை மறப்பைநினை யாதுன்
னல்வரவு பெற்றபொழு தென்மன மயக்கம்
நானறிகி லேனெதுகொ டோவலிய தாயிற்
றெல்லையில் தமோகுண முளார்நலம் வரும்போ
திவ்வித மியற்றுவர்கண் ணில்குருடன் சென்னி
புல்லவிடு பூவித ழலங்கலு மராவாய்ப்
புக்குவளர் சங்கையினின் மிக்குதறு மன்றே.

சகுந்தலை.—[கண்ணீருடன்] ஆரிய புத்திரரே! எழுந்திருங்கள். முற்பிறப்பில் நல்லறங்களைத் தடை செய்ததனாலாகிய என் தீவினையானது அந்தக் காலத்து வளர்ந்து எதிரே நின்றது. அதனாலேதான் ஆரியபுத்திரர் இயல்பாகவே இரக்கமுள்ளவராக இருந்தும் என்னிடம் அவ்விதமாக நடந்தனர்.

[வேந்தன் எழுந்திருக்கின்றனன்.]

சகுந்தலை.—துன்பமே அடைதற்குரிய இவளை எவ்வாறு ஆரியபுத்திரர் நினைவு கொண்டனரோ.

வேந்தன்.—மிகவருத்துந் துன்பமென்னுங் கணையைப் பிடுங்கியவனாகியபின்னே சொல்கின்றேன்.

25. நின்னிதழின் மீதுபெரு கச்சிறைகொள் கண்ணீர்
நீக்கிலன் மருண்டுநினை நீத்தன னலாய்முன்
உன்வளையு நல்லிமை புனற்றுளிகொள் போதே
உற்றது துடைத்தலி னொழிப்பலநு தாபம்.

[சொல்லியபடியே செய்கின்றனன்.]

சகுந்தலை.—[பெயர் பொறித்த மோதிரத்தைப் பார்த்து] ஆரியபுத்திரரே! அந்த விரலணி இதோ உள்ளதன்றோ.

வேந்தன்.—வேறி யாது? இந்த மோதிரங் கிடைத்ததனாலன்றோ நினைவுவரப்பெற்றேன்.

சகுந்தலை.—ஆரிய புத்திரருக்கு நம்பிக்கை உண்டாக்குஞ் சமயத்தில் எனக்குக் கிடைக்காமல் இதனாலேதான் விபரீதம் செய்யப்பட்டது.

வேந்தன்.—ஆதலால் ருது காலத்தொடு கலந்ததற்கு அடையாளமாகக் கொடியானது அதற்குரிய மலரை ஏந்துக. [என்று மோதிரத்தை நீட்டுகின்றனன்.]

சகுந்தலை.—இதனிடம் எனக்கு நம்பிக்கையே யில்லை. ஆரியபுத்திரரே இதைப்பூண்டிருக்க. [மாதலி புகுகின்றான்.]

மாதலி.—நீடு வாழ்வீர்! தெய்வவசத்தால் நீர் உம்முடைய பத்தினியோடு கூடிப் புதல்வன் திருமுகத்தைத் தரிசித்தலால் வளர்ந்து விளங்குகின்றீர்.

வேந்தன்.—என் உள்ளத்துக்காதல் இனிய பெரும்பல ேைேடு கிடைக்கலாயிற்று. இஃது என் நண்பனுற்கிடைத்ததே. ஏ மாதலி! இச்செய்தி ஆகண்டலர்க்குத் தெரியாதிருக்குமா?

மாதலி.—(புன்சிரிப்புடன்) ஈச்வரர் பார்வைக்கு எட்டாததுயாது? நீடுவாழ்வீர்! வாரும். பகவான் மரீசிபுத்ரர் உமக்குத் தரிசனம் தரவுள்ளனர்.

வேந்தன்.—சகுந்தலே! புதல்வனைக் கையிற் பிடித்துக் கொள். உன்னை முன்னிட்டுப் பகவானைத் தரிசிக்க விரும்புகின்றேன்.

சகுந்தலை.—ஆரியபுத்திரரோடுகூடக் குரவரின் பக்கம் செல்ல நாணுகின்றேன்.

வேந்தன்.—நாணவேண்டாம். மேலானது செய்யும்போது இவ்வாறு ஆசரிக்கத்தக்கதாகும். வா, வா.

[எல்லாருஞ் செல்கின்றனர்]

[இதன் பின்னர் மரீசிபுத்ரர் அதிதியுடன் அணையில் இருந்த வண்ணம் தோன்றுகின்றனர்.]

மாரீசர்.—[வேந்தனைப் பார்த்ததும்] ஓ! தாக்ஷாயணி!

26. உன்சேய்மக வான்வெம்படை முனையிற்றலை யெய்தி
ஒருவில்லினெலாமுற்றியொள் நுதிநாறுகொள் குலிசம்
இன்கைக்கணி யென்னும்படி யிகல்வெல்துசி யந்தன்
என்றேபெயர் கொள்வோனிவ னன்றேபுவி யாள்வோன்.

அதிதி—(தாக்ஷாயணி) இவன் வடிவத்தின் தோற்றமே வெகுமதிக்கத் தக்கது.

மாதலி.—நீடு வாழ்வீர்! தேவர்கட்குப் பிதிரராகிய இவ்விருவரும் தம்மைந்தன்பால் வைக்க வேண்டிய அன்பின் கண்ணோட்டத்தை நும்பால் வைப்பது குறித்துக் காட்டி உம்மைப் பார்க்கின்றனர்.

வேந்தன்.—ஏ மாதலி! இவ்விருவரும்

27. எதைய்பி ரறுசோ தியினே துவெனு
இசைசெய் குவரோ முனிவோர் பலரும்

எதுவேள் வியின்மூற் படுகூ றுளனுய்
இயன்மூ வுலகாள் பவனீ னுவதாம்
எதனிற் றனின்வந் தவனுக் குயர்வா
கியவோர் புருடன் பிறவிக் கிடனும்
அதுதக் கன்மரீ சியினு மிதுனம்
அயனுக் கிடையோ ரிடன்விட் டதுவே.

மாதலி.—வேறென்ன? (அதே)

வேந்தன்.—[அருகிற்சென்று] இந்திரன் ஏவலாளியான துசியந்தன் தேவரீர் இருவரையும் வணங்குகின்றனன்.

மாரீசர்.—குழந்தாய்! எஞ்ஞான்றும் வாழ்க! உலகத்தைக் காப்பாற்றுவாயாக.

அதிதி.—குழந்தாய்! எதிரற்ற ரதவீரனுகுக.

சகுந்தலை.—பிள்ளையொடுகூடி யான் உங்கள் திருவடியை வணங்குகின்றேன்.

மாரீசர்.—

28. உன்கணவ னிந்திரனை யொத்தொளிர்வ னுன்சேய்
ஊனமில் சயந்தனுப மானமென நிற்பன்
அந்நிலை நினக்குரைசெய் யாசிதக வில்லை
அப்புலொ மிசைக்குநிக ராகுகநின் வாழ்வே.

அதிதி.—குழந்தாய்! உன்கணவனுக்கு இனியளா யொழுகுவாயாகுக. உன் புதல்வன் நீண்ட ஆயுளுடன் இருமாமரபும் மகிழ்செய்வானுகுக. வீற்றிருங்கள். [எல்லாரும் பிரசாபதியைச் சுற்றி வீற்றிருக்கின்றனர்].

(மாரீசர் ஒவ்வொருவரையும் குறித்துக் காட்டிக் கொண்டே)

29. பதிவிரதை யாகிய சகுந்தலையு மிங்கட்
பல்வகையி னுந்தலை சிறந்துவளர் சேயும்
எதிர்வரிய நீயுமிவ ணென்றுதல் பெரும்பே
றீதுயர் சிரத்தைநிதி தெய்வமியை மூன்றும்.

வேந்தன்.—பகவானே! அபிப்பிராயம் முன்னரே நிறைவேறியது அப்புறந்தான் தரிசனம். ஆகையால் தேவரீர் அநுக்கிரகம் அபூர்வசக்தியுள்ளது நிச்சயம்; எங்ஙனமெனின்,

30. முன்மலர் மலர்ந்துபினர் நன்கனி பழுக்கும்
முன்புமுகில் சூழுமதன் பின்புவிழு நீர்தான்
இன்னமுறை காரணமுங் காரியமு முண்டா
மேனுநி னருட்குமுன ரெய்தினனல் வாழ்வே.

மாதலி.—இப்படித்தான் படைப்பிற்குரியவர் அநுக்கிரகம் இருக்கும்.

வேந்தன்.—பகவானே! நீவிர் ஏவியது செய்யும் இவளை நான் காந்தருவ விதி முறையில் மணந்து (அகன்ற) பின்னர் ஒருகாலத்து இவளுடைய கிளைஞர் இவளை அழைத்து வந்த அமயம் நினைவுதடுமாறிப் புறந்தள்ளியதால் தேவரீரோடு ஒரே குலத்தவராகிய பெருந்தகையார் கண்வருக்குப் பிழை செய்தவனாயினேன். பின்பு மோதிரத்தைப் பார்த்ததனால் அவர் பெண்ணை யான் மணந்ததை அறிந்து கொண்டேன். அது எனக்கு ஒரு புதுமையாய் விளங்குவது.

31. எப்படி விழிக்கெதி ருருக்களி றலாதென்
றெண்ணியது போயபின ரையமுளன் காலின்
வைப்புறு சுவட்டையறி வந்துதெளி வந்தான்
மற்றது படிக்கெனிடை யுற்றது விகாரம்.

மாரீசர்.—குழந்தாய்! இது நீ தானேசெய்த பிழை என்றெண்ண வேண்டாம்; மயக்கமும் உனக்குப் பொருந்தியதாகாது. கேள்.

வேந்தன்.—கவனமாயுள்ளேன்.

மாரீசர்.—அரமகள் பொய்கைநீரில் இறங்கியதும் தள்ளுண்டதனால் வருந்தும் சகுந்தலையை எடுத்து மேனகையானவள் தாக்ஷாயணியிடம் வந்தனள். அப்பொழுதே உன்னுடன் அறத்திலொத் தொழுகுதற்குரிய இந்நல்லாள் துர்வாச முனிவர் சாபத்தால் உன்னால் விலக்கப்பட்டாள் என்றும் வேறு விதமாக அன்றென்றும் தியானத்தில் அறிந்தேன். அத்தகைய இந்தச்சாபம் மோதிரங் கண்டவுடன் ஒழிய வேண்டிய முறைமை யுள்ளது.

வேந்தன்.—[ஆறுதலுடன் மூச்சுவிட்டு] நான் இப்பழிமொழியினின்று (இப்போதுதான்) விடுபட்டவனானேன்.

சகுந்தலை.—[தனக்குள்] காரணமில்லாமல் என்னை ஆரிய புத்ரர் தள்ளிவிடவில்லை என்பது என் பேறுதான். நான் சபிக்கப்பட்டது எனக்குத் தெரியாது. அல்லாமலும் பிரிவால் உள்ளம் பாழ்பட்ட என்றால் அச்சாபம் அறியப்படவே யில்லை. இதனாற்றான் என் தோழிமார் மோதிரத்தைக் கணவருக்குக் காட்டும்படி என்னிடம் மொழிந்தார் போலும்.

மாரீசர்.—குழந்தாய்! நீ ஒழுகிய முறை பயனெய்தியது. உன்னுடன் அறத்தினொழுகற்குரிய நாயகனை நீ வெகுளாதே. பார்.

32. நினைவுதொலை சாபத் துணையுரிமை கொண்டோன்
நிறைகொடிய னுகப் புறன்விடுதல் பெற்றாய்
மனமிரு ளகன்ற பினரவன் றனக்கே
மனையிறைவி யென்று நினைவறிய வந்தாய்
தனையெதிர்பெய் யாடி துகள்படிவ தாகிச்
சவிகெடுவ தாயின் நிழலுருவு செய்யா
தினையதனி யாடி தெளியவுயர் தூய்தா
மெனினுள வெலாமும் மெளிதினிழல் செய்யும்.

வேந்தன்.—தேவரீர் சொல்கின்றபடியே.

மாரீசர்.—சகுந்தலையின்கண் உனக்குண்டாகிய இக் குமாரன் விதிப்படி எங்களால் சாதகர்மம் (பிறவிச்சடங்கு) செய்யப்பெற்றனன். இவன் நின்னால் மகிழ்ந்தேற்றுக் கொள்ளப் பெற்றானா?

வேந்தன்.—பகவானே! இவனிடத்திலன்றோ என் குலம் நிலைப்பது [என்று கையாற் குழந்தையை அணைக்கின்றான்].

மாரீசர்.—அப்படி நினைந்த இவனையே நீ சக்கரவர்த்தியாக எண்ணுக.

33. இகலு மிரதமின் றவலு மிசையுமின்
றினிது விரைதலி னசைவி லிரதமொ
டகலு மலைகடல் பிறகு படநடந்
தவனி யெழுமையும் வெலுவ னிவனிவண்
தகவில் புலிமுத லுயிரை வலிகொடு
தமன மடைதல்செய் சருவ தமனனென்

*றுகவை யொடுசொல்வர் புவன பரணநல்*
*லுயர்வி னிவன்பெயர் பரத னெனலினி.*

வேந்தன்.—*பகவானால் எல்லாச்சடங்கும் நிறைவேறப் பெற்ற இவனிடம் நாங்கள் எல்லா நன்மையும் எதிர்பார்க்கின்றோம்.*

அதிதி.—*பகவானே! தம்புதல்வியின் எண்ணம் நிறைவேறிய செய்தியை ஒரு பணியாளனை அனுப்பிக் கண்வருக்குத் தெரியச் செய்க. தன்மகள்பாலன்புள்ள மேனகை இங்கே என்பணி செய்துள்ளனள்.*

சகுந்தலை.—*[தனக்குள்] என் மனவிருப்பத்தையே பகவதி சொல்லியருளினாள்.*

மாரீசர்.—*அத்தகையார்க்குத் தவமகிமையால் இவையெல்லாங் கண்கூடாகத் தெரியும்.*

வேந்தன்.—*அதனாலேயே முனிவர் என்னை வெகுளாதருளினர்.*

மாரீசர்.—*அங்ஙனமாயினும் இந்த விரும்பத்தக்க இனிய சேர்க்கை தெரிவிக்க வேண்டியதேயாம். யாரங்கே?*

*[சீடன் வந்து]*

சீடன்.—*பகவானே! இவன் உள்ளனன்.*

மாரீசர்.—*காலவ! இப்பொழுதே விண்வழிப்போய்த் துசியந்தமகாராசன் சாபந் தீர்தலால் நினைவுவரப் பெற்றுப் புதல்வனோடு கூடச் சகுந்தலையை ஏற்றுக்கொண்டானென்று அத்தகைய கண்வர்க்கு என் சொல்லால் விருப்பத்தைத் தெரிவிப்பாயாக.*

சீடன்.—*பகவான் ஆணையெதுவோ (அதுவே) [என்று சென்றனன்].*

மாரீசர்.—*குழந்தாய்! நீ உன் மனைவியோடும் மைந்தனோடும் உன் தோழனான இந்திரன் தேரிலேயே ஏறி உன் ராஜதானிக்குப் புறப்படுக.*

வேந்தன்.—*ஆணை யெதுவோ அதுவே.*

மாரீசர்.—*[அரசனை நோக்கி]*

34. உன்வயினு முன்குடிக ளின்வயினும் வானம்
ஓம்புபவன் பெய்கமழை மேம்பட வெலாமும்
நன்பெரிய வேள்விக ணடாவியொரு நீயும்
நாடமர ருக்குவழி பாடுசெய்வை யாக
இன்னபடி ஈருலக மும்புரவு பூண்டே
எங்குமிசை வீறவொரு வர்க்கொருவர் செய்யும்
மன்னுதவி யால்யுகச தங்கள்தமுள் மாறு
வாழ்வின்முத லூழியென வாழ்கவினி தாயே.

**வேந்தன்.**—பகவானே! இயன்றவரை நன்மையிலே முயல் கின்றேன்.

**மாரீசர்.**—குழந்தாய்! உனக்கு இன்னும் என்ன விருப்பஞ் செய்கிற்பேன்.

**வேந்தன்.**—இதன் மேலும் ஒரு விருப்பமுண்டோ. இங்குத் தேவரீர் அருளவிரும்பின் அது பரதவாக்கியம் நிறை வேறுவதாக.

**பரதவாக்கியம்.**

ஒக்கவுயிர் வாழ்கென வுஞற்றுகம ளுள்வர்
ஒண்மறையின் வீறுகலை வாணியுயர் வாக
செக்கரொடு நீலொளிசெய் சத்திகொள் சுயம்பு
சென்மமினு மில்லபடி செய்தருள்க எற்கும்.

[என்று எல்லாருஞ் சென்றனர்]

(ஏழாம் அங்கம் முற்றும்.)

அபிஜ்ஞான சாகுந்தலம் முற்றும்.

## நூற்பயன்.

வேகுந்தல மேனுங்குளிர் விரவுந்தல மென்பேன்
மேவுந்துய ரென்னின்மனம் விழையும்மகிழ் வென்பேன்
பாகுஞ்சுர ரமிழ்தும்மிது போனன்சுவை செய்யா
பாரும்பெரு விண்ணும்மெதிர் காணும்படி பண்ணும்
போகுந்தல மெல்லாமிதன் பொருள்கூறுத லினிதாம்
பொத்தில்லுயர் தனிநாகரி கத்திற்கிது மோலி
சாகுந்தல மேனும்முயிர் சாருந்தல மாகும்
சாகுந்தல மோதீரிவை தாமோதுவிர் நீரே.

# செய்யுள் முதற்குறிப்பகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அடங்கிய | 104 |
| அடிக்கடி | 4 |
| அடைந்துகணை | 97 |
| அணிகோமளா | 46 |
| அணிசிறிது | 9 |
| அதனுன்மறை | 77 |
| அந்தணவுன் | 54 |
| அம்புலிமறை | 52 |
| அம்புலியலர்த் | 78 |
| அயலொன் | 45 |
| அரன்சினமெ | 36 |
| அருளில்லவ | 43 |
| அலர்மெல்லணை | 44 |
| அவள்கவின் | 93 |
| அளிகள்சிறு | 2 |
| அன்பாருறவா | 100 |
| அனைவரும் | 31 |
| **இ** | |
| இக்கொடிது | 75 |
| இகலுமிரத | 121 |
| இடருஞ்சுகமு | 40 |
| இடையூறிலா | 7 |
| இதுமலர்நிறைந் | 48 |
| இரவுக்கிரவென் | 42 |
| இவ்வாசிரம | 8 |
| இவணடைந்த | 50 |
| இளகுந்தசை | 26 |
| இளையகாரரவு | 112 |
| இன்புறுவலாரி | 105 |
| இன்முகத்தினுய் | 116 |
| இன்னவள் | 78 |
| இனத்திற் | 9 |
| இனமொடன்ன | 95 |
| இனிப்பவும் | 87 |
| இனியநற் | 58 |
| **ஈ** | |
| ஈதிடை | 92 |
| **உ** | |
| உங்கார | 35 |
| உடல்புற்றி | 108 |
| உடற்கண் | 43 |
| உடன்முனஞ் | 21 |
| உயர்த்திகள் | 68 |
| உலவெப்பொ | 25 |
| உன்கணவனி | 119 |
| உன்குரவருக் | 62 |
| உன்சேய்மக | 118 |
| உன்மரபின் | 32 |
| உன்வயினு | 123 |
| உன்னவிதய | 104 |
| உன்னைவிடு | 42 |
| **எ** | |
| எதிர்நாலு | 64 |
| எதுபடை | 1 |
| எதுபுவிக் | 78 |
| எதுவிழிப் | 5 |
| எதையீரறு | 118 |
| எப்படிவிழிக் | 120 |
| எயில்வன் | 31 |
| எவ்வெது | 94 |
| எவணெவண் | 12 |
| எவன்பெயர் (பாயி) | i |
| எழுதுமெல்லிய | 95 |
| என்முகத்தை | 29 |
| என்னுரைக் | 19 |
| என்னெஞ்சு | 12 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| **ஏ** | |
| ஏயவினை | 106 |
| ஏரினிற் (பாயி) | iii |
| **ஒ** | |
| ஒக்கவுயிர் | 123 |
| ஒருகாரணமின் | 29 |
| ஒருகாரணமுமிலை | 111 |
| ஒருபேடை | 62 |
| **க** | |
| கயற்கொடி | 36 |
| கருமான் | 4 |
| கருவிளக்கி (பாயி) | ii |
| கலைவாணர் (பாயி) | iii |
| கற்பகநறுந் | 106 |
| கற்றுத்தெளி | 2 |
| கறுழ்நெகிழ்த் | 5 |
| கன்னிபிறனுக் | 65 |
| கனவிடத் | 97 |
| காதல்கூரமிழ் (பாயி) | ii |
| குடஞ்சுவலெ | 18 |
| குடிப்பிறப் | 81 |
| குடிவின் முன் | 65 |
| கூர்த்துள | 61 |
| கொம்பினுண் | 26 |
| **ச** | |
| சகுந்தலை | 57 |
| சஞ்சல | 12 |
| சதங்கொளு | 37 |
| சதமகன் | 103 |
| சாதகம் | 106 |
| சாந்தந் | 27 |
| சிவந்தவள் | 92 |
| சிறந்தணி | 88 |
| சுடர்மெய் | 71 |
| சுடரினிற் | 74 |
| சுயம்புதர | 107 |
| செயப்புகு | 33 |
| சொற்றொடை | 43 |
| **ஞா** | |
| ஞாயிறொரு | 67 |
| **த** | |
| தருங்காளி (பாயி) | ii |
| தருபயிர்க் | 52 |
| தரையிறங்கு | 107 |
| தலைவற்கு | 57 |
| தவறிச்செலு | 69 |
| தளிரெனும் | 11 |
| தன்குழவி | 67 |
| தன்னுடைமை | 74 |
| தனக்கிது | 105 |
| தனதுபாக்கிய | 80 |
| தாகமுள | 96 |
| தாய்முலை | 110 |
| தாலச்சிவிறி | 45 |
| திசைதொறுங் | 58 |
| திரிலோகநதி | 106 |
| தினந்தின | 102 |
| துன்னிவளை | 100 |
| தேருறுப்பு | 107 |
| **ந** | |
| நடைமுறை | 67 |
| நயத்தகு | 72 |
| நலத்தவ | 72 |
| நவம்வரு | 111 |
| நற்படிமை (பாயி) | ii |
| நன்றேகுறி | 6 |
| நீதமின்புறு (பாயி) | i |
| நின்பொருட் | 60 |
| நின்னிதழி | 117 |
| நின்னின்ப | 69 |
| நினைவுதொலை | 121 |
| நீதிமுறை | 70 |
| நீயிதயமே | 17 |
| நேய்பூசி | 70 |
| நேரிந்திர | 103 |
| **ப** | |
| பதிவிரதை | 119 |
| பல்லோர் (பாயி) | ii |
| பலர் மணந்து | 45 |
| பாசி சூழினும் | 10 |
| பிறந்தது | 77 |
| பிறிதின்விழி | 23 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| புகுமென் | 97 |
| புதிதன் களத் | 102 |
| புதுப்புது | 66 |
| புயனின்வளை | 48 |
| புரத்தல் | 103 |
| புரவிக்குர | 20 |
| புரிந்தசெயல் | 73 |
| புருகுலத்தலை | 63 |
| புருவின்மர | 6 |
| புற்கவளம் | 59 |
| புறந்தள்ள | 91 |
| புனல்வண் | 59 |
| பேண்பிறவி | 76 |
| பெருநீர் | 61 |
| பெருப்பெரிய | 110 |
| பெரும்பொருள் | 73 |
| பெற்றகணவ | 73 |
| போறைக்கனி | 71 |
| பொன்மலர் (பாயி) | 1 |
| **ம** | |
| மங்களத்தின | 56 |
| மங்களமுரு | 109 |
| மதனுணை | 17 |
| மதனேசுடு | 40 |
| மரமொன்று | 7 |
| மலர்க்கணை | 36 |
| மறைசொல் | 101 |
| மறைந்துபுரி | 77 |
| மன்றுணைவ | 96 |
| மன்னுயிர்ச் | 108 |
| மனமடங் | 62 |
| மனிதத்தெரி | 16 |
| மாசிலறி (பாயி) | ii |
| மாசினிரு | 115 |
| மாதவமு | 36 |
| மாந்தரு | 86 |
| மாயையோ | 92 |
| மாலைமேவு | 48 |
| மான்குழவி | 34 |
| மினல்பரப் | 80 |
| முதலிற்பிணை | 88 |
| முலையிற் குளிர | 46 |
| முலையிற்றடவு | 38 |
| முழுகவினி | 2 |
| முன்புரியு | 105 |
| முன்மலர் | 120 |
| முனிமாமகள்பின் | 18 |
| முனிமாமகளன்பு | 89 |
| முனிமாமகளணை | 80 |
| முனியொத்து | 46 |
| மேல்லெழில் | 116 |
| மென்முக | 39 |
| மேதினி | 113 |
| மொழியும் (பாயி) | i |
| மோவாமலரு | 29 |
| **யா** | |
| யாரிவண | 13 |
| யாரோ | 112 |
| யான்மூடனு | 79 |
| யான்விழைப | 24 |
| **வ** | |
| வசமின்று | 3 |
| வயந்தமதி | 84 |
| வருணத்தவர் | 30 |
| வருந்தவரு | 58 |
| வளிபொர | 8 |
| வன்சிலை | 85 |
| வணங்கொண | 37 |
| வனப்புள | 67 |
| வாயிலின் | 37 |
| வான்மீக (பாயி) | i |
| விண்சுர | 28 |
| விதிதன்மன | 28 |
| விரதாதிகள் | 69 |
| விருப்பிலள் | 73 |
| விரும்பியெ | 95 |
| விரும்பினள் | 23 |
| விரைந்தசெல | 20 |
| விழுவிடாதிர் | 6 |
| வேல்கென | 116 |
| வெள்ளிலை | 10 |

# சுலோக அகராதியும் மொழிபெயர்ப்பு முதலும்


| சுலோகம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|
| अक्लिष्टबाल | புகுமென் | 97 |
| अतः परीक्ष्य | அதனுன்மறை | 77 |
| अन्तर्गत | தனக்கிது | 105 |
| अन्तर्हिते | அம்புலிமறை | 52 |
| अद्यापि | அரன்சினமெ | 36 |
| अधरः किसलय | தளிரெனும் | 11 |
| अध्याक्रान्ता | அணைவரும் | 31 |
| अनवरत | உலவெப் | 25 |
| अनाघ्रातं | மோவாமலர் | 29 |
| अनिशमपि | கயற்கொடி | 36 |
| अनुकारिणि | உன்மரபின் | 32 |
| अनुमतगमना | இனியநற் | 58 |
| अनुयास्यन् | முனிமாமகள் | 18 |
| अनेन | யாரோவொருவன் | 112 |
| अपरिक्षत | அணிகோமள | 46 |
| अभ्यक्तमिव | நெய்பூசி | 70 |
| अभिजनवतो | புருகுலத்தலை | 63 |
| अभिनवमधु | புதுப்புது | 66 |
| अभिमुखे | என்முகத்தை | 29 |
| अभ्युन्नता | வாயிலின் | 37 |
| अमी वेदिं | திசைதொறுங் | 58 |
| अयं स ते | உன்னைவிடு | 42 |
| अयमर | சாதகம் | 106 |
| अर्थो हि | கன்னிபிறனுக் | 65 |
| अर्धपीत | தாய்முலைகள் | 110 |
| असंशयं | என்னெஞ்சு | 12 |
| अस्मान् साधु | மனமடங்கு | 62 |

| சுலோகம் | செய்யுள் | பக்கம் |
| --- | --- | --- |
| அஸாதர | மறைசொல்பல் | 01 |
| அஹநந்யஹநந்யா | தினந்தின | 102 |
| ஆவம்ஶுவஸநோ | உன்கணவனி | 119 |
| ஆவார உத்ய | நடைமுறை | 67 |
| ஆஜநந: | பிறந்ததுமுதல் | 77 |
| ஆவிர்பிநோதாஷாதஃ | கற்றுத்தெளி | 2 |
| ஆஶ்ரக்ஷ்யதிம்த | ஒருகாரணமுமிலே | 111 |
| இத: ப்ரத்யா | புறந்தள்ளவு | 91 |
| இதம் கிஶ | அணிசிறிது | 9 |
| இதிநந்ய | அயலொன் | 45 |
| இதிபிபிநோர: | இரவுக்கிரவென் | 42 |
| இதிவந்த | சுடரினிற் | 74 |
| இதிவஹித | வெள்ளிலே | 10 |
| ஈஷஷ்ணாஞ்ஜிதாநி | அளிகள் சிறு | 2 |
| உதஜித | புற்கவளங் | 59 |
| உத்ருஜ்ய | முலேயிற்குளிரத் | 46 |
| உத்க்ஷ்ணோ: | பெருநீர்வரவை | 61 |
| உதேதி வர்ஷம் | முன்மலர் | 120 |
| உஜ்ஜிநேதக | சொற்றொடை | 43 |
| உபோஶபா | தேருறுப்புருளே | 107 |
| ஏநோகேஷ்த்ரு | ஈதிடை | 92 |
| ஏவஶாஶ்ரு | இளேயகாரரவு | 112 |
| ஏஷ க்ஷீரம் | புதிதுன்களத் | 102 |
| ஏஷா கவலஜ | தாகமுள | 96 |
| ஏஷாவி வ்ருஜேண | ஒருபேடையிது | 62 |
| ஔத்கக்ய | உயர்த்திகள் | 68 |
| க: வராவே | யாரிவண | 13 |
| கஷம் நத் தம் | அவள்கவின் | 93 |
| க வயம் க | மான்குழவி | 34 |
| கா கஷா | உங்கார | 35 |
| காமம் வ்ருயா | விரும்பினள் | 23 |
| காமம் ப்ரத்யா | சு[illegible]ரமெய் | 71 |
| காவிதஃ | முனிமாமகளிணே | 80 |
| காயர்ஷா நெஷகத | இனமொடன்ன | 95 |

| ஶ்லோகம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|
| கிம் தாவத் வ்ரதிநாம் | விரதாதிகள் | 69 |
| கிம் ஶீதலை: | தாலச்சிவிறி | 45 |
| கிம்க்ருதகார்யத்வே | புரிந்தசெய | 73 |
| கோதாயதி | நலத்தவ | 72 |
| காஞ்சஞாநெந்ர்வ | அம்புலியலர்த் | 78 |
| காம்யாம்ஹாஸி: | வளிபொர | 8 |
| க்ருஷ்ணஸாரே | கருமான் | 4 |
| க்ருத்யயோர்பின்ந | செயப்புகும் | 33 |
| க்ருதம் ந | மன்றுணைவ | 95 |
| க்ருதா: | நேரிந்திரனி | 103 |
| க்ருதாபிமர்ஶாம் | தன்னுடைமை | 74 |
| ஶமப்ரதாநேஷு | உடன்முனஞ் | 21 |
| ஶாஸ்த்ரம் தாம் | கொம்பினுண் | 26 |
| ஶாம்யவேணீ | முனியொத்து | 46 |
| ஶ்ரீவாஸம் ஶாஸிதாரம் | அடிக்கடி | 4 |
| ஷஷ்டாம்ஶம் | சஞ்சல | 12 |
| ஸிதேது நிவேஶ்ய | விதிதன்மன | 28 |
| ஸுக்ஷிதம் ஹரிஷிகேத / ஸூதாஸுர...ஷ | *வயந்தமதி | 84 |
| ஸுக்ஷிதாநாம் | மாந்தரு | 86 |
| ஜந யஸ்ய | புருவின்மர | 6 |
| ஜ்யோதி | அடங்கிய | 104 |
| ஜ்வாநே தபஸோ | மாதவமு | 36 |
| ததாஸ்ய | நன்றேகுறி | 6 |
| தஸ்யைஷா ஸ்வதஃ | இன்னவள் | 78 |
| தபதி தநு | உடற்கண் | 43 |
| தவ கஸ்மை | மலர்க்கணை | 36 |
| தவ ந ஜாநே | அருளில்லவ | 43 |
| தவ ஸ்வஸ்திதி | உன்வயினு | 123 |
| தவ ஸூசரித | சிவந்தவ | 92 |
| தஸ்யாம் | இதுமலர்நிறைந் | 48 |
| ஸ்வந்தி: | உன்னலிதய | 104 |


*இருபாட பேதத்தையும் தழுவியது

| சுலோகம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|
| ஜவஜஸி | வன்சிலையெடு | 85 |
| ஜவஜஹஸிதாம் | நயத்தகு | 72 |
| த்ரைஸ்ரோதஸம் | திரிலோகநதி | 106 |
| த்வராவாத | விரைந்துசெல | 20 |
| துரகவரஹத: | புரவிக்குர | 20 |
| ஏகஹேதுநா | ஒருகாரணமின் | 29 |
| ஏபிர்நவைவ | அடைந்துகணை | 97 |
| திஷ்ட்யா பதிவ்ரதா | பதிவிரதை | 119 |
| தேஷ்வேந | அந்தணவுன் | 54 |
| ந வை ந வை | விழவிடாதிர் | 6 |
| ந நயிதம் | யான்விழைப | 24 |
| நியயவஸி | தவறிச்செலு | 69 |
| நீவாரா: | மரமொன்று | 7 |
| நேத்ரம் | எயில்வன்கணை | 31 |
| பரிக்ருஹ | பலர்மணந்து | 45 |
| ப்ரஜாபாலக | கனவிடத்திவள் | 97 |
| ப்ரஜா: ப்ரஜா: | தன்குழவி | 67 |
| ப்ரத்யாதிஷ்ட | சிறந்தணி | 88 |
| ப்ரயம் ஸாரம் | முதலிற்பிணை | 88 |
| ப்ரயோபக்ருதம் | முன்புரியு | 105 |
| ப்ரோஹ்ய | நவம்வரு | 111 |
| ப்ரவத்தாம் | ஒக்க வுயிர் | 123 |
| ப்ராணாநாம் | மன்னுயிர்ச் | 108 |
| ப்ராஹை: | எதையீரறு | 118 |
| பாதம் | வருந்தவரு | 58 |
| பேத்ரஸ்ய | உன்சேய்மக | 118 |
| ப்ருஷ்டா | இடருஞ்சுகமு | 40 |
| பாஷேண | வெல்கென | 116 |
| ஸவ ஹ்ருதய | நீயிதயமே | 17 |
| ஸவஜ்ஞீ | பொறைக்கணி | 71 |
| ஸவேஷ்ட | மேதினி | 113 |
| ஸாந்த: | ஞாயிறெரு | 67 |
| ஸம்க்ஷா விராய | எதிர்நாலு | 64 |
| ஸ்வேநாராயாய | மங்களமுரு | 109 |

| ச்லோகம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|
| உத்யுவ | மறைந்துபுரி | 77 |
| உஹதேஷஜேஷா | பெருப்பெரிய | 110 |
| உஹாஹாஹ | நீதிமுறை | 70 |
| உாநஷீஷ | மணிதத்தெரிவை | 16 |
| உக்ஷ | கறுழ்நெகிழ்த் | 5 |
| உநிஸாதா | முனிமாமகளன்பு | 89 |
| உஹராமஷி | புயனின் வளைங் | 48 |
| உஷ்ஸ | யான் மூடனு | 79 |
| உஷ்ஹம்த்ரீ | பெரும்பொருள் | 73 |
| ஔஷஹ | இளகுந்தசை | 26 |
| ஔஹாநயா | நின்னிதழி | 117 |
| யயா ஹஜா | எப்படி விழிக் | 120 |
| யதா யதா | எவணெவண் | 12 |
| யதோகொ | எதுவிழிப்பட | 5 |
| யதி யயா | எதுபுவிக் | 78 |
| யதிஷ்டி | வருணத்தவர் | 30 |
| யத்தாய | எவ்வெது | 94 |
| யயாதரிவ | தலைவற்கு | 57 |
| யஸ்ய கவயா | கூர்த்துள | 61 |
| யாதேக | தருபயிர்க் | 52 |
| யா ஸ்ருஷ்டி | எதுபடைத்தவன் | 1 |
| யாஸ்தி | சகுந்தலை புறஞ் | 57 |
| யெந யெந | அன்பாருறவா | 100 |
| யோ ஹநிஷ்தி | புரத்தல் | 103 |
| ரஜெந | இகலுமிரத | 121 |
| ரம்ய ஜெஷி | இனிப்பவும் | 87 |
| ராணி | வனப்புள | 67 |
| ராஜா | புனல்வண் | 59 |
| ராஸெவா | இடையூறி | 7 |
| வசீகாயநி | உடல்புற்றி | 108 |
| வஸெந | மாசினிரு | 115 |
| வாஹந | என்னுரைக்குறை | 19 |
| விஷயஷீ | இவணடைந்த | 50 |
| விதி | கற்பகநறுங் | 106 |

| சுலோகம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|
| வ்யூஹ்யைவ | சதங்கொளு | 37 |
| வ்யபோஹ்ய | இக்கொடிது | 75 |
| வைவர்ணவஸம் | மதனுணை | 17 |
| ஶக்ரோரவிம்ஶ | வனங்கொ | 37 |
| ஶைப்யாயா நஷ்ட | சாந்தந்தலை | 77 |
| ஶைலேஷ்வபி | குடிலின் முன் | 65 |
| ஶாந்தஶ்ச | இவ்வாசிரம | 8 |
| ஶாகாஶ்வஸி | நினைவு தொலை | 121 |
| ஶ்ருத்வாஞ | இனத்திற் | 9 |
| ஶ்ருத்வாபிஷவ | உன்குரவருக் | 62 |
| ஶைஶவா நாம் | தரையிறங்கு | 107 |
| ஸங்கல்பிதம் | நின்பொருட்டு | 60 |
| ஸவ்யே ஸ்தூ | சதமகன் | 103 |
| ஸதீஷ்வபி | பெற்ற கணவ | 73 |
| ஸம்ஶ்லிஷ்ட கண்ட ஸஹ | அலர்மெல்லணை | 44 |
| ஸரஸிஜம் | பாசி சூழினும் | 10 |
| ஸம்ரோஸாவிதை | துன்னிவளை | 100 |
| ஸஹஜம் கில ய | குடிப்பிறப்பொ | 81 |
| ஸ்தந | முலையிற்றடவு | 38 |
| ஸர வனவ | மதனே சுடு | 40 |
| ஸ்வஸ்தவ | நின்னின்பமே | 69 |
| ஸ்வஸ்தோவா ந | மாயையோ | 92 |
| ஸஞ்ஜ்ஞோம் | குடஞ்சுவலெ | 18 |
| ஸாயம் தரெந | மாலைமேவு | 48 |
| ஸா நிம்ஶந்தீ | தனது பாக்கிய | 80 |
| ஸாக்ஷாத்ரியாம் | விரும்பியெதிர் | 95 |
| ஸ்வாயம்பவா | சுயம்புதரு | 107 |
| ஸிஞ்சந்தி | ஏயவினை | 106 |
| ஸிமம் | பிறிதின்விழி | 23 |
| ஸிஞ்ஜானாம் ம்ருஷி | எழுதுமெல்லிய | 95 |
| ஸ்த்ரீணாமஶிக்ஷித | பெண்பிறவியிற் | 76 |
| ஸ்த்ரீஸம் | மினல்பரப் | 80 |
| ஸ்வவஸாரவஸ்ய | இன்புறுவலாரி | 105 |

| ஶ்லோகம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|
| ஸாதுநா | மெல்லெழில் | 116 |
| ஸாஹஹஸமிஶ்ரா | முழுகவினி | 2 |
| ஸாரயாவதி | விண்சுர | 28 |
| ஸ்ருதிஹிஞு | இன்முகத்திறைய் | 116 |
| க்ஷாமக்ஷாம | மென்முக | 39 |
| க்ஷௌமம் | மங்களத் | 56 |


---

PRINTED BY R. NARAYANASWAMI IYER
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE, MADRAS.